அறைவு 03 இயம் 42 May 02-08, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

தமிழ், சிங்கள அரசியல் தலைமைகளால் மீண்டும் ஏமாற்றப்பட்டனர் சம்பூர் மக்கள்

40 நாட்கள் கெடு நிறைவு




# அனல்மின் நிலையத்தை எதிர்த்து சாத்வீகப் போர் ஆரம்பம்




திருகோணமலையில் உருவாக்கப்படவுள்ள அனல் மின்நிலைய உருவாக்கத்தை எதிர்த்து இயங்கி வரும் தன்னார்வ அமைப்புக்கள் தமது முதலாவது சாத்வீகப் போராட்டத்தை கடந்த 30ம் திகதி சம்பூரில்ஆரம்பித்துள்ளன.

அனல் மின் நிலையப் பிரதேசத்தை சுற்றிப் பல பில்லியன் ரூபாய்கள் செலவில் வேலி அடைப்பதற்கு பொருத்தமான ஒப்பந்தக்காரர்களை மின்சாரசபை கோரியிருந்தது.

இந்நிலையில், நேற்று ஒப்பந்தக்காரர்களுடன் கூட்டமொன்று நடைபெறவிருந்ததால் அன்றைய தினத்தில் இந்த சாத்வீகப் போராட்டம் நடைபெற்றது.

பசுமை இயக்கம் திருகோணமலை என்ற அமைப்பின் 17

"கங்குவேலி படுகாடு காணிக்கச்சேரியை நடத்த தீர்மானம்"

## சட்ட உதவி ஆணைக்குழுவின் நடவடிக்கை

திருகோணமலையின் கங்குவேலி படுகாடு மக்களின் காணிப் பிரச்சனையை தீர்ப்பதற்கான நடவடிக்கையை திருகோணமலை மற்றும் மூதூர் சட்ட உதவி ஆணைக்குழுவினர் நெறிப்படுத்தி உள்ளனர்.

கடந்த 29ம் திகதி திருகோணமலை மாவட்டச் செயலாளரைச் சந்தித்த சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலர்கள் படுகாடு வயல் நிலம் தொடர்பான ஆவணங்களுடன் மாவட்டச் செயலாளருடன் பேச்சு வார்த்தையை நடாத்தியுள்ளனர்.

இதனையடுத்து மாவட்டச் செயலாளர் அடுத்துவரும் ஒரு 17

## "சம்பூர் காணிகளை விடுவிக்கும் கடிதம் சனாதிபதியிடம்"



திருகோணமலை சம்பூர் பகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்காக சுவீகரிக்கப்பட்ட எண்ணூற்றுப் பதினெட்டு ஹெக்டேயர் காணிகளை விடுவிப்பதற்கான கடிதம் சனாதிபதியிடம் அனுப்பப்பட்டுள்ளதாக சம்பந்தர் தெரிவித்துள்ளார்.


### சம்பந்தர் தெரிவிப்பு

காணியை விடுவிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு கோரும் இக்கடிதம் சட்டமா அதிபர்..... 17

## திருகோணமலையில் தமிழர்களின் இரண்டு மேதின கூட்டங்கள்

## "சிங்கக்கொடி என் விருப்பத்திற்குரிய கொடி அதை நான் ஏற்றுவேன்"

சம்பந்தர் கூறியதாக வலம்புரி செய்தி




சிங்கக்கொடியை முன்னரும் பலதடவை ஏற்றியுள்ளேன். அது எனது விருப்பத்திற்குரிய கொடி. இனியும் அதனை ஏற்றுவேன் அதனை யாரும் தடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்தை அடுத்து




தொழிற்சங்கங்களின் மேதினப் பேரணி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினப் பேரணி

திருகோணமலையில் இரண்டு தமிழ் அணிகளால் மேதினக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தொழிற்சங்கங்கள் நான்கு இணைந்து மலைமுரசு ஆசிரியரின் தலைமையில் மேதின பேரணியும் கூட்டமும் காலை வேளையில் நடைபெற்றுள்ள அதே வேளை மாலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து மக்கள் பேரணியும் மேதினக் கூட்டமும் நிகழ்ந்துள்ளது.

இவ்விரு மேதினப் பேரணிகளும் திருமலை சிவன் கோவிலில் இருந்து ஆரம்பமாகி..... 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# பொறுமை காக்கலாமா?

தமிழ் மொழி என்பது தமிழ்த் தேசியத்தின் தூண்கள் தாங்கி நிற்கின்ற அடித்தளம் என்பதே உண்மை.

ஆனால் எமது மொழியாகிய தமிழ் தொடர்பாகக் கடந்த வாரங்களில் நிகழ்ந்த சில நிகழ்வுகள் பெரும் கவனயீர்ப்புக்கு உள்ளாகி-யிருந்தன.

தந்தை செல்வாவின் ஞாபகார்த்த உரையினை வழங்கிய முன்னாள் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தனது தந்தை சிங்களவர்களுக்கு உரிய இடத்தை கொடுப்பதற்-காகவே தனிச் சிங்களச் சட்டத்தைத் தனது தந்தையார் கொண்டு வந்ததாக செல்வநாயகம் நினைவுப் பேருரையில் குறிப்பிட்டு இருக்கிறார். காலனியாதிக்கத்தின் பின்னர் ஸ்ரீலங்கன் எனும் அடையாளத்தை உறுதிப்படுத்த சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக கொண்டு வரப்பட வேண்டி இருந்தது எனத் தெரிவித்த அவர் தமிழுக்கு உரிய இடம் வழங்கப்படாதது வேண்டுமென்றால் பிழையாக இருக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

அடுத்து 19வது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்த போது அதன் தமிழ்ப் பிரதி வழங்கப்படாததைக் கண்டித்துப் பேச முற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை "வாயை மூடிக்கொண்டு இரு" என்று தெரிவித்திருந்தார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க.

தேசிய நிலையில் இவ்வாறு தமிழ் மொழி தொடர்பான புறக்கணிப்புக்கள் பதிவான வேளையில் கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபமானது ஆரம்பத்தில் தனிச் சிங்களத்தில் வெளியாகியிருந்தது. அவ்வாறே கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் கலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் நிறுத்தப்பட்ட பதாதைகளில் தமிழ் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இந்த நான்கு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மொழியைப் புறக்கணிப்பது என்பதை பேரினவாதம் முன்னெடுக்கும் போது அங்கு தமிழர்களும், தமிழ்த் தலைமைகளும் முதல் மூன்று சந்தர்ப்பங்களிலும் வாளாவிருந்ததைக் காண முடிந்ததுடன் இறுதிச்சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் விளையாட்டு விழாவில் இருந்து வெளிநடப்புச் செய்ததையும் காணமுடிந்தது.

தமிழ் மொழியின் புறக்கணிப்புக்களைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாமா? என்பதையிட்டுச் சிந்திக்க ண்டியதொரு நிலையில் நாம் இன்று இருக்கின்றோம்.

இக்கேள்விக்கான பதிலாக நாம் தந்தை செல்வாவின் நினைவுரையில் சந்திரிக்கா அம்மையாரின் சிங்கள மொழியாக்கம் எவ்வளவு முக்கியமானது என்பதைக் குறிப்பிட்டதை நினைவுபடுத்தலாம். சிங்களவர்களுக்கு உரி இடத்தைக் கொடுக்க வேண்டுமானால் சிங்கள மொழிக்கு உரிய இடத்தை வழங்குவதன் ஊடாக அதனைச் செய்து விடலாம் என அவர் தெரிவித்துள்ளமையானது மொழிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டால் தானாகவே அம் மொழியைப் பேசுகின்ற இனம் முன்நிலை பெற்றுவிடும் என்பதைத் தெளிவற முன்நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் எமது மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டால் அவ்வாறு வழங்கப்படும் முன்னுரி-மையானது தானாகவே தமிழர்களை முன்நிலைப்படுத்திவிடும் என்பதை பேரினவாதம் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கும் நிலையில் நாம், எமது மொழி எமக்கு முன்பாகவே புறக்கணிக்கப்படும் பொழுது வாழாவிருக்கலாமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியவராகின்றோம். சிந்திப்போமா?

### ஈச்சந் தீவில் காலங்கடந்த திருமணப்பதிவுகள்

## சட்ட உதவி ஆணைக்குழுவின் நடவடிக்கை

கிண்ணியா பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட ஆலங்கேணி ஈச்சந்தீவு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட ஆலங்கேணி கிராமத்திலே பல குடும்பங்கள் பதிவுத்திருமணம் செய்யாமல் பல ஆண்டுகளாக வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடத்து அங்கு சட்ட உதவி ஆணைக்குழுவின் திருகோணமலை மையத்தினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கின் போது பதிவுத் திருமணம் செய்யாத பலர் தமது பிள்ளைகளுக்கான பிறப்புப் பதிவினை மேற்கொள்ள முடியாமல் பல்வேறுபட்ட துன்பத்திற்கு ஆளாவதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து தேர்வு செய்யப்பட்ட எட்டுக் குடும்பங்களுக்கான திருமணப்பதிவினை மேற்கொள்ளும் கடந்த 22ம் திகதி கிண்ணியா பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் முன்நிலையில் பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணியளவில் நடைபெற்ற இத் திருமணப் பதிவு நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள் உட்பட சட்ட உதவி ஆணைக்குழு திருகோணமலை மையத்தின் பணிப்பாளர் மற்றும் சட்ட ஆலோசகர், திட்ட அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அன்றைய தினமே அவர்களுக்கான திருமணப்பதிவுச் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் திருமலைப் பணியகம் இதற்கான செலவினை சுவிஸ் அரசாங்கம் தந்துதவியது என்றும் தெரிவித்தது.

## பெற்றோரின் போராட்டத்தால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வருகை

"கிண்ணியா கோட்டக் கலவி வலயத்திற்குட்பட்ட ஈச்சநகர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் குறைபாடுகள் தொடர்பாக மக்கள் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றதை அடுத்து வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைய கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அப்பாடசாலைக்கு உடனடியாக வரவழைக்கப் பட்டுள்ளார்.

இதனையடுது நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மக்களால் பாடசாலை அதிபரை உடனடியாக இடமாற்ற வேண்டும், வகுப்புக்களுக்கே போதுமான ஆசிரியர்கள் இல்லாதிருப்பதால் அவர்கள் நிமிக்கப்பட வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மீண்டும் உருவாக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.



இதனையடுத்து குறித்த விடயங்களை ஆராய்ந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க குழவோன்றை அமைக்குமாறு கடடளையிட்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர் அக்குழுவின் அறிக்கையினை ஒரு வாரத்திற்குள் தமக்கு அனுப்புமாறும் கோட்டக் கல்வியதிகாரியை கோரியுள்ளார்.

(அப்துல் ஹலீம்)

## மாவட்ட இந்து இளைஞர் பேரவையை அமைக்கும் கூட்டம்

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் புதிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பெருந்தெரு விக்னேஸ்வரா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர் மன்றங்களை புனரமைத்துச் செயற்படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாகவே இப் பொதுக்கூட்டம் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளருடய அறிவுறுத்தலுக்கு அமைய, திருமலை நகரப் பிரதேசச் செயலாளர் பிரிவின் கலாசார உத்தியோத்தர் திரு கஜேந்திரன் இந்த அறிவிப்பை மேற்கொண்டுள்ளார்.

ஆர்வமுடைய அனைவரையும் இக்கூட்டத்தில் நலந்துகொள்ளும் படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(விது)

## ரோட்டறி கழகத்தின் போசாக்கு விசுக்கோத்துத் திட்டம்

ஐந்து வயதுக்கு குறைந்த போசாக்கு குறைபாடு குழந்தைகளுக்கு போசாக்கு விசுக்கோத்து வழங்கும் திட்டத்தை இம்மாதம் 28ஆம் திகதி முதல் திருகோணமலை ரொட்டறி கழகம் முன்னெடுத்துள்ளது.

போசாக்கு குறைபாடுடைய குழந்தைகளுக்கு மூன்று மாதங்களுக்கு இவ் விசுக்கோத்துக்கள் வழங்கப்படவுள்ளன.


திருகோணமலையில் 377 குழந்தைகளும், முல்லைத்தீவில் 237 குழந்தைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான தொடக்க வைபவம் கடந்த 28.04.2015 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு பாட்டாளிபுரம் வைத்தியசாலையில் நடைபெற்றது.

அரச அதிகாரிகளும் ரோட்டறி கழகத் தினரும் கலந்து கொண்டனர்

### சுற்றுநிருபங்கள்

## தமிழில் அனுப்பப்படும்



பாடசாலைகளுக்கான சுற்று நிருபங்களும், அறிவித்த-ல்களும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிக- ளிலும் அனுப்பப்படும் என கிழக்கு மாகாண கல்வியமைச்சர் சி.தண்டாயுதபாணி உறுதி அளித்துள்ளார்.

சமீபத்தில் அனுப்பப்பட்ட சுற்று நிருபம் சிங்கள மொழியில் இருந்ததால் ஏற்பட்ட சர்ச்சை குறித்து பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் கூறினார்.

மட்டு- இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கான சுற்று நிருபங்களை வெளியிடும் போது கல்வி அமைச்சும், கல்வித் திணைக்களமும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கிழக்கின் அபிவிருத்திக்கு உதவுவதாக உறுதி

பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் கலாநிதிசர்ப்ராஸ் அகமட் கான் சிப்ரா கடந்த திங்கட்கிழமை (24) திருக்கோணமலைக்கு வருகை தந்திருந்த போது திருகோணமலை வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் சம்மேளனத்தினரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

திருக்கோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திதிட்டங்கள் மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமாக கலந்துரையாடலில் தூரகத்தின் ஊடாக ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட உள்ளதாகவும் அதற்கு மாகாண மற்றும் மத்திய அமைச்சுக்களின் உதவிகள் கோரப்படவுள்ளதாகவுகவும் ஸ்தானிகர் கூறியுள்ளார்.

புதிய முதலீடு மற்றும் தொழில்துறைக-ளுக்கான சந்தர்ப்பங்கள் சம்பந்தமாகவும அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வாழ்வாதார திட்டங்களுக்கு தூதரகத்தின் ஊடாக உதவி செய்ய முடியும் என்றும் அதற்கான திட்டமுன் மொழிவுகளைத் தமக்கு அனுப்பி வைக்குமாறும் கூறினார். (கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதின ஊர்வலம்

மட்டக்களப்பு நிருபர்




சர்வதேச தொழிளாலர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின நிகழ்வானது கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையிலிருந்து பேரணியாக மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி வழியாக கல்லடி உப்போடை துளசி மண்டபத்தினை சென்றடை-ந்தது.




இதன்போது பேரணியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும், அலங்கரி-க்கப்பட்ட வாகனத்தினையும் படங்களில் காணலாம். விழ விழ எழுவோம் எனும் சுலொகம் தாங்கிய வாகனம் முன்னாள் செல்ல தொடர்ந்தது அவர்களின் ஊர்வலம்.

# மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## வேலையற்ற பட்டதாரிகளை பதியும் படி கோரிக்கை




கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளை உடனடியாக பதியுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. பதிவதற்காக http://ephrims.lk/Graduaes/ எனும் இணையதள முகவரிக்கு பிரவேசித்து தங்களினுடைய தேசிய அடையாள அட்டையை இலக்கத்தை பதிந்து தொடர்ந்து வரும் விண்ணப்பப் படிவத்தில் தங்களது சரியான தகவல்களை பதியுமாறும் பின்னர் அப்பிரதியில் கையொப்பமிட்டு கிராமசேவை-யாளரின் மூலம் உறுதிப்படுத்தி Deputy chief Secretary (Personal and training), Kanniya road, varothayanagar, Trincomalee எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

## கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் என்னிடம் முறையிடுங்கள்

புதிய நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்றதை தொடர்ந்து மத்திய கிழக்கு நாட்டுக்கு தொழில்வாய்ப்-பினைப் பெற்றுச்சென்ற மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த பல இளைஞர்கள் நாடு திரும்பியிருந்தனர். மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்த நிலையில் நாடுதிரும்பியபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்-பட்டுள்ளவர்களின் உறவினர்களை தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் நடைபெற்ற சட்டத்துக்கும் சமாதானத்துக்குமான அமைச்சின் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கல்வியிலேயே முன்னேற்றம் தேவை

அகில இலங்கை ரீதியில் அகில இலங்கை தமிழ் மொழி தின போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி கோட்டங்கள் மத்தியிலும் தமிழ் தின போட்டிகள் நடாத்தப்பட்டுவரு-கின்றன. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் க.பாஸ்கரன், தமிழ் சமூகம் கல்வியில் முன்னேறவேண்டுமானால் ஒவ்வொரு பாடசாலையும் கல்வியில் வளர்ச்சிப்போக்கை கொண்டிருக்க வேண்டும் என தெரிவித்தார்.

## வாழ்வாதாரம் - வளர்ந்தோருக்காக

கடந்த புதன்கிழமையன்று வளர்ந்தோர் சிரேஸ்ட பிரஜைகளுக்கான அமைப்பிற்கு சுழற்சி முறையிலான கடன்திட்டம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வளர்ந்தோர் அமைப்பில் அங்கத்தவர்களாக 17 பேர் உள்ளடங்கி இருப்பதாகவும், அர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து-வதற்காகவே இத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.



## இலவச பாதணிகள் வழங்கி வைப்பு

எருவில் பிரதேசத்தில் உள்ள எருவில் கண்ணகி மகா வித்தியாலயம் மற்றும் எருவில் கோடைமேடு நவசக்தி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் 65 வறிய மாணவர்களுக்கு இலவசமாக பாதணிகள் வழங்கப்பட்டன. எருவில் இளைஞர் கழகம், கண்ணகி விளையாட்டுக்கழகம், உதயநிலா கலைக்-கழகம் இணைந்து இந்த பாதணிகளை மாணவர்களுக்கு வழங்கின. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், களுவாஞ்சிகுடி பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் இ.வேணுராஜ் மற்றும் விளையாட்டுக் கழக தலைவர்கள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



## அட்டகாசத்தில் யானைகள்



வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காக்காச்சிவட்டை கிராமத்தினுள் நேற்று வெள்ளி அதிகாலையளவில் புகுந்த காட்டு யானைகள், அங்குள்ளவற்றுக்கு சேதம் விளைவித்துள்ளதுடன் வீடு உட்பட பயன்தரு மர வகைகளுக்கு சேதம் விளைவித்துள்ளது. வீட்டின் பின்புறம் மரம் முறியும் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது, நான்கு யானைகள் எமது வீட்டு எல்லைக்கு உட்பட்ட தென்னை மரங்கள், பப்பாசிமரம் போன்ற-வற்றை முறித்துக் கொண்டிருந்தன. உடனடியாக நாங்கள் வீட்டிலிருந்து வெளியேறி அயல் வீட்டுக்கு சென்றோம். இதன் பின்னர் அந்த யானைகள் எமது வீட்டையும் சேதப்படுத்தியுள்ளது. இது இரண்டாவது தடவையாக இடம்-பெற்றுள்ளதாக சேதத்துக்குள்ளான வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

## 10வது நினைவு தினம் அனுஷ்டிப்பு




ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் பத்தாவது ஆண்டு நினைவு தினம் முதன்முறையாக அவரது பிறந்த ஊரான மட்டக்களப்பில் கடந்த 29.04.2015 அன்று வடக்கு கிழக்கில் உள்ள ஊடக அமைப்புகள், இலங்கை சுதந்திர ஊடக இயக்கம், ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் எவ்வேளையிலும் கொல்லப்-படலாம் என்ற நெருப்பாற்று நிலைமையின் கீழ் ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் தனது ஊடகப்பணியை மேற்கொண்டு-வந்ததாக வீரகேசரி குழுமத்தின் ஆலோசகர் வி.தேவராஜ் இதன்போது தெரிவித்தார்.

## வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

கடந்த புதன்கிழமை “சிப்தொற” உயர் கல்விக்கான புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரம் பயிலும் 37 மாணவர்கள் “சிப்தொற” புலமைப் பரிசில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். சமூர்த்தி நன்மை பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாய் விகிதம் இரண்டு வருடங்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன.

## கூரையை பிரித்து திருட்டு

ஏறாவூர் பகுதியிலுள்ள மிச் நகர் கிராமத்தில் நள்ளிரவில் வீட்டுக் கூரையை உடைத்து உள் நுளைந்த திருடர்கள், அங்கிருந்த பணம், நகைகளை திருடிச்சென்றுள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். மிச் நகர் கிராமத்தைச் சேர்ந்த காசிம்பாபா காதர் முஹைதீன் என்பவரின் வீட்டிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதிகாலை படுக்கையில் இருந்தவாறு அலைபேசியை தேடியபோது அது காணாமல்போயிருந்ததாகவும் எழுந்து பார்க்கும் போது, கூரை உடைந்திருப்பதை கண்டதாகவும் குறித்த வீட்டிலுள்ளோர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பயிற்சி நிலையம் திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகரில் சர்வதேச தரத்திலான ஆடைத் தொழிற்சாலைக்குரிய பயிற்சி நிலையம் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆடை உற்பத்தி நிறுவனமான ஹமீடியாஸ் மற்றும் கிழக்கிலங்கைப் பொருளாதார அபிவிருத்திப் பேரவை ஆகியவை கூட்டிணைந்து இந்த ஆடைத்தொழிற்சாலையை இயக்க-வுள்ளன.

## தபாலக ஊழியர்களின் கவனயீர்ப்புப் போராட்டம்

மட்டக்களப்பு பிரதான தபாலக ஊழியர்கள் கடந்த 29.04.2015 அன்று நண்பகல் 12.00மணியவில் தபாலகத்துக்கு முன்பாக வந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தபால் திணைக்களத்தில் அண்மைக்காலமாக காணப்படும் சம்பள முரண்பாடு, நிர்வாக ரீதியான முரண்பாடுகளை நீக்ககோரியே அஞ்சலி தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அடையாள கவனயீர்ப்பு போராட்டம் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துக்களை மீளப்பெற நடவடிக்கை

அரச சொத்துக்களை மீளப் பெறுவதற்கான விசேட ஜனாதிபதி செயலணியொன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், கடந்த வியாழக்கிழமை நியமிக்கப்பட்டது. இந்த செயலணியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வொன்றும் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த விசேட ஜனாதிபதி செயலணியில் 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## கடவுச்சீட்டில் மாற்றம்

கைவிரல ரேகையை மையப்படுத்திய புதிய கடவுச் சீட்டும் இலத்திரனியல் அடையாள அட்டையும் அடுத்து வரும் இரு ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் எம்.என்.ரணசிங்க குறிப்பிட்டார்.

இலத்திரனியல் அடையாள அட்டைக்கான வேலைகள் ஏற்கனவே ஆட்பதிவு திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய கடவுச் சீட்டை அறிமுகம் செய்யும் விதமாக அனைத்து வேலைப்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## சோமவன்சவின் உண்ணாவிரதம்



மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று அதாவது ஜனவரி மாதம் 9ஆம் திகதி இடம்பெற்றதாக கூறப்படும் சூழ்ச்சிகள் குறித்து விசாரணைகளை நடத்துமாறு கோரியே அவர் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளார்.

## பிரினைவாதம் இருக்கும்வரை நிறைவேற்றதிகாரம் தேவை

நாட்டின் தேசிய அரசியல் அழிக்கப்பட்டமைக்கு காரணம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரே என பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார். நாரஹென்பிட்டியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தேசிய அரசியல் மேலும் அழிவடைவதற்கு இடமளிக்க கூடாது.

பிரிவினைவாதம் உள்ள வரை நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் காணப்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போதைப்பொருள் கடத்தல்

இந்திய மீனவர்கள் தங்கம், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி செல்வதால் இலங்கை கடலோர காவல்படைக்கும் நமது மீனவர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. இதற்கு இந்திய கடலோர காவல்படை பொறுப்பேற்க முடியாது என உயர் நீதிமன்றத்தில் இந்திய கடலோர காவல்படை துணை இயக்குநர் ஜெனரல் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## மலைமுரசு தேசிய செய்திகள்

## மூன்று மாத விடுமுறை

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் எதிர்க்கட்சி எம்.பி.யுமான பசில் ராஜபக்ஷவிற்கு பாராளுமன்றம் 3 மாத காலத்திற்கு விடுமுறை வழங்கியது.

எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, முன்னாள் அமைச்சரும் எம்.பி.யுமான பசில் ராஜபக்ஷவுக்கு 28.04.2015 தொடக்கம் மூன்று மாத கால விடுமுறையை வழங்க வேண்டுமென பிரேரித்தார். இதனை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரட்ன வழிமொழிந்தார். பசில் ராஜபக்ஷவுக்கு 3 மாத கால விடுமுறை வழங்கப்படுவதற்கு சபை எதிர்ப்புத் தெரிவிக்காததையடுத்து அவருக்கு 3 மாத காலத்திற்கு பாராளுமன்றத்திற்கு தோற்றாதிருப்பதற்கான விடுமுறை வழங்கப்பட்டது.



## சோமவன்சவின் உண்ணாவிரதம்

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று அதாவது ஜனவரி மாதம் 9ஆம் திகதி இடம்பெற்றதாக கூறப்படும் சூழ்ச்சிகள் குறித்து விசாரணைகளை நடத்துமாறு கோரியே அவர் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளார்.

## ஐவர் கைது

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பாரிய நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த இலங்கையை பூர்வீகமாக கொண்ட நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 5 பேருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.



# மலைமுரசின் தலைமையில் நடைபெற்ற மேதின ஊர்வலம்

















மலைமுரசின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதின பேரணி வெற்றிகரமாக தனது இலக்கை அடைந்துள்ளது. காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் சிவன் கோவிலிலிருந்து ஆரம்பமாகி கடற்கரை நோக்கிச் சென்றது.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் ஆசிரியர் சங்கம், கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் [illegible] பனம்பொருள் [illegible]பத்தி விற்பனவு கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் ஆகியன தன்னார்த்தோடு இப்பேரணியில் கலந்து கொண்டன.

அதனைத் தொடர்ந்து மலைமுரசின் ஆசிரியர் திரு. இரா. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களின் தலைமை உரையைத் தொடர்ந்து அனைத்து சங்கங்களினதும் தலைவர்களின் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதனை அடுத்து மலைமுரசு ஆசிரியரால் இப்பேரணியின் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அதில் சரியான தொழிலாளருக்கு சரியான வேலை வழங்கப்பட வேண்டும், குடும்ப உறவுகளுக்கு வேலைகளை வழங்க வேண்டாம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பின்னர் ஆசிரியரின் நன்றி உரையுடன் இவ் ஊர்வலம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இப்பேரணிக்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதியானார்



கஸகஸ்தானில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 97.7% வாக்குகளைப்பெற்று ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார் நூர்சுல்தான் நஸர்பயேவ். இவரை எதிர்த்துப் போட்டியிட்டு படுதோல்வியைத் தழுவிய அபேல்கஸி கஸிநோவ் மற்றும் டுர்கன் சிஸ்டிகோவ் ஆகியோர் முறையே 0.7% மற்றும் 1.6% வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

கஸகஸ்தானில் 550 வாக்கெடுப்பு நிலையங்களில் இடம்பெற்ற இந்த ஜனாதிபதித் தேர்தலில் 95 வீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தல் மிக நேர்மையாகவும் அமைதியாகவும் இடம்பெற்றதாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

## 4 மாத குழந்தை உயிருடன் மீட்பு

நேபாளத்தில் கடந்த 25ம் திகதி ஏற்பட்ட நில நடுக்கத்தால், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டும் என அஞ்சப்படுகிறது. இந்நிலையில் பிறந்து 4 மாதமே ஆன ஆண் குழந்தையை மண்ணுக்குள் இருந்து வெளியே எடுத்தபோது அது வீறிட்டு அழுதுள்ளது. பின்னர் வீரர்கள் அந்த குழந்தையை சமாதானப்படுத்தி உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்து இருக்கின்றனர்.

22 மணித்தியாலங்களின் பின்னர் மீட்கப்பட்ட குழந்தையின் பெயர் சோனித் அவால் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் இக் குழந்தையை நேபாள மக்கள் "கடவுளின் குழந்தை" என்று அழைக்கின்றனர்.



## திகதி தள்ளிவைப்பு

கனடாவில் முதலில் வருமானவரி தாக்கல் செய்வதற்கு ஏப்ரல் 30 ம் திகதி என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாடு முழுவதும், ஏப்ரல் 24ம் திகதி தான் கடைசி என்ற தவறான அறிவிப்பு அனுப்பபட்டதால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கனடா வருமான வரி துறையினரால் அனுப்பப்பட்ட இந்த தவறான அறிவிப்பினால் தற்போது இந்த தாமதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த தவறுக்கான முழு பொறுப்பையும் கனடா வருமான வரி ஏஜன்சி பொறுப்பேற்றுள்ளது.

## சர்வதேச பயிற்சிக்குள் தமிழ்ப்பெண்

கலிபோர்னியாவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிற மோத்வனி ஜடேஜா பவுண்டேஷன் என்ற அமைப்பு, ராஜீவ் பெல்லோஷிப் என்ற திட்டத்தினை ஆண்டு தோறும் நடத்தி வருகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து சாதனையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு உலக தரத்தில் தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பது இந்த திட்டத்தின் நோக்கம். கன்னியாகுமரி மாவட்டம், இரவிபுதூர்கடையை சேர்ந்த மாஷா நஸீம் என்ற பொறியியல் மேற்படிப்பு படித்து கொண்டிருக்கும் பெண் தற்போது சர்வதேச அளவிலான தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்திற்காக இந்தியாவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 8 பேர் குழுவில் ஒருவராக தெரிவாகியுள்ளார்.

## நண்பர்களுக்கும் வாய்ப்பளித்த அற்புத நண்பன்

பஞ்சாப் மாநிலம் மோகா மாவட்டம் வாலா எனும் கிராமத்தை சேர்ந்த ஜீதா சிங் என்ற 20 வயது பெண், தன் காதலர் சம்கர் சிங்குடன் அருகில் உள்ள கிராமத்தில் வசிக்கும் தோழியைப் பார்க்க சென்றுள்ளார். அப்போது ஜீதா சிங்கின் தோழியின் கணவர் ஜஸ்வந்த் சிங் வழி மறித்து, சம்கர் சிங்கை அடித்து விரட்டியதோடு ஜீதாவை கடத்திச் சென்று ஊருக்கு வெளியே உள்ள ஒரு பாழடைந்த கட்டிடத்தில் வைத்து பலாத்காரம் செய்துள்ளார்.

மேலும், தன் 10 நண்பர்களுக்கு தகவல் கூறியதால், அங்கு வந்த அவர்களும் பலாத்காரம் செய்துவிட்டு மிரட்டி எச்சரித்து விட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர் வீடு திரும்பிய ஜீதா இது பற்றி தன் பெற்றோரிடம் நடந்ததை கூறியதையடுத்து, காவல்துறையினரிடம் புகார் அளித்ததாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

## திட்டம் முறியடிப்பு



ஜேர்மனியினைச் சேர்ந்த Halim, Senayi தம்பதியர் வெடிகுண்டு தயாரிப்பதற்கு உதவும் வெடிபொருட்களை ஏராளமாக வாங்கி குவித்துள்ளனர். இந்த தகவல் தெரியவந்ததையடுத்து, காவல்துறையினர் அத்தம்பதியினரை கண்காணித்து வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு அவர்களது வீட்டை சுற்றி வளைத்து, அங்கிருந்து துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள், வெடிபொருட்களை கால்துறையினர் கைப்பற்றினர். அதைத் தொடர்ந்து அந்த தம்பதியரை கைது செய்யப்பட்டனர். இதனால், அவர்களது தாக்குதல் சதி முறியடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பேருந்தினுள்ளும் பலாத்காரம்!!

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் மனைவியான 35 வயது மதிக்க தக்க பெண் ஒருவர் தனது 14 வயது மகன் மற்றும் 13 வயது மகளுடன் பக்கத்தில் உள்ள கிராமத்தை சேர்ந்த உறவினர் வீட்டுக்கு பேருந்தில் பயணம் சென்று கொண்டு இருந்த போது அங்கிருந்த 2 கண்டக்டர்களில் ஒருவர் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால் பேருந்தை நிறுத்துமாறு சாரதியிடம் அந்த பெண் முறையிட்டு உள்ளார். ஆனால் சாரதி கண்டு கொள்ள வில்லை.

அன்று பேருந்தில் குறைவான பயணிகள் மட்டுமே இருந்துள்ளனர். நீண்ட நேரம் இந்த தொல்லை தொடர்ந்து கொண்டு இருந்ததால் பொறுமை இழந்த அந்த பெண் தனது மகளுடன் ஓடும் வண்டியில் இருந்து வெளியே குதித்துள்ளார்.

மகளுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டதால் மகளை காப்பாற்ற முடியவில்லை எனத் தெரியவருகின்றது.

## அகதிக்களுக்கான தீர்வு



பிரித்தானிய பாராளுமன்றம் பொதுத்தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில், அது தொடர்பாக பாரிய எதிர்பார்ப்புக்கள் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளன. அந்தவகையில், பிரித்தானிய தேர்தல் களமானது இனிவரும் காலங்களில் பிரித்தானியாவின் மேலும், பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தலை ஈழத்தமிழர்கள் இருவகையில் பயன்படுத்த முடியும் எனவும், லங்காசிறி வானொலியின் நடப்பு அரசியலின் சிறப்புப் பார்வை நிகழ்ச்சியில் அவர் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்தவர்கள் எதிர்க்க வேண்டும்



ஒரே பணியை செய்யும் ஆடவர் மற்றும் மகளிர், ஒரே அளவு ஊதியம் பெற வேண்டும் என்பதை பாப்பரசர் பிரான்சிஸ் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

அவ்வகையில் பணி ஒன்றாக இருக்கும்போது ஊதியங்கள் வித்தியாசமாக இருப்பது, ஒரு பெரிய ஊழல் என்றும் அதை கிறிஸ்தவர்கள் எதிர்க்க வேண்டும் என்றும், ரோமிலுள்ள புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் ஆற்றிய ஒரு உரையில் பாப்பரசர் கூறியுள்ளார்.

ஆடவருக்கு உரிய அனைத்து உரிமைகளும் மகளிருக்கும் உள்ளன என்று இருக்கும்போது, ஊதிய விடயத்தில் அவர்களிடையே இடைவெளி இருக்க வேண்டிய காரணம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அணு ஆயுதம் இல்லா உலகம்




கடந்த 1970ம் ஆண்டு சுமார் 189 நாடுகள் கையெழுத்திட்ட அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் தொடங்கப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்க கருத்தரங்கில் சுவிசின் வெளியுறவு துறை அமைச்சரான Didier Burkhalter பேசியதாவது, அணு ஆயுதங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் உலக அதிகாரங்களில் உள்ள மாற்றங்கள், பூகோள அரசியல் அழுத்தங்கள், பிராந்திய நிலையற்ற தன்மை உள்ளிட்ட பிரச்சனைகள் ஒரு தடையாக இருக்க கூடாது.

சர்வதேச அளவில் உள்ள அணு ஆயுதங்களை நீக்க ஒத்துழைப்பு தாருங்கள் என உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளார்.

## முன்னால் தலைவரும் சிக்கினார்



பிரான்ஸ் நாட்டை சேர்ந்த முக்கிய அரசியல் கட்சி தலைவர் சுவிஸ் வங்கியில் சுமார் 2 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள தங்க கட்டிகளை பதுக்கியது அம்பலமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. சுவிட்சர்லாந்து வங்கியில் வரி ஏய்ப்பு நடந்தது குறித்த தொடர் விசாரணை பிரான்ஸ் தலைநகரான பாரீஸ் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

தற்போது பிரான்ஸில் உள்ள தீவிர வலது சாரி தேசிய முன்னணி கட்சியின் நிறுவனரும், அதன் முன்னால் தலைவருமான Jean-Marie Le Pen இந்த வரி ஏய்ப்பு வழக்கில் சிக்கியுள்ளார். இவர் சுமார் 2.4 மில்லியன் டொலர்களை பதுக்கியுள்ளார்.

இவற்றில் சுமார் 1.7 மில்லியன் டொலர் மதிப்புள்ள தங்க கட்டிகளும், தங்க நாணயங்களும் அடங்கும் என அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

– கவலையேபடாமல்
இதயத்தை திருடுங்கள்
சட்டத்தாலும்
இந்த திருட்டை
தண்டிக்க முடியாது –
– தூ சங்கர் –

# வினையடி நீ எனக்கு.. 13



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

கிழக்குப் பல்கலைக்கழக வாசலில் இறங்கிக்கொண்ட ரதனும் நிவேதாவும் பிரதான வாயிலைக் கடந்து உள்ளே சென்றனர். அவர்களைப் போலவே பல மாணவர்களும் மாணவிகளும் உள்ளே வந்து கொண்டிருந்தனர். .

பல்கலைக்கழகத்திற்கு எதிரே இருந்த மாணவர் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களும், மாணவிகளும் தனியாகவும், குழுக்களாகவும் வந்து கொண்டிருந்தனர். சிலர் துவிச்சக்கர வண்டிகளிலும் சிலர் மோட்டார் சைக்கிளிலும் வந்து கொண்டிருந்தனர். அதிகமாக ஜுனியஸ் மாணவர்களும், மாணவிகளுமே மூன்று நான்கு பேராக கூட்டம் கூட்டமாக வந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு எதிரே உள்ள அந்த நிலப்பரப்பின் பின்பக்கமே விடுதிகள் அமைந்திருந்தன. விடுதிகளில் இருக்கும் மாணவிகள் அங்கிருந்து பல்கலைக் கழகம் வருவதற்கு கிட்டத்தட்ட அரை கி.மீற்றர் தூரம் கடந்தே வர வேண்டும். அந்தளவுக்கு விடுதிகள் அமைந்திருந்த பிரதேசம் பெரிய நிலப் பரப்பைக் கொண்டிருந்தது. அதன் நடுவே அமைந்திருந்த அந்த சிறிய தார் ரோட்டின் மூலமே நடந்துவர வேண்டும். அதற்கு இரு பக்கமும் புற்கள் வளர்ந்து பசுமையாக இருந்தது. சில பிரதேசங்களில் விவசாய செய்கைக்கான பரிசோதனையாக பயிர்கள் நாட்டப்பட்டிருந்தன.

அந்த தார் ரோட்டின் வலது பக்கத்தின் ஓரத்தில் ஒரு சிறிய மாமரம் நின்றிருந்தது. அதன் கீழ் சில சீனியர்கள் "ராகிங்" செய்து கொண்டிருந்தனர். "ஜுனியர்ஸ்" மாணவிகள் தமது தலைக்கு மேலே பைல்களை வைத்த வண்ணமாகவும், சிலர் முழங்காலில் நின்றவாறும் ஒரு சிலர் அந்த மரத்திற்கு கீழே விழுந்திருந்த சருகுகளை பொறுக்கிய படியும் இருந்தனர். விடுதிப் பக்கமிருந்து யாராவது விரிவுரையாளர்கள் வந்து விடுவார்களோ என்ற பயம் சீனியர்ஸ் முகங்களில் தெரிந்தது. அவர்கள் விடுதிப் பக்கம் எட்டிஎட்டிப் பார்த்த வண்ணமே தமது ராக்கிங் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர்.

பல்கலைக்கழகத்துக்குள் அமைந்திருந்த மைதான ஓரங்களில் நின்றிருந்த மரங்களுக்கு கீழேயும் ஒருசில சீனியர்ஸ் ஜுனியர்ஸைப் பிடித்து வைத்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கதைப்பது போல் பாவனை செய்தாலும் அங்கும் ராக்கிங்கே நடந்து கொண்டிருந்தது.

ரதனும் நிவேதாவும் உள்ளே நுழைந்ததும் ரதன் நிவேதாவை "வெல்பெயார் செக்ஸ்ஸனுக்கு அழைத்துச் சென்றான். பல்கலைக்கழக வாசலுக்கு வந்ததுமே நிவேதாவை ஒருவித பய உணர்வு தொற்றிக் கொண்டது. ரதனும் தன்னை சீனியர்ஸ் கண்டு கூப்பிட்டு விடக் கூடாதே என்ற பயத்தில் இருந்தான். எப்படியாவது நிவேதாவினுடைய பதிவு வேலைகள் முடிந்து அவளுக்கு ஐடென்டிக்கார்ட்டை எடுத்துக் கொடுத்து விட்டால் போதும்போல இருந்தது.

"வெல்பெயார் செக்ஸனுக்குள்" செல்லும்வரை ரதனும் நிவேதாவும் கதைத்துக் கொள்ளவில்லை. ஏற்கனவே அவர்கள் கதைத்துக் கொண்டதற்கு ஏற்ப ரதன் முன்னே செல்ல நிவேதா பின்னே சென்றாள். "வெல்பெயார் செக்ஸனில்" இருந்தவர் மிக இனிமையாகக் கதைத்தார்

"என்ன... லேட்டாயிட்டிங்க போல, ராக்கிங் பயத்தில வரல்ல போல.." அந்தப் பெண்மணி கேட்கவும், நிவேதா சிரித்துக் கொண்டாள். நிவேதாவின் பதிவு வேலைகளை செய்து முடித்து அவளிடமிருந்த புகைப் படங்களையும் பெற்று அவளது "ஐடென்டிக்காட்டை" செய்து கொடுத்தார். அத்துடன் ஸ்ருடன்ட் ரெக்கோட் புக்கையும் கொடுத்தார். "பரவாயில்லையே, உமக்கு ஹெல்ப் பண்ண ஒரு ஜுனியர்ஸே வந்திருக்கிறார். ராக்கிங்க்கு பயப்படாம அவரே வந்ததை நினைக்க ஆச்சரியமாகத்தான் இருக்குது."

"இல்ல.... மிஸ், இவங்க எங்க ஊர்தான்.... நேற்று என்னோடுதான் வந்தவ.... புதிய இடம்தானே....?"

"ஓ.... ஊர்ப் பாசம் போல...." அவர் சொல்லிவிட்டு சிரித்தார். தொடர்ந்தும் அவரே.....

"சரி சரி கெதியா.... லெக்ஸசுக்குபோங்க. நீங்க இரண்டு பேரும் போறத கண்டா சீனியர்ஸ் தொல்லைப் படுத்துவாங்க தானே...." பதிவு வேலைகளை முடித்துக் கொண்டு நிவேதா அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டதும் இருவரும் உபவேந்தர் அலுவலகத்தை கடந்து வெளியே வந்தனர்.

"நிவேதா, இப்ப எங்களுக்கு ஆங்கில வகுப்புத்தானே நடக்குது.... நான் "பீ குறூப்". நீரும் அங்கு வந்து இரும்.... ஆரம்பத்தில் எங்களுக்கு எக்ஸாம் வைத்துதான் "குறூப்" பிரிச்சவங்க.... இன்னும் இரண்டு வாரம்தானே..... அதற்குப் பிறகு கோர்ஸ் தொடங்கி விடும்..."

"ரதன், அப்ப நான் உங்களோட "பீ" குறூப்புக்கே வாறன்.... எனக்கு தனியாப் போக பயமாக இருக்கு ரதன்....

நிவேதா ரதனைப் பின் தொடர்ந்து அவனுடனேயே சென்றாள். பல்கலைக்கழக பிரதான மண்டபத்தைக் கடந்து விவசாய பீடாதிபதியின் அலுவலகத்துக்குள்ளால் சென்று உள்ளே இருக்கும் விரிவுரை மண்டபத்தை நோக்கி ரதன் செல்ல அவனைப் பின்தொடர்ந்து நிவேதாவும் சென்றாள்.

இடையிடையே தமது விரிவுரைகளுக்குச் சென்று கொண்டிருந்த சீனியர்ஸ் மாணவர்கள் இவர்களைக் கண்டாலும் தமக்கு இருந்த விரிவுரை அவசரத்தில் இவர்களைப் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

அதற்கு ஏற்றாற் போலவே ரதனும் நிவேதாவும் ஏதும் கதைக்காமலே சென்றனர். ரதன் தனது விரிவுரை மண்டப வாசலுக்கு வந்ததும் அங்கு நின்று "எக்ஸ்கியூஸ்மீ சேர்" என்றதும் அந்த ஆங்கில ஆசிரியர் தனது கற்பித்தலை நிற்பாட்டி "ஆ.... ரதனா.... வாரும். என்ன லேட்...." என்றார்....

பல்கலைக்கழக நிர்வாகம் ஆங்கில வகுப்பு நடாத்துவதற்கு என்றே தனிப்பட்ட முறையில் ஆங்கிலத்தில் நன்கு திறமையான ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஏற்பாடு செய்திருந்தது. அவர்கள் விரிவுரையாளர்களாக இல்லாவிட்டாலும் ஒவ்வொரு ஆண்டும் வரும் மாணவர்களுக்கு மூன்று மாதகால ஆங்கில வகுப்பு நடத்துவதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்தனர். அதில் ரதனின் "பீ குறூப்புக்கு" பொறுப்பாக வந்திருந்த ஆங்கில ஆசான் முன்னர் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் கல்வி கற்று அங்கேயே ஆங்கில ஆசிரியராக இருந்து ஆங்கில பாட ஆலோசகராக உயர்ந்தவர்.

அவர் ஆங்கிலத்தில் மட்டுமல்ல, கலை இலக்கியத்துறையிலும் நன்கு ஈடுபாடு கொண்டவராக இருந்தார். வகுப்பில் இலக்கியம் பற்றிக் கதைப்பதிலும் கவிதைகள் பற்றிக் கதைப்பதிலும் அவருக்கு அலாதிப் பிரியம்.

ஒருமுறை அந்த ஆங்கில வகுப்பில் வைத்து அவர் கவிதைகள் பற்றியும் கதைகள் பற்றியும் கதைத்துக் கொண்டிருக்கும் போது சக மாணவன் ஒருவன் ரதனைப் பற்றி "சேர்.... இவரும் ஒரு கவிஞர்தான். கவிதைப் புத்தகமெல்லாம் வெளியிட்டிருக்கிறார்...." என்று சொன்னதும் அவர் ரதனைப் பிடித்துக் கொண்டார். "அப்படியா ரதன்.... கவிதை எல்லாம் எழுதுவிங்களா, குட்.. அப்படித்தான் இருக்க வேண்டும். வெறுமனே புத்தகப் பூச்சாக இருக்கக் கூடாது. இலக்கிய ஆர்வமும் ஈடுபாடும்தான் ஒரு மனிதனை முழுமையாக்குகிறது" என்ற வகையில் கதையைத் தொடக்கியவர் அந்த வகுப்பில் ரதனுடன் அதிகம் கதைக்கத் தொடங்கி விட்டார்.

அவரது ரசனையில் நா.பார்த்தசாரதி இருந்தார். அவரது குறிஞ்சி மலர், சத்திய வெள்ளம், பொன் விலங்கு நாவல்கள் அவருக்கு மிகவும் பிடித்திருந்தன. அந் நாவல்களை ரதன் ஏற்கனவே வாசித்திருந்ததால் ஆங்கில ஆசிரியர் சண்முகசுந்தரத்துடன் ஒன்றிப் போக முடிந்தது. எனவே அந்த ஆங்கில வகுப்பில் ரதன் ஒரு குட்டி ஹீரோவைப் போன்று இருந்தான்.

சில வேளைகளில் மற்ற "குறூப்" ஆசிரியர்களும் இவனது வகுப்பிற்கு வந்து விரிவுரையாற்றுவர்.

அதில் "டி குறூப்" ஆசிரியரும் ஒரு சிறந்த இலக்கிய ஆர்வமுள்ளவராக இருந்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு என்று பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற அவர் சிங்கள தொலைக்காட்சி நாடகங்களில் அதிக பரிச்சயம் பெற்றவராக இருந்தார்.

அந்த வகுப்பிலேயே சிங்கள தொலைக்காட்சி நாடகங்களை விரும்பிப் பார்ப்பவனாக இருந்தவன் ரதன் மட்டுமே. எனவே குறிப்பிட்ட அந்த ஆங்கில ஆசிரியர் வந்து விரிவுரையாற்றும் போதும் அவர் தொலைக்காட்சி நாடகங்களை பற்றிக் கதைப்பார். அந்த நாடகங்களைப் பற்றி அவருடன் கதைப்பதற்கு ரதனே முன் நிற்பான். எனவே அவரைப் பொறுத்த வரையிலும் "ரதனே" ஹீரோவாக இருந்தான். நான்கு குறூப்பையும் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்கள் தமது இடைவேளையின் போது ரதனைப் பற்றிக் கதைப்பதைப் பலர் அவனிடம் வந்து சொல்லியிருக்கிறார்கள்.

"ரதன், உனது கவிதையைப் பற்றித்தான் மிஸ் கதைத்துக் கொண்டிருக்கிறா....", "ரதன், நீ ஏதோ டெலி டிராமா கோர்ஸ் ஒன்று செய்திருக்கியாமே, அதப்பத்தித்தான் சேர் கதைத்துக் கொண்டிருந்தவர்.", "ரதன், மாஸ் மீடியா சம்பந்தமாகவும் டிப்ளோமா முடிச்சிருப்பதாக மெடம் கதைச்சுக் கொண்டிருந்தா...."

இப்படியாக பல செய்திகள் ரதனின் காதுகளில் வந்து சேரும். அந்த ஆங்கில பாட வகுப்புகளில் அநேகமானோர் ரதனைப் பற்றியே கதைத்தனர். சிலருக்கு அது எரிச்சலையும் கொடுத்தது. எப்படியாவது தன்னை மட்டம் தட்ட வேண்டும். அவனை அவமானப்படுத்த வேண்டும் என்ற நினைப்பு ஒருசிலர் மனங்களில் எழுந்திருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் மத்தியில் ரதனுக்கு நல்ல பேர் இருந்ததால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒருசிலர் தமக்குத் தெரிந்த சீனியர்ஸ்களிடம் ரதனைப் பற்றி ஏதோ சொல்லி வைத்து அவனுக்கு அதிக ராக்கிங் கிடைக்கவும் வழி செய்தனர்.

ரதனுக்கு ராக்கிங் செய்யவென வரும் சீனியர்ஸ்களில் அதிகமானோர் அவனது கவிப் புலமையைக் கண்டு அவனுக்கு ஒருவித தனிப்பட்ட மரியாதையும் கொடுத்து வந்தனர். சில வேளைகளில் அவனுடன் கதைப்பதை மட்டுமே ராக்கிங்காக செய்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கென ஒரு அறிவித்தல் பலகை இருந்தது. அதில் மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி எழுதும் கவிதைகளை அந்த விளம்பர பலகையில் பலரதும் பார்வைக்காக போட்டு வந்தனர். இது கலைப்பீடத்திற்கு உரியதாக இருந்தாலும் வேறு பெக்கல்டியைச் சேர்ந்த படைப்பாற்றல் மிகுந்த சில

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

மாணவ மாணவிகளின் ஆக்கங்களும் இடம்பெற்று வந்தன.

மாணவர்கள் தமது படைப்புக்களை கலைப் பீட மொழித் துறை தலைவரிடம் சமர்ப்பிக்கவேண்டும். அவர் பார்த்து ஒப்பமிட்ட பின்னர் அதனை விளம்பரப்பலகையில் ஒட்டுவார்கள். அந்த விளம்பர பலகை கண்ணாடி "பிறேம்" போடப்பட்டு எந்நேரமும் மூடப்பட்டே இருக்கும். அந்த விளம்பர பலகையில் ரதனின் அதிக கவிதைகள் இடம்பெற்றிருந்தன. அவனது கவிதைகள் இல்லாத நாட்களே இல்லை என்ற அளவுக்கு ஏதாவது ஒரு சிறு கவிதை அதிலிடம்பெற்றிருக்கும். அன்றொரு நாள் A Diary Of Un Employed என்ற தலைப்பில் மூன்று சிறு கவிதைகளை எழுதிக் கொடுத்திருந்தான். மறு நாள் அந்த விளம்பர பலகைக்கு முன்னால் பலர் ஒருவரை ஒருவர் முட்டி மோதியபடி வாசித்துக் கொண்டிருந்தனர்.

1) மறுக்கப்படுவதற்காகவோ
பிறப்பெடுத்தன என் கனவுகள்
என் மனப் பிரபஞ்ச விளிம்பில்
உன் நினைவுகளைப் பரப்பி
ஆரம்பம் இதுவென நீ சொன்னாய்
இதுவரையும் அது
ஆரம்பமாகவே
எனக்கான முடிவு தெரியவில்லை.
நான் -
என்ன செய்யட்டும்
என்னைப் பார்த்து
பரிதாபப்பட்டுப் பறக்கும்
அந்த –
சின்னஞ்சிறு பறவையுடன்
நானும் சேர்ந்து பறக்கவா?
இல்லை –
நீ சொல்ல ஏதும் மீதமிருக்கிறதா?
சொல்
காத்துக் கிடக்கிறேன்.



2) உலகம் உசும்பும்
ஒரு நாள்
இந்த உலகம் உசும்பும்
என் பாடல் கேட்டு
ஆனால்
நீ –
என் பாடல்களைக் கவனிக்காமல்
போய் விடுவாயோ
என்பதே என் கவலை.

3) இரவுகளை வழியனுப்பும்
ஓர் இசைப் பாடகனாய் நான்
சோகங்களை மட்டுமே
சுரம் பிரிக்கத் தெரிந்த – நீ
உனக்கான வாழ்த்து மடல்கள்
வந்து குவியலாம்
எனக்கான
வாழ்க்கை மடலே
இங்கு –
கிழிப்பட்டுப் போனது
என்னை அழ விடுங்கள்
உணர்வுகள் குழம்புகின்றன.
நான் -
அவளைத் தேடப் போய்
என்னையே தொலைத்து
விட்டவன்.

1,2,3என இலக்கங்கள் போட்டு எழுதப்பட்டிருந்த சிறு கவிதைகள் அவை.

மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேண்டாமா?

தமிழ் தொலைவி லேயுளது.
தமிழர் என இங்குள்ளோம்!
தமிழருகே போவதெப்போ -
தனியாகக்காண்பதெப்போ?

சாவதற்கு முதலேனும்
தமிழறியக்கூடாதா?
போவதற்குமுன் தமிழின்
பொருளறியக் கூடாதா?

பத்தினையும் எட்டினையும்
பார்த்துவிடக்கூடாதா?
முத்தமிழின் பழவேடும்
முடித்துவிடக்கூடாதா?

புதிய தமிழ் ஆக்கம்
புறப்படுதல் பழசிருந்தே!
அதனால் முழுத்தமிழும்
அறப்படிக்க வேண்டாமா?

தாமரைத் தீவான்
சுச்சந்தீவு, கிண்ணியா.

## இதழின் பலம்

மலையென ஓங்கி நிற்கும்
எம் மலைமுரசே
உனக்கு பலம் அதிகம்
ஏன் என்றால்
உன்னைச் சீண்டினால்
உன் இதழினால்
சுட்டெரிப்பாய்

- - பாரதி - -

## வாழ்வு மகிழ்ச்சி பெறும்

கவித்துயிலன்
சேனையூரான்



சிறந்த மூலதனம்,
கல்வி இங்கு
தேடற்கரிய சொத்து
சிறந்த ஒழுக்கம்!

குறைவற்ற செல்ம்
நோயற்ற வாழ்வு
குலத்துக்குக் கேடு
கூடாத ஒழுக்கம்!

புகைத்தல் போதைப்பழக்கம்•
சுகத்தை கெடுக்கும்
பகைத்தல் சினத்தல் - நல்
உறவைக் கெடுக்கும்!

ஆத்திரம் கோபம் - உடல்
ஆரோக்கியத்தை கெடுக்கும்
அதிக பேராசையால்
அமைதி குலையும்!

வாசிக்க வாசிக்க மன
வளர்ச்சி, அறிவு வளரும்
மத அனுஸ்டான முறையால்
வாழ்வு மகிழ்ச்சி பெறும்!

## காசே. .

பத்து ரூபாய் இல்லாது
பரிதவித்த நாட்களுமுண்டு

பள்ளி நாட்களில்
பத்தென்றால் லட்சத்துக்கு
சமமாக இருந்த நீயோ
பார்பாரற்று அழுகின்றாய்

காலமும் கொடியது தான்
முடிவுகளும் விபரீதமானவையே
புரிதலிருந்தால் போதும்
போகுமிடம் இருகியதால்

காசே காசில்லாமல்
போனாயோ நீயுமின்று

திருமலை சுந்தா



## எழுதி அனுப்புகின்றேன்

பொன்நிலா
திருகோணமலை
நூல் : பொன்நிலா

மண்ணில் வீழ்ந்த விதைகள்
முளைக்காமல்விடாது!
கசக்கி எறிந்த பூக்கள்
வீரிய விருட்சங்களாய்
வளராமல்விடாது!
செஞ்சோலையை இழந்த எம்மண்
உரிமை பெறும் வரை
எம்மை உறங்கவிடாது!
எழுதிய கவிதை பேனா மையில்
அல்ல
என் இரத்தத் துளிகளில் . . .
அனுப்புகின்றேன் கண்ணீர் துளிகளுடன்
கல்லாய் போன இறைவனுக்கு

## "சோலைக்குள் பூத்த ரோஜா..."

மலரும் ரோஜாவுக்கு
"மகளாகப் பிறந்தவளே
உதிரும் காலம் வந்தாலும்
உருமாய் மலர்கிறாயே
வெய்யில் உன்னைச் சுட்டபோதும்
• வெதும்பாமல் நிற்கிறாயே
மாரியில் பூத்த மலர் நீ
மழைநீரும் தாங்குகின்றாயே
பனி உன்மேல் விழுந்த போதும்
தலை சாயாமல் நிற்கின்றாயே
காற்று உன்னைத் தீண்டியபோதும்
கசங்காமல் வாழ்கிறாயே?
சோலையில் உள்ள பூக்கள் எல்லாம்
சோகமாய் அங்கு தூங்க
சோலைக்குள் நீ
சேலை கட்டி வாழ்கிறாயே?

- - சி.விமலகாந்தன் - -

## முகவரி தேடுங்கள்

வித்தாகி விளையவைத்தாய்
வேராகி நிலைக்க வைத்தாய்
வித்தழிந்து போயிற்று
வேரை அறித்தாயிற்து

விருட்சங்களாக விலாசம் காட்டும்
உங்கள் விலாசங்கங்கள் எங்கே?

ஏணியாக நின்று ஏற்றிவிட்டாய் - இன்று
சாணியென சகதியிலே எறிந்துவிட்டார்
ஏற்றம் பெற்றவர்கள் - ஏறிட்டுப்
பார்க்கவில்லையே இன்று

சீற்றம் சிறிதுமின்றி - வீதியோரம்
வீற்றிருந்து யாசகமேற்கும் போதும்
பிரகாசித்திருக்கிறதே - உன் வதனம்
பலன் எதிர்பாரா கடமை வீரனா?

திருமதி.மா.வேலுப்பிள்ளை,
கோபாலபுரம்

# ஒரு நரபலியின் துயரக்கதை "அம்மான் என் கண்"

**திருகோணமலையில** இருந்து 40 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் கந்தளாயில் உள்ள குளத்தினைப் பார்க்கும் சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தது. பலமுறை பயணங்களின்போது பார்த்ததுதான் என்றாலும் அன்று விசேடமாக "அம்மான் என் கண்" என்றழைக்கப்படும் குளக்கட்டின் ஒருபகுதியினைப் பார்க்கச் சென்றிருந்தோம்.

ஆரம்பத்தில் கந்தளாய்க்குளம் அமைக்கப்பட்ட பின்னர் அதிலிருந்து நீரைப்பெறுவதற்கான வழி அமைக்கப்பட்ட பிரதேசமே அம்மான் என் கண் என்று இன்றும் அழைக்கப்படுகிறது. பிரமாண்டமான அந்தக் குளக்கட்டின் குறிப்பட்ட பிரதேசத்தில் நின்று கொண்டிருந்தபோது எனது நினைவுச்சக்கரம் மெல்ல மெல்ல பின்னோக்கி நகர்ந்தது.

எனது சிறுபிராயத்தில் அப்பப்பா (அமரர் தம்பலகாமம்.க.வேலாயுதம்) எனக்குச் சொன்ன கதை இது. இதனுடைய வரலாற்றாதாரங்கள் பற்றி எதுவும் தீர்மானமாகத் தெரியவில்லை. இருந்தும் கந்தளாய், தம்பலகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பல்வேறு வடிவங்களில் கூறப்படும் இந்தக் கர்ணபரம்பரைக் கதையினை இன்றும் நீங்கள் கேட்டறியலாம். திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன் அதனைச் சூழ இருந்த வயல் நிலங்களைப் பராமரிக்கும் பொருட்டு கந்தளாய்க் குளத்திருப்பணிகளைச் செய்தான். இனி அந்தக் கதை..........

அன்று சதுர்வேத மங்களாபுரி (இன்றைய கந்தளாய்) விழாக்கோலம் பூண்டிருந்தது. அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெருங்குளத்தினைச் சுற்றி மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. சோழகங்கன் என்று புகழப்படும் குளக்கோட்டு மன்னனும், அவனது பரிவாரங்களும் அவர்களுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த மேடைகளில் வீற்றிருக்க வேதியர்களால் மாபெரும் யாகத்துக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக்-கொண்டிருந்தன.

இத்தனை வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த இந்நிகழ்வில் கூடியிருந்தவர்கள் முகங்களில் வழமைக்கு மாறான பயத்துடன் கூடிய படபடப்பும், சோகமும் நிறைந்திருந்தது. ஆம் அந்த யாகம் நரபலி கொடுப்பதற்காக நிகழ்த்தப்படுகிறது. காரணம் இதுதான். கந்தளாய்க் குளத்தினைக் கட்டிமுடிக்க முடியாதபடி பலமுறை அணை உடைப்பெடுத்துக் கொண்டிருந்தது. அதற்கான காரணத்தைக் கண்டறிய விழைந்த அரண்மனை நிமித்திகனும், வேதியரும் அது அரசனின் முற்பிறப்பின் பழி எனவும் அதனை நிவர்த்திக்க அரசகுலத்து மூத்த மகனை நரபலி கொடுக்க-வேண்டுமென தீர்மானமாகவும், முடிவாகவும் கூறி இருந்தனர். இப்போது அதற்காகத்தான் இந்த யாகம் வளர்க்கப்படுகிறது. அதுவே விழாக்களின் இயல்புக்கு மாறான அமைதி நிலவக் காரணமாக அமைந்திருந்தது.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அனைவரது கண்களும் நரபலி இடுவதற்காக குளக்கட்டில் வெட்டி, பூக்களால் அலங்கரிக்கப்-பட்டிருந்த குழியின் மீதே நிலைத்திருந்தது. குளக்கோட்டு மன்னனின் சகோதரியின் மூத்தமகன் ஏலவே அந்தணர்கள் வகுத்திருந்த முறைப்படி அந்தக் குழிக்குள் இறக்கப்பட்டான். தனக்கு நிகழப்போவது பற்றி அறியாத அப்பாலகன் அலங்கரித்த குழிக்குள் விளையாடிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் மன்னன் முதற்கொண்டு மற்றையவர் அனைவரும் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு இருகைகளாலும் மண்ணள்ளிக் குழிக்குள் போட்டனர். முதலில் விளையாட்டாக நினைத்த பாலகனுக்கு நடக்க இருக்கும் விபரீதம் விளங்கியிருக்கவேண்டும். பயங்கலந்த பீதியுடன் தனது அம்மானை (அரசனை -குழந்தையின் தாய்மாமனை) நோக்கி தன்னைக் காப்பாற்றும்படி மன்றாடியது குழந்தை. குழந்தையதும் மக்களதும் அழுகை, ஓலம், கதறல்களுக்கு நடுவில் மண்போடும் படலம் தொடர்ந்தது. இறுதியில் பாலகனின் கண்ணுக்குள்ளும் மண்விழுந்தது.

"அம்மான் என் கண்" என்றலறியது குழந்தை. கூடியிருந்த மக்களின் அழுகையும் வானைப்பிளந்தது. இறுதியில் எங்கும் நிசப்தம். குழி முற்றாக மூடப்பட்டுவிட்டது. நீண்ட நேரத்தின் பின் மக்கள் கூட்டமும், மன்னரும் அவரது பரிவாரங்களும் துயரத்தோடு இடம்விட்டகன்றனர். அணைக்கட்டும், நீர்திறந்துவிடும் ஓடையின் இறுதிப்பணிகளும் முடிந்த பின் வேலையாட்களும் விலகிச் சென்றனர். நிகழ்ந்துபோன கொடுமையின் துயரம் தாங்காத சூரியனும் மலைமுகடுகளுக்குள் மறைந்துபோனான்.

புதிதாக அமைக்கப்பட்ட ஓடையில் சலசலத்தோடும் குளத்துநீர் மட்டும் "அம்மான் என் கண்" என தொடர்ந்தோலமிட்டுக் கொண்டிருந்தது. இதுதான் அப்பப்பா எனக்குச் சொன்ன கதை. கேட்டுப் பலவருடமான பின்னும், கர்ணபரம்பரைக்கதை எனத் தெரிந்திருந்தும் நெஞ்சின் ஒரு மூலையில் துயரத்-தோடு நிலைத்திருக்-கிறது இந்தக்கதை.



**வைத்திய கலாநிதி**
**த.ஜீவராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 09

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

-மாயன்-

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

மூன்றாவது நாள் மாலையில் எமது போராட்டத்தின் திருப்புமுனையாக திருகோணமலை மறை மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் போராட்டத் தலத்திற்க வருகை தந்தார்.

அவருடைய வருகையை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களிடையே ஒரு உத்வேகம் காணப்பட்டது. அவர்கள் தமது உறவுகளை நினைத்து ஆயரின் கரங்களைப் பற்றியவாறு அழத் தொடங்கியிருந்தனர். சிலர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படங்களை ஆயரிடம் காண்பித்து அப்படங்களில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்... அந்தச் செயலானது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என அவர்களது உறவுகள் வேண்டும் காட்சியாக இருந்தது.

மக்களின் மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொண்ட மறைமாவட்ட ஆயர் இறுதி நாளான மறு நாள் அதிகாலை ஆணைக்குழுவினருடன் கலந்துரையாடலை மேற்கொள்ள விரும்புவதாக அறிவித்து அதற்கானதொரு நேரத்தையும் அனுமதியையும் பெற்றுக்கொள்ளுமாறு பணித்துவிட்டு அவ்விடத்தில் இருந்து அகன்றார்.

மூன்றாம் நாள் முடிவடைய சில மணித் துளிகளே இருந்தது. அடுத்த நாளுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க திட்டமிடும் நேரத்தில் நாம் அங்கிருந்த அனைவருடனும் உரையாடி அக் கடைசி நாளில் உணவுத்தவிர்ப்புப் போரில் இறங்கலாம் என்று முடிவு எடுத்ததுடன் எமது போராட்டத்தின் மூன்றாம் நாள் நிறைவடைந்தது.

நான்காம் நாள் காலையில் கடந்த மூன்று நாட்களைப் போலவே புறக்கயிப்புச் செய்வதற்கான ஆயத்தங்களைக் காலை வேளையில் மேற்கொண்டவாறு நாங்கள் பிரதேச்ச செயலாளரின் பட்டணமும் சூழலும் அலுவலகத்தின் முன்னர் தயாரானோம்.

அன்றைய காலைப் பொழுதை இறை வணக்கத்துடன் கழிக்கலாம் என்று நேற்றைய நாளில் எடுத்த முடிவிற்கு அமைவாக வண. பிரபாகரன் அடிகள் பல சைவ மற்றும் கிறித்துவப் புத்தகங்களையும் தேவாரத் திரட்டுக்களையும் கொண்டு வந்திருந்தார்.

சொந்தங்களைத் தொலைத்த உறவுகள் கூட்டுப் பிரார்த்தனையிலும் பஜனையிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அன்றைய தினமும் ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறத் தொடங்கியிருந்தது. அந் நேரத்தில் மீண்டுமொரு மகஜரைக் கையளிக்கும் நோக்குடன் வண. யோகேஸ்வரன் அடிகள் மறைமாவட்ட ஆயரைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

காலை சுமார் 9.30 மணியளவில் மறைமாவட்ட ஆயர் மற்றும் வண. யோகேஸ்வரன் அடிகள் இருவரும் பகிஷ்கரிப்புத் தலத்திற்கு வந்த போது அவர்களுடன் நானும் இணைந்து ஆணைக்குழுவினரிடம் சென்றோம். ஏற்கனவே அவர்களுக்கு எமது சந்திப்பு அறிவிக்கப்பட்டிருந்ததால் ஆணைக்குழுவின் அதிகாரிகள் எமது வருகைக்க எவ்வித இடையூறையும் விளைவிக்கவில்லை.

அங்கு நாம் ஆணைக்குழுவின் குறைபாடுகளைப் பற்றித் தெளிவாக மீண்டும் அவர்களுக்கு எடுத்துரைத்த போது அவர்கள் அதனைத் தெளிவாக் விளங்கிக் கொண்டதாகத் தெரிவித்ததுடன் மிக முக்கியமான விடயமொன்றை எமக்கு உறுதியளித்தனர்.

அவர்களின் அடுத்த அமர்விற்கு முன்னர் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள அதிருப்திகள் தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்களையும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகப் பணியாற்றிவரும் அமைப்புக்களையும் உள்ளீர்த்துக்கொண்ட குழுவொன்றுடன் பேசுவதற்குத் தயாராவதாகத் தெரிவித்தனர். அத்துடன் எமது கலந்துரையாடல் நிறைவு பெற மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார். எனினும் ஆணைக்குழுவின் அமர்வானது தொடர்வதால் நாமும் எமது போராட்டத்தைத் தொடர்வதாகத் தீர்மானித்தோம்.

ஆணைக்குழுவினர் சிவில் சமூக அமைப்புக்களைச் சந்தித்து உரையாடுவதற்கு உடன்பட்டமையானது எமது போராட்டத்தின் வெற்றியாகவே அன்றைய நாளில் பதிவானது.

அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்று வண. யோகேஸ்வரன் அடிகள் அப்போதே



பணித்தார். ஏனெனில் அரசினால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றைச் சந்தித்துக் கதைக்கும் போது சில தெளிவான வரையறைகளுடன் பேசவேண்டிய நிாப்பந்தம் எமக்கு எழுந்தது. அடுத்து வடக்கு கிழக்கில் இயங்கும் பல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இக் கலந்துரையாடலுக்கு வரவிருப்பதால் அவர்கள் அனைவரையும் ஒரே இலக்கு நோக்கி நகரும் உடன்பாட்டை முதலில் எம்மிடையே மேற்கொண்ட பின்னரே அதற்கும் அப்பால் செல்ல முடியும் என்பதால் அனைவரையும் சந்திக்கும் ஏற்பாடுகளையும் அச்சந்திப்பில் பொதுவான சில பிரகடணங்களையும் உருவாக்கிக்கொண்ண வேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்ட நாம் அதற்கான தயார்ப்படுத்தல்களில் முற்றுமுழுதாக வண. யோகேஸ்வரன் அடிகளே ஈடுபடவேண்டும் என்ற முடிவையும் எட்டிக் கொண்டோம்.

அன்றைய போராட்டம் உணவுத் தவிர்ப்புடன் மாலை 3 மணிவரை தொடர்ந்தது. அதன் பின்னர் எமது போராடடத்தை நிறைவிற்குக் கொண்டுவரும் தீாமானத்தை மேற்கொண்டோம்.

உண்ணா நோன்பிருந்த அனைத்து உறவுகளையும் கொதிக்கும் வெய்யிலில் இருந்து குளக்கோட்டன் கட்டட வளாகத்திற்கழைத்தோம் **அடுத்த பதிவுடன் நிறைவுறும்....**

# யுத்தமின்றி எதிரியை வெற்றி கொள்ளும் தந்திம் – சன்சூ

இராணுவ மூலோபாயங்கள் தொடர்பாக சன் சூவால் எழுதப்பட்ட ஆர்ட் ஒவ் வோர் நூலில் அவர் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தமில்லாமல் எதிரியைத் தோற்கடிப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை சன் சூ தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுவே தற்போது சீன வெளியுறவுக் கோட்பாட்டில் பிரயோகிக்கப்படுகிறது.

சீனாவின் இராணுவ மேதையான சன் சூ (Sun Tzu) தற்போது உயிருடனிருந்து ருவிற்றரில் இணைந்திருந்தால், சீனாவில் பிறந்ததை எண்ணித் தான் எவ்வளவு பெருமைப்படுகிறார் என்பதை இந்த உலகிற்குத் தெரிவித்திருப்பார்.

சீனாவின் இராணுவ மூலோபாயங்கள் தொடர்பாக சன் சூவால் எழுதப்பட்ட ஆர்ட் ஒவ் வோர் நூலில் அவர் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தமில்லாமல் எதிரியைத் தோற்கடிப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை சன் சூ தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுவே தற்போது சீன வெளியுறவுக் கோட்பாட்டில் பிரயோகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியா அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இதிலிருந்து இந்தியா பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாரத்திலிருந்து, சீனாவும் பாகிஸ்தானும் 45 பில்லியன் டொலர்களை சீன-பாகிஸ்தான் பொருளாதாரப் பாதை என்கின்ற திட்டத்திற்காக (CPEC) முதலிட்டுள்ளதாக அறிவித்துள்ளன. சீனாவின் வடமேற்கிலுள்ள சின்ஜியங் பிரதேசத்திலிருந்து பாகிஸ்தானின் தென்மேற்கிலுள்ள குவாடர் துறைமுகம் வரையான பகுதியை இணைப்பதே இத்திட்டத்தின் நோக்காகும்.

இத்திட்டம் நிறைவடையும் போது 3000 கிலோமீற்றர் வரையான வீதி பாகிஸ்தானின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் என எதிர்வு கூறப்படுகிறது. சீனாவைப் பொறுத்தளவில் இத்திட்டமானது ஒரு கல்லில் பல பறவைகளைக் கொல்வதுடன் தொடர்புபட்டதாகும்.

சீனாவால் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட திட்டங்களும் இதனுடன் சம்பந்தப்பட்டதாகும். சீனாவின் திட்டம் ஒன்று மெதுவாக நிறைவேறுகிறது. சீனா எவ்வாறு பிரதான ஐந்து விடயங்களைக் கையாளுகிறது என்பதை இந்தியா கவனத்தில் எடுக்கவேண்டும்.

இந்திய உபகண்டத்தில் பாரிய கட்டுமானத் திட்டங்களுக்காக முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்தியாவை தனது முற்றுகைக்குள் உட்படுத்த சீனா முயல்கிறது. தற்போது சீனா எவ்வித புதிய திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை எனவும் முத்துமாலை சீனாவால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று எனவும் சிலர் கூறலாம்.

ஆனால் சீனா இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கைச் செலுத்துவதன் மூலம் இந்தியாவை முற்றுகைக்கு உள்ளாக்கும் நகர்வை மிகவும் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னெடுத்துச் செல்கிறது. பாகிஸ்தானின் குவாடர் துறைமுகம் மற்றும் சிறிலங்காவின் அம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்றன சீனாவின் கணிசமான முதலீடாகவும் ஈடுபாடாகவும் காணப்படுகின்றன.

நேபாளத்தில், எவரெஸ்ட் சிகரத்திற்குக் கீழே சுரங்கம் ஒன்றின் ஊடாக திபெத்திலிருந்து 540 கிலோமீற்றர் நீளமான விரைவுத் தொடருந்துப் பாதை ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை சீனா கொண்டுள்ளது. இந்தத் தொடருந்துப் பாதை இந்திய-நேபாள எல்லைக்கு அருகாக அமைக்கப்படவுள்ளது.

2015ன் முதல் காலாண்டில், சீனா கடந்த ஆறு ஆண்டுகளாக மிக மெதுவாக மேற்கொண்ட முதலீட்டின் பெறுபேற்றைப் பெற்றுள்ளது. சீனா எவ்வாறு தனது பொருளாதாரத்தில் வளர்ச்சியை எட்டியுள்ளது?

'பாரியளவில் வேலையின்மையை ஏற்படுத்தாது சீனா தனது உள்நாட்டின் கட்டுமானத் துறையை முன்னேற்றியதன் மூலம் முதலீட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கிறது. இதுவே சீனாவின் பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கிய காரணியாகும்.

சீனாவின் வெளிநாட்டு முதலீடுகள் அதன் உள்நாட்டுப் பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதாக மேற்கொள்ளப்படுகிறது' என ஆய்வாளர் ஜக்கோப் ஸ்ரொக்ஸ் ஏப்ரல் 19 அன்று வெளியான வெளிவிவகார சஞ்சிகையில் 'சீனாவின் வீதிச் சட்டங்கள்' என்கின்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனா தனது வடமேற்கிலுள்ள சின்ஜியாங் மற்றும் தெற்கிலுள்ள திபேத் போன்ற இடங்களில் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதானது தற்செயலான நிகழ்வல்ல. சின்ஜியாங் மற்றும் திபேத் ஆகிய இரண்டு எல்லைகளும் இனமோதலின் மையங்களாக உள்ளன. இவை இரண்டும் அபிவிருத்தியடையாத இடங்களாகும்.

இவ்விரு பிராந்தியங்களிலும் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புப் போன்றவற்றைப் பெருக்கலாம் என்பது சீனாவின் நம்பிக்கையாகும். இது நீண்ட கால அடிப்படையில் உள்நாட்டு மோதல்களைக் குறைப்பதற்கு உதவ முடியும் எனவும் சீனா நம்புகிறது.

சீனாவால் பரிந்துரைக்கப்பட்ட ஆசிய உட்கட்டுமான முதலீட்டு வங்கியானது அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. கடந்தவாரம் வரை இந்த வங்கியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 57 ஆகம். அமெரிக்கா, யப்பான், கனடா ஆகிய நாடுகளைத் தவிர பொருளாதார வலுமிக்க மிகவும் அதிகமான நாடுகள் இந்த வங்கியில் அங்கம் வகிக்கின்றன. சீனா தனது அயல்நாடுகளில் முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஆசிய உட்கட்டுமான முதலீட்டு வங்கியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு எவ்வித தடையும் சீனாவுக்கு இருக்காது.

பிறேசில், ரஸ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய அபிவிருத்தி வங்கியானது இதனைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

எந்தவொரு நாடும் தனது பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்வதற்கு எண்ணெய் வளம் மிகவும் தேவையான ஒன்றாகும். சீனாவானது உலகின் மூன்றாவது மிகப்பெரிய நிலக்கரி கையிருப்பைக் கொண்டிருப்பினும், சீனா தனக்குத் தேவையான நிலக்கரி, எண்ணெய் மற்றும் வாயு போன்றவற்றைப் பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்கின்றது.

ஏன் சீனா நிலக்கரியை இறக்குமதி செய்கிறது? சீனா அவசரமாகத் தேவைப்படுகின்ற எண்ணெய் வளத்தை சேமிப்புச் செய்கின்ற நாடாக உள்ளதால் இதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிலக்கரி போன்றவற்றை இறக்குமதி செய்கிறது.

பெரும்பாலான எண்ணெய் மற்றும் வாயு ஏற்றுமதி நாடுகளுடன் சீனா மூலோபாயப் பங்காளி உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் இதனால் தனக்குத் தேவையான நிலக்கரிகளை இறக்குமதி செய்ய முடிகிறது.

சீனாவானது உலகின் அதிகூடிய மீட்கத்தக்க கனிம வாயு ஒதுக்கங்களைக் கொண்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது இன்னமும் பயன்படுத்தப்படவில்லை. இதனால் சீனாவின் எதிர்காலத் தேவைக்கு இதனைப் பயன்படுத்தலாம்.

1979லிருந்து சீனாவின் வளர்ச்சியானது தற்செயலாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. இது மிகவும் திட்டமிடப்பட்டு தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சீனாவின் வெளியுறவுக் கோட்பாடானது இதன் பாதுகாப்பு, மூலோபாய மற்றும் பொருளாதாரத் தேவைகளை மிகத் திறமையான வழியில் முகங்கொடுப்பதற்கேற்ப வரையறுக்கப்படுகிறது.

இந்தியா தனது வலுமிக்க அயல்நாடான சீனாவிற்குச் சவாலாக விளங்க முடியும் என நம்பிக்கை கொண்டிருந்தால் சீனாவின் இத்தகைய வளர்ச்சியைக் கருத்திற்கொள்வதுடன், இதனுடைய வெளியுறவுக் கோட்பாட்டிற்கு ஒத்ததாக தனது கோட்பாட்டையும் இந்தியா வடிவமைத்துக் கொள்ளவேண்டும்.

இல்லாவிட்டால், சன் சூ எச்சரித்தது போன்று, சண்டையின்றி யுத்தம் தோற்கடிக்கப்படும்.

puthinappalakai.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## அந்தரங்க படங்கள் எடுக்கும் Iphone



Iphone மூலம் ரகசியமாக நிர்வாணப் படங்கள் எடுக்கும் புதிய அப்பிளிகேஷன் ஒன்று வெளியாகியுள்ளது. மக்கள் மத்தியில் பிரபலமாகி வரும் ஐபோனில் ஆபத்தான வகையில் நோமாவோ ("Nomao") என்ற Application வெளியாகியுள்ளது. இந்த அப்பிளிகேஷனை Open செய்து ஒருவரை புகைப்படம் எடுக்கும்போது, அவர்களின் ஆடைகள் தெரியாது, மாறாக அவர்களுடைய அந்தரங்க உறுப்புகளே தெரியும். Iphone மற்றும் Nokia n95 போன்ற அதிநவீன மொடல் கைப்பேசிகளில் மட்டுமே இந்த அப்பிளிகேஷனை Install செய்ய முடியும்.

## இனி கடவுளின் படைப்பென கூறமுடியாது

மனித கரு முளையத்திலுள்ள கலங்களை மாற்றி அமைப்பதில் முதல் தடவையாக தாம் வெற்றி பெற்றுள்ளதாக குவாங்ஸோவிலுள்ள சன் யத் ஸென் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மேற்படி சர்ச்சைக்குரிய உயிரியல் தொழில்நுட்பமானது பிறக்கப் போகும் குழந்தைகளை முன்கூட்டியே வடிவமைக்கக் கூடியதாகும்.


இந்த தொழில்நுட்பத்தை பெற்றோர் தவறாக பயன்படுத்தி குறிப்பிட்ட மரபணுக்களை தமது வாரிசுகளுக்கு கடத்தப்பட தெரிவு செய்ய முயற்சிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## வயர்லெஸ் சார்ஜர்

ONb எனப் பெயரிடப்பட்டுள்ள 5000 mAh மின்சக்தியை பிறப்பிக்கவல்ல அப்பிளின் தயாரிப்பான iPhone களை வயர்லெஸ் முறையில் சார்ஜ் செய்வதற்கான சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதேவேளை Galaxy S6, S6 Edge, Google Nexus 6, Lumia 930 போன்ற கைப்பேசிகளையும் இச்சாதனத்தின் ஊடாக சார்ஜ் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதனை ஒரு மின்கலமாகவும் பாவிக்கமுடியும் என தெரிவிக்கப்படுகின்றது.



## HIV கருவி அறிமுகம்



BioSure HIV சுய பரிசோதனை சாதனம் எனப்படும் இக்கருவி 99.7 சதவீதமான நோய் குறித்த சரியான முடிவுகளை தருவதாக நிருபிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனத்தை பயன்படுத்தி 15 நிமிடத்தில் HIV கிருமி தாக்குதல் பற்றி தெரிந்துகொள்ள முடியும். கருத்தரிப்பு சோதனை போன்றே இதிலும் ரத்தத்தில் உள்ள Antibodies எனப்படும் நோய் எதிர்ப்பு மூலத்தின் அளவை பரிசோதனை செய்வதன் மூலம் HIV கிருமி தாக்குதல் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள முடியும்.

விரலில் இருந்து எடுக்கப்படும் ரத்த மாதிரிகளை சோதனை செய்யும் போது சாதனத்தில் இரண்டு ஊதா நிற கோடுகள் தோன்றினால் நோய் தாக்குதல் இருப்பதாக அர்த்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழக்குத்தாக்கல்

பாகிஸ்தானின் தென்பகுதியிலுள்ள ராவல்பிண்டி நகரில் வரையப்பட்டிருந்த விளம்பரம் ஒன்று கூகுள் நிறுவனத்தினை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

அதாவது Android Robo ஒன்று அப்பிள் லோகோவின் மீது சிறுநீர் கழிப்பது போன்று விளம்பரம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

இந்த விளம்பரம் கூகுள் மேப்பில் தென்படவே உடனடியாக கூகுள் நிறுவனம் அதனை மறைப்பு செய்துள்ளது. இம்முறையற்ற விளம்பரத்தினால் கூகுள் மீது அப்பிள் வழக்கு தொடரும் வாய்ப்புக்கள் காணப்படுவதாக தெரிகின்றது.



OTHER

## வயர்லெஸ் கையுறை



மேம்படுத்தப்பட்ட தொடுகை தொழில்நுட்பத்தினை கொண்டதும் Omni எனப்படும் இலத்திரனியல் கையுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கையுறையானது Virtual எனப்படும் மாயை தோற்றங்களைக் கொண்ட ஹேம் மற்றும் Digital Virtual World போன்ற தொழில்நுட்பங்களுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது வயர்லெஸ் தொழில்நுட்பத்தினையும் கொண்டுள்ளது.

## போனின் அடிமையா??

தற்போது உள்ள காலகட்டத்தில் ஸ்மார்ட்போன் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றிணைந்து விட்டது. இந்நிலையில் நாம் ஸ்மார்ட் போனுக்கு அடிமையாகி விட்டோமா என்பதை கண்டறிய சில வழிகளை ஒரு இணையதளம் வரிசைப்படுத்தியுள்ளது.

1) 60 நொடிக்கு ஒருமுறை ஸ்மார்ட் போனை பார்ப்பது.

2) டெம்பிள் ரன் அல்லது கேண்டி கிரஷ் போன்ற விளையாட்டுகளை அடிக்கடி விளையாடுவது.

3) வாட்ஸ் அப் போன்ற சேவைகளில் தீவிரம் காட்டுவது.

4) இயர்போன்களைப் பயன்படுத்துவது.

5) செல்்பிக்களை எடுப்பதில் தணியாத தாகம் கொண்டிருப்பது.

இந்த ஐந்து பழக்கங்கள் இருந்தால் அவர்கள் ஸ்மார்ட் போன் அடிமை என்று சொல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பழக்கங்கள் அதிகம் இருந்தால் அலட்சியப்படுத்தாமல் உடனே மாற்றிக் கொள்ளுங்கள்.

## குறுக்கெழுத்து புதிர் 058

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 அ | ■ | 1 அ | | கா | | 14 | | |
| 2 | 15 | | ■ | ■ | ■ | 3 | | ம் |
| 4 | | ர | | | | | ம் | ■ |
| | 5 | | தோ | | | ■ | 6 | |
| 7 டி | | | ■ | ■ | ■ | 8 ப | | |
| | | ■ | ■ | ■ | 16 | | | 17 |
| 9 | | | | ■ | ல | | ம் | |
| | 10 ச | | | ■ | | | ■ | |
| 11 | | | வ | | 12 | | ய | |

### இடமிருந்து வலமாக

1. எதையும் செய்து முடிப்பவன்
2. மாலை நேரம் -குழம்பியுள்ளது
3. கொலை
4. தழை, குழை உண்பது
5. சுயம்பு
6. தண்ணீர் தேங்கி நிற்பது
7. தோற்கருவியொன்றின் ஆங்கிலச் சொல்
8. இது தப்பினால் சோறு குழைந்துவிடும்
9. கிருஸ்ண பறவை
10. எதையும் கடத்தாத பொருள்
11. பெரியவனுக்கு எதிர்ச்சொல்
12. விசம் நிறைந்த பாம்பு

### மேலிருந்து கீழாக

6. அதிகமாக உண்டால் வரும் மயக்கம் - குழம்பியுள்ளது
8. யன்னலின் தமிழ்ச் சொல்
9. மக்கள் சேர்ந்து ஆதரவளித்து உருவாக்குவது
13. கண்டங்களில் ஒன்று
14. குதிரை வண்டில்
15. யேசு, புத்தன் போன்றேரைச் சொல்லும் பொதுச் சொல்
16. கண்ணகி எதிர்த்தது
17. தான்தோன்றீஸ்வரரின் 10ம் நாள் திருவிழா செய்யும் மக்களின் கோத்திரம்

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 07.05.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 057 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | ர் | ம | ம் | ■ | 2 பா | 15 ல் | சோ | று |
| 3 வ | தா | அ | ர் | ■ | 4 ம் | ட | 16 கு | ■ |
| 5 சி | வ | னொ | 13 ளி | 14 பா | த | 17 ம | லை | ■ |
| வ | ■ | ■ | ள் | ண் | ■ | னை | ■ | 20 ந |
| ரா | ■ | 6 வி | 18 க | ட | க | 19 வி | 7 ஆ | ண் |
| த் | 8 ரா | ஐ | த | வ | ம் | ளை | ■ | பே |
| 9 தி | ப் | 21 பி | லி | ர் | ■ | யா | ■ | ன் |
| ரி | ■ | 10 கு | ந் | தி | ■ | ட் | ■ | டா |
| 11 க | ச | க் | கி | ■ | 12 க | டு | கு | ■ |

### பாராட்டு பெறுவோர் :

*திரு. கே. புவனஹரி*
*பாலையூற்று*

*திருமதி. கே. கனகபதி*
*4ம் குறுக்குத் தெரு*

*திருமதி. காளிராசா. எம்*
*லோவர் வீதி, திருகோணமலை*

*திரு. மனோகரன். கே*
*32/4, மத்தியவீதி, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்
## காஞ்சனா 2

### இயக்குனர் ராகவா லோரன்ஸின்
### லோரன்ஸ், டாப்சி நடிக்கும்



முனி, காஞ்சனா படத்தில் என்ன கதையோ அதே தான் இந்த காஞ்சனா-2 இலும். தொலைக்காட்சி நிகழ்ச்சியின் ஒளிப்பதிவாளராக லாரன்ஸ், அதே டிவியில் நிகழ்ச்சி இயக்குனராக டாப்ஸி. போட்டிகள் காரணமாக தாங்கள் வேலை செய்யும் தொலைக்காட்சியின் TRP 2ம் இடத்திற்கு வர, இதை முதல் இடத்திற்கு கொண்டு வர டாப்ஸி ஒரு யோசனை சொல்கிறார். பேய் இருக்கா? இல்லையா? கான்செப்ட் தான், ஒரு பாழடைந்த பங்களாவிற்கு இவர்கள் சென்று பேய் சம்மந்தமான ஒரு நிகழ்ச்சியை உருவாக்குகிறார்கள், இதில் யதார்த்தமாக டாப்ஸி அந்த இடத்திலிருந்து ஒரு தாலியை எடுக்க, பேய் அவர் மேல் ஏறுகிறது, அதிலிருந்து லாரன்ஸை சிவா சிவா என்று கூப்பிட்டு, அடி பின்னி எடுக்கிறார். சில நிமிடங்களிலேயே சிவா என்கின்ற ஆத்மா லாரன்ஸ் உடம்பில் ஏற, அவர் கோவை சரளாவை டார்ச்சர் செய்து நம்மை வயிறு புண்ணாகும் படி சிரிக்க வைக்கிறார். கோவை சரளா, பயந்து ஒரு பாதிரியாரிடம் சொல்ல, வழக்கம் போல் இந்த ஆத்மாக்களை வரவழைத்து, அதன் குறைகளை கேட்க, விரிகிறது ஒரு கதை.

இதில் மொட்டை சிவாவாக லாரன்ஸ், ஊனமாக இருக்கும் நித்யா மேனனை காதலிக்கிறார். இவர்கள் எப்படி இறந்தார்கள், இதற்கு எப்படி பழிவாங்கினார்கள் என்பதே மீதிக்கதை.

டாப்ஸி கிளாமர் ஆக்டிங் என கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்தியுள்ளார். யார் என்ன செய்தால் என்ன? எப்படி நடித்தால் என்ன? கோவை சரளா, லாரன்ஸுக்கு சப்போர்ட் கொடுக்கும் போதும் சரி, அடி வாங்கி பயந்து ஓடும் நேரத்திலும் சரி, இவரை மட்டும் வைத்து இன்னும் எத்தனை முனி வேண்டுமானாலும் எடுக்கலாம். லாரன்ஸ் கையில் எடுத்த திகில், நகைச்சுவை கான்செப்ட் இதிலும் ஓகே ஆகியுள்ளது.

முந்தைய பாகத்தில் நடித்த அனைத்து நடிகர்களும் ஏதோ ஒரு காட்சியில் எட்டிப்பார்க்கிறார்கள், எல்லோரும் பயந்து நம்மை சிரிக்க வைத்து செல்கின்றார்கள்.

மொத்தத்தில் எப்படியோ திகில், நகைச்சுவையுடன் காஞ்சனா – 03 ஐ ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்க்க வைத்து விட்டார்.



## ஹாட்ரிக் ஹீரோயின்

ஒரு பந்து நாலு ரன் ஒரு விக்கெட் படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு பேயாக அறிமுகமாகிய ஹாசிகா தத் குணச்சித்திரம், நகைச்சுவை என எந்த கதாபாத்திரத்தை கொடுத்தாலும் அதை சிறப்பாக நடித்து கொடுப்பவர். இந்த நிலையில் தெலுங்கு முன்னணி இயக்குனர் டி.வி.கே நாகேஷ்வரராவ் இவரை வைத்து வளையம் எனும் புதிய படத்தை தமிழ், தெலுங்கு, கன்னடம் என மூன்று மொழிகளிலும் தயாரிக்கவுள்ளார்.

## • இட்டாரா ரம்யா

ரம்யா சின்னத்திரையிலேயே அனைவரையும் கவர்ந்தவர். பல விழாக்களிற்கு இவர் தான் தொகுப்பாளர். இவருக்கு, அப்ரஜித் என்பவருடன் கடந்த வருடம் திருமணமானது. ஆனால், அதற்குள் திருமண வாழ்வு சலித்து விட்டதா? என்று தெரியவில்லை, தன் கணவரிடம் விவாகரத்து கேட்டுள்ளாராம். தற்போது ரம்யா தன் அம்மா வீட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. சமீபத்தில் இவர் ஓ காதல் கண்மணி படத்தில் குணச்சித்திர ரோலில் நடித்துள்ளார். வேறு சில படங்களிலும் நடிக்க கமிட் ஆகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அப்பாவாகும் விவேக்

இயக்குனர் கஸ்மோராவின் படத்தில் நடிகர் விவேக், ஹீரோ கார்த்தியின் அப்பாவாக நடிக்கிறார். கோகுல் கஸ்மோராவின் இயக்கத்தில் அதிக பட்ஜெட்டில் தயாராகிறது. படத்தின் கதாநாயகியாக நயன்தாரா நடிக்கவுள்ளார். இதற்குமுன் விவேக் அப்பா கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும், மகனாகவும் அவரேதான் நடித்திருப்பார் கஸ்மோராவின் படத்தில்தான் முதல்முறையாக ஒரு ஹீரோவுக்கு அப்பாவாக நடிக்கிறார்.

## கிறிஸ்தவத்தை தழுவும் நயன்



ஜீவாவுடன் சேர்ந்து நயன் அடுத்ததாக நடிக்கவுள்ள படம் திருவிழா. இதில் கிறிஸ்தவ பெண்ணாக நயன் வரவிருக்கும் நயன் ஆரம்பத்தில் சற்று தங்கிய வேளையில் இயக்குனர் தயாரிப்பாளர் சௌத்திரியின் உதவியுடன் நயனை சம்மதிக்க வைத்துள்ளனராம்.

## புதிய சர்ச்சையில் தளபதி

இளைய தளபதி விஜய் நடிப்பில் கடந்த வருடம் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற படமான கத்திக்கு சமீபத்தில் நடந்த விருது விழாவில் கண்டிப்பாக சிறந்த அல்லது மக்கள் விரும்பும் நடிகர் இதில் ஏதாவது ஒன்றில் விஜய்க்கு விருது கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் கத்தி படத்திற்கு விருது கொடுக்கப்பட்டது, விஜய்க்கு கொடுக்கப்படவில்லை. இதற்கு முக்கிய காரணமாக படத்தில் விஜய் பல இடங்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை சுட்டிக்காட்டுவார். இவை பெரும்பாலும் விருது விழாவை நடத்திய தொலைக்காட்சியை தான் சொல்லியுள்ளார் ஆகவே தான் கிடைக்கவில்லை என புது சர்ச்சை கிளம்பியுள்ளது.

மனிரத்தினத்தின் இயக்கத்தில் வெளியான "ஓ காதல் கண்மணி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## சொத்துக்கள் பறிமுதல்

தமிழ் சினிமாவில் பல பிரமாண்ட படங்களை தயாரித்தவர் ரவிச்சந்திரன். இவர் தயாரிப்பில் இந்த வருடம் ஐ என்ற மாபெரும் பிரமாண்ட படம் வெளிவந்தது. மேலும், இவர் தயாரிப்பில் விஸ்வரூபம்-2, பூலோகம் என பெரிய பட்ஜெட் படங்கள் வெயிட்டிங். இந்நிலையில் இவர் இந்த படங்களுக்காக வாங்கிய கடன் ரூ 97 கோடி வரை மீதம் உள்ளது. இதனால் பிரபல வங்கி இவருடைய அலுவலகம், வீடு, திரையரங்குகள் ஆகியவற்றை



## பிறந்ததின பரிசு

அஜித்தின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பல இடங்களில் போஸ்டர், பேனர் என ரசிகர்கள் கலக்கி வருகின்றனர். இந்நிலையில் சிம்பு, அஜித்தின் தீவிர ரசிகர் என்பதால் இவர் நடித்த வாலு படத்தின் ட்ரைலர் 2வை அஜித்தின் பிறந்த தினமான நேற்று வெளியிட்டுள்ளார். இதில் அஜித் குறித்து சில காட்சிகள் இடம்பெறுகின்றதாம். இதை தான் தல பிறந்தநாள் பரிசாக சிம்பு கொடுக்கவுள்ளதாக கூறப்படுகிறது.



இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் THALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 51

# இப்பூலகில் ஏன் வாழ விரும்புகின்றோம்



நாம் வாழும் இப் பூவுலகம் விடுவிக்கப்பட முடியாத பல சூட்சுமங்களை தன்னகத்தே கொண்டது. இப் பகுதியில் பிரசுரமான (வாழ்வியல் - 40) 'விஞ்ஞானம் எதனை தேடுகின்றது' என்ற கட்டுரை இது பற்றி ஆராய்ந்தது. அக்கட்டுரையில் குறிப்பிட்ட புதிர்களுக்கப்பால் இப் பூவுலகில் வாழ நாம் ஏன் விரும்புகின்றோம் என்ற வினாவுக்கு விடை காண்பது மிக கடினமானதாக உள்ளது. சற்று சிந்தித்து பாருங்கள். எத்தனை எத்தனை இயற்கை அனர்த்தங்கள், நோய்நொடிகள், வன்செயல்கள், அத்துமீறல்கள், யுத்தங்கள், பொருளாதார கஷ்டங்கள், அத்தனைக்கு மத்தியிலும் இப்பூவுலகில் வாழ வேண்டும் என்ற அவா சிறுவர் முதல் முதியோர் வரை எவரிடமும் கிஞ்சித்தும் குறைந்து காணப்படவில்லை. ஏன் என்பதை ஆராய்வதற்கு முன்பு நாம் ஓர் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நாம் வாழ வேண்டும் என்ற விருப்பம் உயிரினங்களின் நீட்சிக்காக இயற்கையின் திட்டமிடப்பட்டதும், இரகசியம் பேணப்படுவதுமான ஒரு செயற்பாடாகும். அந்த இரகசியத்தை எம்மால் உடைக்க முடியாதிருப்பதில் தான் இயற்கையின் வெற்றி தங்கியுள்ளது.

எனவே தான் அன்று தொட்டு இன்று வரை மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்கள் அனைத்துமே வாழவேண்டுமென்ற தளையிலிருந்து விலகமுடியாதிருக்கின்றன. இருப்பினும் இவ் விடயத்தில் வெளிப்படையான காரணிகளை இக்கட்டுரை ஆராயும்.

இறைவனை பேரான்மா என்றும், எம்மை சிற்றான்மா என்றும் வேதங்கள் கூறும். இறைவன் அனைத்தும் அறிந்தவன். நாம் இறைவனின் அம்சமாக இருப்பினும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களால் கட்டுண்டு இருக்கின்றோம்.

நான் என்கின்ற அகங்காரமும், எனது என்கின்ற மமகாரமும் சேர்ந்து தான் எமக்கு இந்த வாழ்க்கையில் பற்றினை ஏற்படுத்தி விடுகின்றன. ஆசையானது துன்பங்கள் அனைத்திற்கும் காரணமாக இருந்தாலும் நாம் புலன்கள் வழியே இழுத்துச் செல்லப்படுவதை எம்மால் கட்டுப்படுத்த முடிவதில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவையே ஐம்புலன்கள் ஆகும்.

'மெய்' மூலம் நாம் இந்த உலகில் உள்ள பொருட்களை ஸ்பரிசிக்கின்றோம். மலர்களின் மென்மை எமக்கு இதம் தருகின்றது. சிறு குழந்தைகள் ரெலிபியர் பொம்மையை கட்டிப்பிடித்து மகிழ்கின்றனர். தென்றல் எம்மை தழுவி செல்கின்றது. நீரூற்றில் ஆரச்சோர குளிக்க விரும்புகின்றோம். உடலுக்கு இதம் அளிக்கும் அனைத்துமே எமது கவலைகளை மறக்கடிக்க செய்து வாழ்வில் மேலும் மேலும் பற்றினை அதிகரிக்கின்றது.

'வாய்' எமக்கு ருசியை உணர்த்துகின்றது. பல வகை குடிபானங்களுக்கு மனிதர் பலர் அடிமையாகிப்போயுள்ளார்கள்.

'கண்'தான் புலன்களிலேயே சக்தி மிக்கது. தூங்கும் நேரம் தவிர மற்ற நேரம் எல்லாம் எமது கண்கள் எமக்கு மட்டற்ற புலன் இன்பத்தை தருகின்றது. பலர் இயற்கை காட்சிகளில் மெய்மறப்பதை காட்டிலும் வெள்ளித்திரை, சின்னத்திரைகளில் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

'மூக்கு', எந்த பொருளையும் எம்மால் வாசனையை கொண்டு உணரமுடியும். பெண்கள் அணியும் மல்லிகை வாசனை வாழ்க்கையுடன் சேர்த்து கட்டிப்போடுகின்றது.

'செவி' 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' என்று புகழ் பெற்றது. யாழினிது, குழலினிது, மழலைச் சொல் இனிது என்பதை யாராலும் மறுக்க இயலாது. சுசிலாவின் பாட்டு முதல் சுஜாதாவின் பாட்டு வரை சௌந்திரராஜன் பாட்டு முதல் பாலசுப்பிரமணியம் பாட்டு வரை எம்மை கவர்ந்து வைத்திருக்கின்றன. 'சுப்பர் சிங்கர்' பாராமல் யாராவது தூங்குவார்களா?

ஐம்புலன்களும் எம்மை எப்படி வாழ்க்கையின் பால் ஈர்த்துவைத்திருக்கின்றது என்று பாருங்கள்! இவை பொதுவான ஆசைகள். இனி தனித்தனி ஆசைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் வேறு வேறானவை.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியனவற்றில் மனிதனுக்கு அளவற்ற வேட்கை இருக்கின்றது. மனை வாங்க வேண்டும் பொன்னும் பணமும் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே தமது வாழ்நாளையே செலவழித்தவர்கள் உண்டு. மற்றவர்களை காட்டிலும் மேலாக வாழ்வின் உச்சத்தை தொட வேண்டும், பெரிய பதவியில் அமர வேண்டும், பேரும் புகழும் கிட்ட வேண்டும், இதற்காகவே எத்தனை போட்டி பொறாமைகள், சூது வாதுகள், கபடங்கள் இவற்றையெல்லாம் கைவிட்டு இப் பூவுலகை விட்டு விலகிச் செல்ல மனம் ஒப்புமா?

இனி வாழ்க்கை ஓட்டத்தில் எமக்கு பகைவர்கள் இல்லாமல் இருக்க மாட்டார். சிந்தித்து பாருங்கள். நாமாகவே வாழ்ந்தது போதும் என்று தீர்மானித்தால் கூட எமது பகைவர்கள் எம்மை தமக்கெதிராக தூண்டிக் கொண்டே இருப்பார்கள். அவர்களை எதிர்த்து செயற்படுவதும், அவர்களுக்கு காய் வெட்டுவதுமே எமது பெரும் கடமையாக போய்விடும்.

ஒவ்வொருவருக்குமே அவரவர் மேல் அன்பு பாசம் அக்கறை காட்டிய பெற்றோரும் உற்றோரும் இருக்கவே செய்வார்கள். நாம் வாழ்க்கையின் முன்னேற்ற படிகளில் இருக்கும் போது அவர்கள் வாழ்ந்து ஓய்ந்துவிட்டிருப்பார்கள். அவர்கள் நோய் நொடிக்கு இலக்காகியிருப்பார்கள். அந்த அன்பு உள்ளவர்கள் மேல் பாசமும், பரிவும் காட்ட வேண்டியது எமது கடமை அல்லவா? அதை விடுத்து நாம் இந்த உலகை விட்டு போய்விட எண்ண முடியுமா? சற்று சிந்தித்து பாருங்கள்.

எமது கல்வியை வெற்றிகரமாக முடித்து நல்ல தொழிலை பெற்றுக்கொண்டதும் எமது சிந்தனை எமக்கான துணையை தேடுவதில் திரும்பும். அழகான குணமான நல்ல தொழில் புரியும் மனைவி/கணவன் எமக்கு கிட்ட வேண்டும் என்ற ஆசை உண்டாகின்றது. பல சந்தர்ப்பங்களில் காதல் உண்டாகின்றது. அந்த நேரங்களில் இந்த பூவுலகே சொர்க்கமாக தெரிகின்றது. யாராவது பிடித்து கழுத்தை நெரித்தால் கூட இந்த பூவுலகை விட்டுச் செல்ல நாம் சம்மதிப்போமா?

எமது துணையை அமைத்துக்கொண்டதும் பிள்ளைகளை பெற்றெடுக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகின்றது. குழந்தைகள் கிடைத்ததும் அவர்கள் மீது அன்பும், பாசமும் உண்டாகின்றது. எமது வாழ்க்கையை குழந்தைகளுக்காகவே செலவு செய்கின்றோம். அவர்களது கல்வி முயற்சிகளுக்கு உதவி செய்கின்றோம். அவர்களை உயர் நிலைக்கு கொண்டு வருகின்றோம். அவர்களுக்கு விவாகம் செய்து பார்த்து மகிழ்கின்றோம். திருப்தியா? இல்லவே இல்லை!

நாட்கள் செல்கின்றன. உடல் களைத்து விடுகின்றது. நோய்கள் ஒட்டிக்கொள்கின்றன. எழும்பவும் உட்காரவும் கஷ்டமாக இருக்கின்றது. போதுமா?

இல்லவே இல்லை! பேரப் பிள்ளைகள் வளர்வதை பார்க்க வேண்டும். அவர்கள் ஆளாவதை பார்க்க வேண்டும். பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவை பார்க்க வேண்டும். பேரன் பேத்தியின் விவாக வைபவத்தை பார்க்கவேண்டும்.

உன்னால் தான் முடியாதே அப்பா... இப் பூவுலகை விட்டு போய்விடு. அப்படி சொல்லாதீர்கள். ஒழுங்காக 'மெடிக்கல் கிளினிக்' போகின்றேன். மருந்து குடிக்கின்றேன். உடற் பயிற்சி செய்கின்றேன். இன்னும் பத்து வருடமாயினும் இப் பூவுலகில் வாழ வேண்டும். எப்படி இருக்கின்றது என்று பாருங்கள்.

நாசா 2024ல் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்க்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. இது ஒரு வழிப்பயணம். போக முடியும். திரும்ப முடியாது. பயணத்திற்காக உலகளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டோரில் கேரளப் பெண்ணான ஷ்ரதா பிரசாட் என்ற (19) மாணவியும் ஒருத்தி. செவ்வாய் கிரகத்தின் தட்ப வெப்ப சூழ்நிலைக்கு 68 நாட்கள் மட்டுமே அங்கு உயிர் வாழ முடியும். அப்படி இருந்தும் அவள் இப்பூவுலகை விட்டு பிரிய சம்மதித்துவிட்டாள். ஆச்சரியம் தான். ஆனால் இதைப்பற்றி துருவி ஆராய்ந்த போது தான் அவள் வாயால் ஒரு உண்மை வெளி வந்தது. 2024ற்கு இன்னும் 9 வருடகாலம் இருக்கின்றது. அதற்குள் தொழில் நுட்பம் முன்னேற்றமடைந்து இரு வழிப்பயணம் சாத்தியமடைய கூடுமாகையால் தன்னால் இப் பூவுலகிற்கு திரும்பி விட முடியும் என்று நம்புகின்றாள். இப் பூவுலகின் மீது எப்பேற்பட்ட பேராசை என்று பாருங்களேன்!

(வி. என். சந்திரகாந்தி)



# "நெருப்பணைத்த கதைகள்"

சஞ்சயன் செல்வமாணிக்கம்

**சில** மாதங்களுக்கு முன்பொருநாள் நோர்வே வெளிநாட்டவர் திணைக்களத்தினருகில் நடந்து கொண்டிருந்தேன். வழியெங்கும் காவல்துறையினர், தீயணைப்புப்படை, அவசர வைத்திய உதவி வாகனங்கள் நிறுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. தீயணைப்புப்படை வீரர்கள் விரைந்து செயல்பட்டார்கள். தண்ணீரை பாய்ச்சும் குழாய்கள் வீதியெங்கும் இழுத்து விடப்பட்டன. ஒரே பரபரப்பாக இருந்தது சுற்றாடல்.

ஆனால் அசம்பாவிதம் ஏதும் நடந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ஏதும் பயிற்சியாக இருக்கும் என்று நினைத்தபடியே நடக்கத் தொடங்கும் போது ஒரு மனிதர் இருட்டான பகுதியில் இருந்து மிக வேகமாக ஓடிவந்து தனது மொழியில் ஏதோ உரக்கச் சொல்லியபடியே தனக்குத் தானே தீவைத்துக்கொண்டார். அவர் ஓடி வருவதை கண்டு தீயணைப்புப்படை வீரர்களும், காவல்துறையினரும் அவரை மடக்கிப் பிடிப்பதற்குள் தனக்குத் தானே தீவைத்துக்கொண்டார் அவர். சில கணப்பொழுதுகளுக்குள் தீயணைக்கப்பட்டு, எரிந்த நிலையிலிருந்த மேலாடைகள் களைக்கப்பட்டு கம்பளியினால் போர்க்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச்சொல்லப்பட்டார். மறுநாள் பத்திரிகையில் தற்கொலை முயற்சியொன்று கிடைத்த தகவலின் அடிப்படையில் உயிரிழப்பு இன்றி தவிர்க்கப்பட்டது என்றிருந்தது.

தீ எனது வாழ்விலும் பல முக்கிய சம்பவங்களை தந்து போயிருக்கிறது. ஏனோ அந் நிகழ்வுகள் இந்த தற்கொலை முயற்சியை கண்ணுற்ற பின் மனதில் அலைமோதின. அவை சம்பந்தமான நினைவுகளே இனி வருபவை.

சிறுவயதில் தீயின் ஆபத்து புரியாத காலங்களில் அது ஒரு விளையாட்டுப்பொருளாய், ஆர்வத்தைத் தூண்டும் மர்மப்பொருளாய் இருந்திருக்கிறது, எனக்கு. பேப்பரில் சுற்றிய சிகரட்டில் ஆரம்பித்தது தீயுடனான விளையாட்டு. ஒரு முறை இதற்காகவே எனது தந்தையார் என்னை குற்றுயிராக்கினார். அதன் பின் பேப்பர் சிகரட் நினைவில் இருந்து மறந்து போனது. அதனாலோ என்னவோ இன்றுவரை சிகரட் என்னுடன் நட்பாகாமலே இருக்கிறது.

எனக்கு 12 வயதாயிருக்கும் போது எமது வீட்டில் ஒரு களஞ்சிய அறை இருந்தது. நெல், அரிசி, ஏனைய உணவுப்பொருட்கள் ஆகியவை அங்கிருந்தன. அக்காலங்களில் மண்ணெண்ணை ஒரு வித தகரத்திலான கொள்கலனில் விற்கப்பட்டடது. (கலன் என்று அதை அழைத்தார்கள்). அப்படியானதொரு கலன் எமது களஞ்சிய அறையில் இருந்தது. விளையாட்டாக கலனின் மூடியைக் களற்றி நெருப்புக் குச்சியை பற்றவைத்து அதனுள் போட்டேன். கண்மூடி முளிப்பதற்குள் தீப்பிடித்துக் கொண்டது. பயத்தில் அதை தட்டிவிட்டேன். களஞ்சிய அறைமுழுவதும் மண்ணெண்ணை வழிந்தோட தீயும் பரவ வீட்டை விட்டு ஓடி காட்டுக்குள் ஒளிந்துகொண்டேன்.

பலர் கூடி தீயை அணைத்தார்கள். எனது விஞ்ஞான ஆராய்ச்சியை எனது தாயார் கண்டிருக்கிறார். அதை நான் காணவில்லை. தீயை அவர்கள் அணைத்த பின் எதுமறியாதவன் போல் வீடு திரும்பியபோது அம்மா காதைத்திருகி அப்பாவிடம் சொல்வேன் என்றதும் "குற்றத்தை ஏற்றுக்கொண்டேன்". ஆனால் அம்மா பொய் சொல்கிறார் என்று எப்படியோ அப்பா கண்டுபிடித்து என்னை ஓட ஓட கலைத்துக் கலைத்து அடித்தார். அதன் பின் தீயுடன் நான் விளையாடுவது நின்று போனது.

எனது தந்தையார் கரும்புத் தோட்டம் வைத்திருந்தார். அவர் தனது கரும்புத் தோட்டத்திற்கு பசறை என்னும் இடத்தில் இருந்து திருச்செல்வம் என்னும் ஒரு இளைஞனை காவலுக்கு அமர்த்தியிருந்தார். திருச்செல்வம் மிகவும் சுறு சுறுப்பானவர். கரும்புத் தோட்டத்தின் எல்லையில் இருந்த ஒரு உயரமான மரக்கிளையில் ஒரு கொட்டிலை அமைத்து அங்கிருந்தபடியே கரும்புத் தோட்டத்தை கவனித்துவந்தார். நானும் விடுமுறை நாட்களின் போது அந்தக் கொட்டிலிலேயே காலம் கடத்தி வந்தேன். இரவினில் பந்தமெரித்து யானைகளிடம் இருந்து கரும்புக்காட்டை பாதுகாப்பதாய் திருச்செல்வம் கூறுவார். நான் வாயைப் பிளந்தபடியே அவரின் கதைகளைக் கேட்டுக்கொண்டிருப்பேன்.

ஓர் நாள் மாலை நேரம் திருச்செல்வம் உயிர் போகிறது போன்ற வேகத்துடன் ஓடிவந்தார். கரும்புத்தோட்டம் எரிகிறது என்றார். அப்பா என்னை வாடா என்றபடியே திருச்செல்வத்தின் பின்னால் ஓடினார். திருச்செல்வத்தின் வேகத்துக்கு அப்பாவால் ஈடுகொடுக்க முடியவில்லை. மூச்சிரைத்தபடியே பெருத்த உடலை தாங்கிய படி அவர் ஓடியது எனக்கு சிரிப்பாய் இருந்தது. வேறு பலரும் எம்முடன் இணைந்து கொள்ள கரும்புத் தோட்டத்தின் அருகில் ஆரம்பித்த காட்டுத்தீயை எல்லோருமாக மரக்கொப்புகளை ஒடித்து அவற்றின் உதவியினால் தீயினை அணைத்தோம்.

**தொடரும் மனசாட்சி...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுநடப்பு

# விரும்பத்தக்க மறுமணம்!!

களியால் செய்த பூனையாக இருந்தாலும் பரவாயில்லை அது எலி பிடித்தால் போதும். இது சிங்கள கிராமங்களில் பரவலாக பேசப்பட்டு வரும் ஒரு சிங்கள முதுமொழி. அவசரமான அல்லது ஆபத்தான வேளையில் யார் கை கொடுக்கின்றார்களோ அவர்கள் என்றும் போற்றி உயர்த்தப்படுவார்கள். தங்கள் தேவை நிறைவேறினால் அதுவே போதும்.

சோலியன் குடுமி சும்மா ஆடாது, யாதும் காரணமாகத் தான். இது தமிழ் கிராமங்களில் பரவலாக பேசப்பட்டு வரும் ஒரு தமிழ் முதுமொழியாகும். சிலர் அவசரமான அல்லது ஆபத்தான வேளையில் உதவ முன்வருவார்கள். அந்தவேளையில் அவர்களின் உதவியை பெரும் உதவியாக நாம் கணிப்பது வழமை. ஆனால் அங்கு ஏதோவொரு காரணம் இலைமறை காயாக இருக்காமல் விடாது. தாம் செய்த உதவிக்காக எம்மிடமிருந்து எதிர்பார்ப்பது எம்மை அணுஅணுவாக சித்திரவதை செய்யும்.

சிவா அன்று மாணிக்க கங்கையில் நீராட சென்று நீரினால் அடித்துச் செல்லப்பட்டு அகால மரணமானான். அவனின் சடலம் சுமார் ஒரு வாரத்திற்குப் பின்னரே கடற்படையைச் சார்ந்த சுழியோடி வீரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு குழந்தைகளின் தந்தையான அவன் அப்பகுதியில் யாராலும் நேசிக்கப்பட்ட ஒருவன். மேலும் எந்தவித வம்பு தும்புகளுக்கும் போகாது தானும் தன் குடும்பமும் என அப்பகுதியில் அமைதியாக வாழ்ந்து வந்தவனே சிவா.

அழகுசாதனப் பொருட்களை தனது துவிச்சக்கர வண்டி மூலம் ஊரூராக சென்று விற்பனை செய்யும் சிவா ஓர் அங்காடி வியாபாரி ஆவார். அந்த வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே கமலாவுக்கும், அவனுக்கும் இடையே காதல் மலர ஆரம்பித்தது. அழகுசாதனப் பொருட்கள் என கூவிக்கொண்டு வீதி வழியாக செல்லும் போதே பல தடவைகள் படலையால் எட்டிப் பார்த்த கமலாவுக்கு அவன் தென்பட்டான்.

எப்படியோ அவளின் பெற்றோரின் சம்மதத்துடன் அப்பகுதி அம்மன் கோவிலில் வைத்து அவளுக்கு தாலியும் கட்டினான். இருவரும் சாதாரண குடும்பத்தை சார்ந்ததால் இரு வீட்டார்கள் மத்தியில் எவ்வித முறுகல் நிலையும் ஏற்படாது சகலதும் சுமூகமாக நிறைவேறின.

சிவா கடும் உழைப்பாளி என்பதால் தன் குடும்பத்துடன் தனிக்குடித்தனம் நடத்தி வந்தான். திருமணமாகி மூன்று வருடங்களுக்குள் அவன் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையுமானான். எவருக்கும் எவ்வித தொந்தரவும் கொடுக்கக் கூடாது என்கின்ற வைராக்கியம் அவனை நல்லதொரு குடும்பஸ்தனாக ஆக்கியதையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

கமலா பல தடவை பக்கத்து தெருவிலுள்ள பப்பட கம்பனிக்கு வேலைக்குப் போக அடம்பிடித்தாலும் சிவா அதற்கு இடமளிக்கவே இல்லை. நீ பிள்ளைகளை ஒழுங்காக பார்த்துக் கொண்டு வீட்டில் இருந்தாலே எனக்குப் போதும். எனக்கு முடியாத காலத்தில் நீ வேலைக்குப் போவதை பிறகு முடிவு செய்வோம் என அடிக்கடி அவளுக்கு கூறி வந்தான். இன்று அவளே அதை முடிவு செய்யவேண்டிய சூழ்நிலையை சிவாவின் அகால மரணம் உருவாக்கியிருந்தது. அவன் ஒரு அரசாங்க ஊழியனாக இருந்திருந்தால் இறுதிக் காலத்தில் அவனுக்கு ஓய்வூதியம் பணிக்கொடை என்றெல்லாம் கிடைத்திருக்கும்.

இற்றேல் யாதும் அரசசார்பற்ற நிறுனமொன்றில் அவன் வேலை செய்திருந்தால் அவன் சார்பில் ஊழியர் சேமலாப நிதியாவது அவளுக்குக் கிடைத்திருக்கும். சுய தொழில் என்பதால் சேமிப்பு என்பது அக்குடும்பத்தில் அறவே இருக்கவில்லை. அன்றாட உழைப்பில் இந்தக் காலத்தில் சேமிப்பை நினைத்துப் பார்க்க முடியாது.

சிவாவின் வீட்டாரும் கமலாவின் வீட்டாரும் எத்தனை நாட்களுக்கு அவளின் குடும்பத்தைக் கவனிப்பார்கள்? குழந்தைகளும் வளர வளர அவர்களின் வாழ்க்கைச் செலவும் அவர்களுடனேயே வளர்ந்தது. மேலும் பப்படக் கம்பனிக்குச் சென்று அவள் சம்பாதிப்பதில் எந்தவித நன்மையும் கிட்டவில்லை. அங்கு அவள் பெறும் வேதனம் போதுமானதாக இல்லை.

எனவே கமலா வீட்டுப் பணிப்பெண்ணாக மலேசியா செல்ல தீர்மானித்தாள். பிள்ளைகளை தனது மாமா, மாமியிடம் ஒப்படைத்து விட்டு அவள் பயணமானாள். அங்கு மூன்று வருட ஒப்பந்தத்தில் வேலை செய்ய வேண்டியிருந்தது. அரபு நாடுகளை விட மலேசியாவில் வீட்டு வேலைகள் கஷ்டமானவை இல்லை.

அவள் அங்கு அமைச்சர் ஒருவரின் வீட்டிலேயே பணிப்பெண்ணாக பணிபுரிந்தாள். அமைச்சர் ஓர் தமிழன் என்பதால் கமலாவின் மனம் கஷ்டப்படுமளவிற்கு அவர் நடந்துகொள்ளவில்லை. அவள் ஒரு தமிழ் பெண்ணாகவும், விதவையாகவும் இருந்ததால் எதுவித தொந்தவுகளும் அங்கு அவளுக்கு இருக்கவில்லை.

அவள் கை நிறைய சம்பாதித்தாலும் தனது குழந்தைகளுடன் ஒன்றாக வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் அவளை பெரிதும் பாதித்தது. ஒருமுறை அவள் விடுமுறைக்காக இலங்கை வந்திருந்த போது பெற்றோரும், உறவினர்களும் அவளை ஒருவாறு சம்மதிக்க வைத்து மறுதிருமணம் ஒன்றை செய்து வைத்தனர். அயல் கிராமத்தைச் சேர்ந்த குமரன் என்பவனே அவளை மறுமணம் செய்து கொண்டான்.

காதல் தோல்வியை பொறுத்துக் கொள்ள முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த குமரன் ஏன் நான் ஒரு விதவைக்கு வாழ்வளிக்கக் கூடாது என எண்ணியே கமலாவை மறுமணம் செய்து கொண்டான்.

குமரன் தன் மீதும், தன் குழந்தைகளின் மீதும் அன்பாக இருப்பது கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டாள் கமலா. கட்டட ஒப்பந்தக்காரனான அவனுக்கு எக்காலத்திலும் பணத்தட்டுப்பாடு இருந்ததே இல்லை. அதனால் அவர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை இருந்ததே இல்லை.

இருப்பினும் அவளை மலேசியா அமைச்சர் விட்ட பாடில்லை. தமக்கு இவளைப்போன்ற நம்பிக்கையான ஒரு பெண் கிடைக்க மாட்டாள் என கூப்பிட்டுக் கொண்டே இருந்தனர். அவர்களின் அன்புத் தொல்லையை தாங்க முடியாது மீண்டும் விமானம் ஏறினாள். எவருமே அவளின் பயணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவளது கணவனும் மிகவும் பொறுப்பான தலைனாகவும், கமலாவின் குழந்தைகளின் தந்தையாகவும் கடமையாற்றி வந்தான். அதன்பால் அவள் மீண்டும் மலேசியா சென்றாள். காலங்கள்



மாறுவது போன்று மனிதர்களின் குணங்களும் மாறுவது இயற்கை.

மலேசியா அமைச்சு வீட்டார் கமலாவின் சேவையை கவனத்தில் கொண்டு அவளது மாதாந்த சம்பளத்தை மேலும் அதிகரித்தனர். அவளின் பிள்ளைகள் வளர வளர தன் பிள்ளைகளின் மேல் பாசம் அதிகரித்தே சென்றது. மலேசியாவில் இருந்து கொண்டு வீட்டு நிலைமைகளை அறிந்து வந்தாள்.

**– பாலையூற்றான் –**

குமரனின் சில நடவடிக்கைகள் வழமைக்கு மாறாக இடம்பெறுவதையும் அவள் அறிந்து கொண்டாள். தற்பொழுது அவனின் தொழிலில் ஏற்பட்டு வரும் பாரிய சரிவே அவனது வழமையான நடவடிக்கைகள் மாறி வருவதற்கு காரணமாய் இருந்தது. அவனுக்கு குடிப்பழக்கம் அதிகரித்து வந்தமையால் வீட்டில் சொத்துக்கள் அழிந்து வந்தன. மீண்டும் இலங்கைக்கு செல்வதே நல்லது என யோசித்துக் கொண்டே படுக்கைக்கு சென்ற அவள் ஆழ்ந்த தூக்கத்திற்கு ஆளானாள். அன்று விடியுமுன் தன் அறைக் கதவை தட்டப்படும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தாள்.

அங்கு அவள் ஆச்சரியமான காட்சி ஒன்றைக் கண்டாள், அது கனவா நினைவா என்று கூட அவளால் உணர முடியவில்லை. அதாவது அவளது இரு பிள்ளைகளும் குமரனும் அவள் முன் நின்றனர். தாங்க முடியாத சந்தோசத்திற்குள் அவள் மூழ்கியதால் பேசமுடியாது மூச்சுத் திணறினாள்.

அவளது குடும்பத்தில் திடீரென வீசிய சூறாவளியால் பாதிக்கப்படவிருந்த அவளது வாழ்க்கை அமைச்சரின் உதவியால் மீண்டும் தலை தூக்கியது. அவர்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் அமைச்சரே செய்து கொடுத்தார்.

திடீரென வீசும் தென்றல் ரோஜாவை மட்டும் முத்தமிடுவதில்லை, அதன் முட்களையும் சேர்த்தே முத்தமிடும்.

இப்படியும் நடக்கலாம்

## இதற்கும் குழுவா?

ஆசிரியரின் அறையில், ஆசிரியர் மாணவியுடன் சல்லாபம் புரிவதை ஏனைய மாணவர்கள் கைத்தொலைபேசியில் பதிவு செய்துள்ளனர். இதனை-யடுத்து குறித்த ஆசிரியர் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பாடசாலையின் உடைய நன்னடத்தை குறித்தும் ஆசிரியரின் நடவடிக்கைகள் குறித்தும் விசாரணை செய்ய சீன அரசாங்கம் குழுவொன்றை நியமித்துள்ளது.

## இது கொலையா? தற்கொலையா?

நியூமெக்சிகோ மாநிலத்தில் உள்ள பம்பிள் பீ புட்ஸ் நிறுவனத்தில், ஜோஸ் மெலினா என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார். அந்நிறுவனத்தில் உள்ள 35அடி நீள அவனை அவர் சுத்தம் உள்ளிருந்து செய்துகொண்டிருந்துள்ளார். இதனை கவனிக்காத ஊழியர்கள், 5 ஆயிரத்து 443 கிலோ டுனா மீன்களை, அவனுள் வைத்து சுவிட்ச் ஆன் செய்தனர்.

2 மணிநேரங்கள் 270 டிகிரி அளவில் அவன் போடப்பட்டதனால் அவனுக்குள் மீனுடன் சேர்ந்து ஜோஸும் வெந்து இறந்துவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய காவல் துறையினர், அந்த நிறுவனம் மற்றும் ஊழியர்கள் இருவர் மீது விதிமீறல் குற்றச்சாட்டை பதிவு செய்துள்ளது.



## புதுப்புது திருட்டுகள்

அமெரிக்காவின் Weston Radio Shack என்ற மின்பொருள் கடைக்குள் வந்த ஒரு ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் நின்று பின்னர், யாராவது பார்க்கிறார்களா என கண்காணித்துக் கொண்டே அங்கு அடுக்கி வைக்கப்பட்டி-ருந்த ஒவ்வொரு பெட்டியாக எடுத்து அந்த பெண்ணிடம் கொடுக்க, அவர் கண் இமைக்கும் நேரத்தில் அனைத்தையும் தனது கீழ் ஆடைக்குள் மறைத்து தைக்கப்பட்டிருந்த விசேட பையிற்குள் மறைக்கிறார். ஆனால் அங்கு வைக்கப்பட்டிருந்த கமெராவில் பொருட்களை பெண் திருடுவது அம்பலமாக தெரிவதால், அவ்ஆதாரத்தை காட்டி காவல் துறை-யினரிடம் புகார் அளித்துள்ளனர்.



## சிறந்த தாய்



கருப்பின வாலிபரான பிரெட்டியை, விசாரணைக்காக காவல் துறையினர் அழைத்துச் சென்று கடுமையாக தாக்கியதில், பலத்த காயமடைந்த பிரெட்டி மருத்துவமனையில் பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் பால்டிமோர் பகுதியில் காவல்துறையினருக்கும் கருப்பின மக்களுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கலவரத்தில் ஈடுபடவிருந்த மகனை தாய் ஒருவர் அடித்து இழுத்து சென்றுள்ளதால் அத்தாயை "ஆண்டின் மிகச்சிறந்த தாய்" என பலரும் பாராட்டியுள்ளனர்.

## இறக்கும் தறுவாயில் திருமணம்

இந்தோனேசியாவில் போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டில் மரணதண்டனை நிறைவேற்றத்துக்குள்ளான 8 கைதிகளில் ஒருவரான அன்ட்றூ சானை மேற்படி தண்டனை நிறைவேற்றத்திற்கு முன் சிறைச்சாலையில் வைத்து திருமணம் செய்ததன் மூலம் பரபரப்பாக பேசப்பட்ட பெய்யன்தி ஹெரவிலா என்ற பெண் இந்தோனேசிய ஜாவா பிராந்திய இளவரசிகளில் ஒருவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. அன்ட்றூ சான் எந்நேரமும் மரணதண்டனை நிறைவேற்றத்துக்குள்ளாகக் கூடிய கைதி என்பதை தெளிவாக அறிந்திருந்த போதும் பெபி உடனடியாக அவரது காதலை ஏற்றுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**அரசியல் அலசல்**

# 19ஆவது திருத்தம் சாதனையா?

– –கே.சஞ்சயன்– –

- www.tamilmirror.lk -

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி எந்தளவுக்கு பெரும்பாலானோரால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாக இருந்ததோ, அதுபோலவே, கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் 19ஆவது திருத்தச்சட்டமும் எதிர்பாராத வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிறுபான்மை அரசாங்கம் ஒன்று, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள எதிர்க்கட்சியின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன், இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டது ஆச்சரியமான விடயமே. அதுவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கப் போட்டிக்கு மத்தியிலேயே இது நடந்திருக்கிறது.

19ஆவது திருத்த வரைவு முன்வைக்கப்பட்ட நாளிலிருந்தே, அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகள், வெளியிடப்பட்ட கருத்துகள், எதிர்க் கட்சியினரின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் உன்னிப்பாக அவதானித்த எவருக்கும், இந்த திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை ஊட்டியிருக்கவில்லை. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைத்து, நாடாளுமன்றத்தை வலுப்படுத்தும் வகையிலான நகர்வில் பெரியளவில் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்காவிட்டாலும், இந்த திருத்தச்சட்டம் அந்த முயற்சியில் சில

## நிறைற்றேறு அதிகாரத்தின் சில சிறகுகள் வெட்டப்பட்டு அளவுக்கு மிஞ்சி பறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

அடிகளை முன்நோக்கி எடுத்து வைத்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்த திருத்த வரைவு முன்வைக்கப்பட்டபோது, ஜனாதிபதியின் அதிகாரங்களை கணிசமாக குறைக்கும் அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், உயர் நீதிமன்ற வியாக்கியானத்தில் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தியே நிறைவேற்ற வேண்டும் என்று விதந்துரைக்கப்பட்ட பகுதிகளை இந்த திருத்தச் சட்டமூலத்திலிருந்து நீக்கியபோதே, பிரதான இலக்கில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பின்னர், திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்ட சட்டமூலத்தில் மேலும் மேலும் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இறுதியாக இரண்டாவது வாசிப்பின்போது, 174 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவை உள்ளடக்கப்பட்டதால், இந்த திருத்தத்தின் அடிப்படை அம்சம் குலைந்துபோனது.

எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகாரத்தில் சில பிரிவுகளை வலுவிழக்கச் செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது அரசாங்கம். 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கம் உருவாக்கிய குடியரசு அரசியல் யாப்பில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தொடர்பான பிரிவில் செய்யப்பட்டுள்ள முதலாவது மிகப்பெரிய மாற்றமாக இதனைக் கருதலாம். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிகளை உடைத்தும் பிரித்தும் மிரட்டியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டு, 18ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தார்.

அதன் மூலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்த பிரிவில் - ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடத் தகுதி பெற்றவர்கள் குறித்த விடயத்தில் திருத்தம் செய்யப்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியலமைப்பு, ஜனாதிபதிப் பதவியை இரண்டு தடவைகள் வகித்த ஒருவர், மூன்றாவது பதவிக்காலத்துக்காக தேர்தலில் போட்டியிடமுடியாது என்று கூறப்பட்டிருந்தது. அந்த விதிமுறையை 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தனக்காகவே மாற்றிக்கொண்டிருந்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதன் மூலம் அவர் மூன்றாவது முறை போட்டியிட்டுத் தோல்வியையும் தழுவிக்கொண்டார். மஹிந்த ராஜபக்ஷவின் அந்தப் பேராசையே அவரை இரண்டாவது பதவிக்காலத்தைக் கூட, முழுமையாக ஆட்சியில் அமர்ந்திருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இப்போது 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் ஜனாதிபதி பதவியில் இரண்டு முறை இருந்த ஒருவர், மூன்றாவது முறை போட்டியிடமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளது. அதாவது, மஹிந்த ராஜபக்ஷ கொண்டுவந்த 18ஆவது திருத்தம் நீக்கப்பட்டுள்ளது. அதைவிட, ஆறு ஆண்டுகள் என்றிருந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. இது, ஜனாதிபதி பதவியில் இனிமேல் அமரக்கூடிய எவரும் 10 ஆண்டுகளுக்கு மேல் அந்தப் பதவியில் அமர்ந்திருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள், அவரை நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியமற்றவராகவே வைத்திருந்தது. அந்த நிலை மாற்றியமைக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய நிலையை இப்போதைய திருத்தம் உருவாக்கியிருக்கிறது.

இதுவரை ஜனாதிபதிக்கு எதிராக, எந்தவொரு வழக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்ற நிலையே இருந்துவந்தது. ஆனால், இப்போது 19ஆவது திருத்தச்சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த அந்த சட்டப் பாதுகாப்பை நீக்கியிருக்கிறது. ஜனாதிபதிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு இந்த திருத்தம் வழிசெய்கிறது. தமக்கெதிராக வழக்கு தொடுக்கமுடியாது என்ற துணிச்சல் – கர்வத்தில் ஜனாதிபதி ஒருவர் எதையும் செய்யமுடியும் என்ற நிலைக்கு இதன் மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் நியமனத்தைக் கூட, ஜனாதிபதி தன்னிச்சையாக நியமிக்கலாம் என்ற நிலை மாற்றப்பட்டிருக்கிறது. பிரதமருடன் கலந்தாலோசித்தே, அமைச்சர்களை நியமிக்கலாம் என்று 19ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. மிக முக்கியமாக, நாடாளுமன்றத்தின் மீது ஜனாதிபதி ஒருவர் தனது அதிகாரத்தை பிரயோகிப்பதற்கும் 19ஆவது திருத்தம் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தியிருக்கிறது. 5 ஆண்டுகளைக் கொண்ட நாடாளுமன்றத்தை முன்கூட்டியே அதாவது, நான்கரை ஆண்டுகளுக்கு முன்னதாக ஜனாதிபதியால் கலைக்கமுடியாது என்று சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி ஒருவர், தனக்கு உடன்பாடில்லாத தன்னுடன் இணங்கிப்போகாத அல்லது மாற்றுக்கட்சி பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் அரசாங்கம் ஒன்றைக் கலைப்பதை தடுக்கிறது.

முன்னதாக ஓராண்டுக்குப் பின்னர், எந்த நேரத்திலும் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்ற நிலை இருந்துவந்தது. 2001ஆம் ஆண்டு தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறுகிய காலத்திலேயே கலைத்திருந்தார். 2004ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே அப்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இந்த நிலை இனிமேல் ஏற்படாது என்பதை 19ஆவது திருத்தச்சட்டம் உறுதிப்படுத்துகிறது. இதன் மூலம் நாடாளுமன்றத்தின் மீதான ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், வலுவற்றதாக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அமைச்சரவையின், அரசாங்கத்தின், நாட்டின் தலைவராகவும் முப்படைகளின் தளபதியாகவும் ஜனாதிபதியே பதவியில் இருக்கப்போகிறார். இது குறித்த சில திருத்தங்களும் முன்வைக்கப்பட்டபோதிலும், உயர் நீதிமன்றத்தில் வியாக்கியானத்தினாலும், எதிர்க்கட்சியின் அழுத்தங்களினாலும் அவற்றை கைவிடவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

முன்னதாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படும் என்றே வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள், ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கான அடிப்படையை கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைப்பது மட்டுமே இதன் நோக்கமாக இருந்தது. இதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை போலவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் தேர்தல்களில் வாக்குறுதிகளை கொடுத்திருந்தனர். ஆனால், அவர்களால் அதனைச் செய்யமுடியவில்லை என்பதை விட, செய்ய முயற்சிக்கவில்லை என்பதே உண்மை.

மஹிந்த ராஜபக்ஷவிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தபோதும், அவர் தனது அதிகாரங்களை வலுப்படுத்திக்கொள்வதற்கே பயன்படுத்திக்கொண்டாரே தவிர, நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு பயன்படுத்த நினைக்கவேயில்லை. ஏனென்றால், அந்த அதிகாரங்களில் அவர் நன்றாகவே ருசி கண்டிருந்தார். இப்போது நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கப் போராடும் சந்திரிகா குமாரதுங்கவும் கூட, தனது பதவிக்காலத்தில், இத்தகையதொரு அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவோ அல்லது அதிகாரங்களை குறைக்கவோ முனையவில்லை.

இப்போதுள்ள சிறுபான்மை அரசாங்கம், பெரும்பான்மை பலம் கொண்ட எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் இந்த திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது என்றால், சந்திரிகாவினால் அப்போதே அதனை செய்திருக்கமுடியும். ஆனால், அவரது அதிகார போதை அந்த துணிவை அவருக்கு கொடுத்திருக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி, அந்தப் பதவியில் அமர்ந்துகொள்ளும் எவரையும் சர்வாதிகாரியாகவே மாற்றிவிடும் வல்லமை பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடயத்திலும் அது நடந்துவிடுமோ என்ற அச்சம் பலருக்கும் வந்ததும் உண்மை. சிலர் அதனை வெளிப்படையாகவே கூறினர்.

அதிகாரத்துக்கு வந்த பின்னர், நிறைவேற்று அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியினரை தூண்டிவிட்டு, 19ஆவது திருத்தம் நிறைவேறுவதை தடுக்க முனைவதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) போன்ற கட்சிகள் வெளிப்படையாகவே சந்தேகம் வெளியிட்டிருந்தன. ஆனாலும், 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தனது முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதில் துளியளவும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.

இறுதிக்கட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷக்கு ஆதரவான தமது கட்சியினரை வழிக்கு கொண்டுவந்து, அவர்களையும் 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்த பெருமைக்கு அவரே முக்கிய காரணம். அதற்காக அவர் நாடாளுமன்றத்துக்குள் இருந்துகொண்டு நடத்திய போராட்டத்தை குறைத்து மதிப்பிட-முடியாது. அதிகாரத்தை விட்டுக்கொடுத்து, அரசியலமைப்பில் திருத்தம் செய்ய முன்வந்த முதல் ஜனாதிபதியாக அவர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

அதேவேளை, இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகவோ, ஜனநாயகம் முற்றாக வலுப்படுத்தப்பட்டு விட்டதாகவோ கருதமுடியாது. ஏற்கெனவே திட்டமிட்டது போன்று, அரசியலமைப்பு சபையை அரசியல் கலப்பற்றதாக - துறைசார் நிபுணர்களை மட்டும் கொண்டதாக உருவாக்கும் முயற்சி பலிக்கவில்லை. மீண்டும், அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு நியமனங்களை செய்யும்போது, அரசியல் ரீதியான தலையீடுகளுக்கு வாய்ப்புகள் இருப்பதை மறுக்கமுடியாது.

அரசியலமைப்பு சபை



விடயத்திலும் பிரதமரின் அங்கிகாரத்துடனேயே அமைச்சரவையை நியமிக்க முடியும் என்ற விடயத்திலும் கடைசிவரை நீடித்த இழுபறியால் 19ஆவது திருத்தமே நிறைவேற்றப்பட முடியாமல் போகும் நிலை ஏற்பட்டது. அந்தக் கட்டத்தில், வேறு வழியின்றி எதிர்க்கட்சியின் அழுத்தங்களுக்கு பணிவதை விட, வேறு தெரிவு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு இருக்கவில்லை.

சிறுபான்மை அரசாங்கம் ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளும்போது, இது போன்ற விடயங்களில் விட்டுக்கொடுத்தேயாக வேண்டியது கட்டாயம். இல்லாவிட்டால், 19ஆவது திருத்தம் முற்றாகவே முடங்கிப் போயிருக்கும். அதனாலேயே, பல விடயங்களில் தமது பிடிவாதங்களை தளர்த்தி, எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெற முனைந்திருக்கிறது அரசாங்கம். தாம் நினைத்ததை சாதிக்கமுடியாது போனாலும், இப்போதைக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய 19ஆவது திருத்தச்சட்டதை நிறைவேற்றியுள்ளதாக அரசாங்கத்தினால் காட்டிக்கொள்ள முடியும். ஆனால், இதன் முழுப்பலனை அடைவதற்கு மீண்டும் திருத்தங்களை செய்யவேண்டும் என்றும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், முழுமையாகவே அரசியலமைப்பை மாற்றப்போவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார்.

அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் மட்டுமன்றி, சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். அத்தகையதொரு மாற்றத்துக்கான சூழல் இப்போது இலங்கையில் இருக்கிறதா என்பது சந்தேகமே. என்றாலும், இப்போதைக்கு நிறைவேற்று அதிகாரத்தின் சிறகுகள் சில வெட்டப்பட்டு, அளவுக்கு மிஞ்சிப் பறக்கமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், இதன் பலனை அனைத்து மக்களும் அனுபவிக்கவேண்டுமாயின், அதற்கு அரசியலமைப்பில் இன்னமும் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு பொருளை விற்கும் போது அதன் குறித்த விலையில் 8சதவீத கழிவு கொடுக்கப்படுகின்றது. ரூ 360 இற்கு விற்கப்படும் ஒரு பொருளின் குறித்த விலையைக் காண்க.

02. ஒரு வட்டத்தின் ஆரை எவ்வளவாக இருக்கும் போது அவ்வட்டத்தின் பரிதியின் எண் பெறுமானம் அதன் பரப்பளவின் எண் பெறுமானத்திற்குச் சமனாக இருக்கும் எனக் காண்க

03. ஒரு பாத்திரத்தில் 8லீ எண்ணெய் உள்ளது இந்த எண்ணெய் 750மிலீ போத்தல்களில் நிரப்பப்படுகின்றது. நிரப்பப்பட கூடிய போத்தல்களின் எண்ணிக்கை யாது? அப்போது எஞ்சியிருக்கும் எண்ணெயின் அளவு எத்தனை மி.லீ ஆகம்?

04. மூவர் ஒரு குறித்த வேலையை செய்து முடிப்பதற்கு 6 நாட்கள் எடுக்கின்றனர். அவர்களில் ஒருவர் முதன் மூன்று நாட்களுக்கு மாத்திரம் வேலைக்கு வராவிட்டால், அவர்கள் மூவரம் அவ்வேலையைச் செய்து முடிப்பதற்கு எடுக்கம் மொத்த நாட்களின் எண்ணிக்கை யாது?

05. ஒரு மைய வட்டங்கள் இரண்டின் ஆரைகள் 5செ.மீ, 13 செ.மீ ஆகம். சிறிய வட்டத்தை தொடுமாறு பெரிய வட்டத்தின் உள்ளே வரையத்தக்க நாணின் நீளம் யாது?

06. முதல் உறுப்பு 8ஆகவும், பொதுவிகிதம் 2 ஆகவுமுள்ள ஒரு பெருக்கல் விருத்தியின் 25ம் உறுப்பை இரண்டின் ஒரு வலுவாகக் காட்டுக.

07. ஒரு குறித்த பரீட்சைக்குத் தோற்றிய 9 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே காணப்படுகின்றன.

2, 3, 5, 8, 4, 10, 4, 6, 7

இப்புள்ளிகளின் ஆகாரத்தைக் காண்க. வீச்சைக் காண்க.

## பாடம் : வரலாறு

1. 1ம் விஜயபாகு மன்னனின் சேவையை மதிப்பிடும் போது பின்வரும் எவ்விடயத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்?
   1. அழிந்திருந்த நீர்ப்பாசனத்தை புனரமைப்புச் செய்தல்
   2. உறவு முறைகளின் மூலம் அயல் அரசர்களுடன் சுமூகமாக செயல்படல்
   3. சோழர் ஆட்சியிலிருந்து இந்நாட்டை விடுத்து சுதந்திரமான இராச்சியத்தை அமைத்தல்
   4. சிதைவடைந்த விகாரைகளை புனரமைப்புச் செய்தல்

2. இலங்கை கட்டடக்கலை சிற்பக் கலை ஆகியவற்றில் முனைப்பான இந்துச் செல்வாக்குகள் எக்காலங்களில் காணப்பட்டன?
   1. அநுராதபுர - தம்பதெனிய 2. பொலநறுவை - கம்பளை
   3. யாப்பகூவ - குருணாகல் 4. கண்டி - கோட்டை

3. முல்லேரியாப் போரின் மூலம் போர்த்துக்கேயரை இறுதியாக தோற்கடிப்பதில் சீதாவாக்கை அரசர்கள் வெற்றியீட்டிய போதிலும் அவர்களை இலங்கையில் இருந்து துரத்த முடியாமைக்குக் காரணம்?
   1. சிங்கள அரசர்களுடன் பலம் வாய்ந்த கடற்படை இல்லாமை
   2. பயிற்சி பெற்ற படைகள் சிங்கள அரசர்களிடம் இல்லாமை
   3. சிங்களப் படைத் தளபதிகளிடையே ஒற்றுமை இல்லாமை
   4. கண்டி ஆட்சியாளர்களிடமிருந்து உதவி கிடைக்காமை

4. கி.பி 1638, 1766 ஆகிய ஆண்டுகளில் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை ஏற்படுத்திய இரு கண்டி ஆட்சியாளர்களும் யாவர்?
   1. 1ம் விமல தர்மசூரியனும் 2ம் விமல தர்மசூரியனும்
   2. 2ம் இராஜசிங்கனும் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனும்
   3. செனரத்தும், 2ம் விமல தர்மசூரியனும்
   4. ஸ்ரீ நரேந்திர சிங்கனும் ஸ்ரீ விஜய இராஜசிங்கனும்

5. அநுராதபுரத்தை சகல அம்சங்களும் பொருந்திய தலைநகராக மாற்றி அரசர்?
   1. விஜயன் 2. தேவநம்பியதீசன் 3. பண்டுகாபயன் 4. துட்டகைமுனு

## பாடம் : விஞ்ஞானம்

01. மின்னலேற்படும் போது குறைந்த ஆபத்துள்ள சந்தர்ப்பம்?
   1. மைதானத்திற்கு அருகிலுள்ள மரத்தின் கீழே நிற்றல்
   2. வயலில் வேலை செய்து கொண்டிருத்தல்
   3. மோட்டார் காரினுள்ளே இருத்தல்
   4. வீட்டினுள்ளே தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருத்தல்

02. நிறக்குருட்டினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு
   1. தூரத்தில் உள்ள பொருட்கள் மாத்திரம் தெளிவாக தெரியும்
   2. கிட்ட உள்ள பொருட்கள் மாத்திரம் தெளிவாக தெரியும்.
   3. மங்கலான ஒளியில் நிறங்களை வேறு பிரித்து இனங்காண இயலாது.
   4. சிவப்பு, பச்சை நிறங்களை வேறுபிரித்து இனங்காள இயலாது

03. நீள்வளையம் மையவிழையத்தினால் கட்டுப்படுத்தப்படும் செயல்?
   1. பார்வை 2. தசை அசைவு இயைபாக்கம்
   3. இதயத் துடிப்பு 4. உடலின் சமநிலையைப் பேணல்

04. இருவித்திலைத் தாவரங்கள் காட்டும் ஓர் இயல்பு

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

#### மாத்திரை

எழுத்துக்கள் ஒலிப்பதற்கு எடுக்கும் கால அளவினை அளவிடும் அலகினை மாத்திரை என்பர். கண் இமைப்பொழுது அல்லது கைநொடிப்பொழுது ஒரு மாத்திரை அளவு என்று சொல்லப்படுகிறது. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஒலிக்கும் கால அளவின் அடிப்படையிலே குற்றெழுத்து என்றும் நெட்டெழுத்து என்றும் இரு வகைப்படுத்தப்படும். குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரை அளவாகவும் நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரை அளவாகவும் ஒலிக்கின்றன. மெய்யெழுத்துக்கள் அரை மாத்திரை ஒலிப்புடையன.

உயிர்க்குறில் - அ இ உ எ ஒ

உயிர்நெடில் - அ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

(குறில் எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் என்றும் நெடில் எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் என்றும் அழைக்கப்படும்)

#### சார்பெழுத்துக்கள்.

- முதலெழுத்துக்களைச் சார்ந்து நின்று இயங்குபவை சார்பெழுத்துக்களாகும்.
- உயிரும் மெய்யும் சேர்ந்த ஒலிப்பு நிலைக்கான கூட்டு அடையாளமாக அமைந்த உயிர் மெய்களும்இ
- உயிரென்றோஇ மெய்யென்றோ கொள்ளமுடியாத ஆய்தமும்
- 

முதலெலுத்துக்களுள் சில சொற்களில் அமையும்போது தமக்குரிய ஒலிப்பு அளவில் ஒலிக்காது சிறிது வேறுபட்டு (நீண்டு / குறுகி) ஒலிப்பனவாக அமைந்தனவையும் சார்பெழுத்துக்களாக் கொள்ளப்படுகின்றன.

சார்பெழுத்துக்கள் பத்து வகைப்படும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: **Complete the following dialogue selecting the most suitable words from the boxes.**

1. The sea is deep here beware of big waves........................................
2. Yala Sanctuary ........................................ reduce speed now.
3. Sinharaja rain forest our heritage ............................................
4. Mahaweli our life blood ..................................................
5. Public library ............................................ switch off mobile phones.
6. Central park ................................ they look prettier on trees.

a. Do not pick flowers
b. Leave only your foot prints.
c. Do not disturb
d. Keep the river clean
e Elephant crossing ahead
f. Swimming is not safe

1. ஆணி வேர் உள்ள வேர்த்தொகுதி இருத்தல்
2. இலைகளில் சமாநதரமான நரம்பமைப்பு இருத்தல்
3. முப்பாத்துத் திட்டம் உள்ள பூக்கள் இருத்தல்
4. தரைகீழ் முளைக்கும் முறை இருத்தல்

05. ஒளித் தொகுப்புடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுக்களில் பிழையானது யாது?
   1. நீர் ஒளித்தொகுப்புக்குத் தேவையான ஒரு மூலப்பொருளாகும்.
   2. ஒளி இருக்கும் போது மாத்திரம் ஒளித்தொகுப்பு நடைபெறுகின்றது.
   3. ஒளித்தொகுப்பிற்கு பச்சையம் அத்தியவசியமாகும்
   4. ஒளித்தொகுப்பின் விளைபொருளாக காபனீரொட்சைட்டும், குளுக்கோசும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

06. அல்காக்கள் பின்வரும் ஏவியல்பு காரணமாக பங்கசுகளில் இருந்து வேறுபடுகின்றன?
   1. உடலில் பிரிவிலிகள் இருத்தல்
   2. ஒளித்தொகுப்பு ஆற்றல் 3. ஒழுங்கமைந்த கருக்கள் இருத்தல்
   4. இனப்பெருக்கத்திற்கான புணரிகளை உற்பத்தி செய்தல்

07. இதயத் தசைகளுக்கும், மளமளப்பான தசைகளுக்கும் பொதுவான ஓர் இயல்பு எது?
   1. வரி கொண்டதாக இருத்தல் 2. வரிகளற்றதாக இருத்தல்
   3. விரைவில் இளைப்படைதல் 4. இச்சையின்றி இயங்குதல்

08. தாவரக்கலத்தில் காணப்படும் ஆனால் விலங்குக் கலத்தில் காணப்படாத ஒரு கட்டமைப்பு?
   1. இழைமணி 2. கலச்சுவர் 3. குழியமுதலுரு
   4. முதலுரு மென்சவ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 18

01. பின்வரும் மரங்களுள் ஆணிவேரைக் கொண்டிராத ஒரு மரம் எது?
    i. தென்னை ii. புளி iii. பலா iv. றம்புட்டான்

02. தாவரங்களில் கூடு அமைத்து வாழும் முலையூட்டி விலங்கு?
    i. வௌவால் ii. அணில் iii. எலி iv. கீரி

03. திருக்கொன்றைப் பூவின் நிறம்
    i. சிவப்பு ii. ஊதா iii. மஞ்சள் iv. வெள்ளை

04. ஒன்றுக்கொன்று அளவில் வித்தியாசமான இதழ்களைக் கொண்ட மலர்?
    i. அகத்தி ii. அந்தூரியம் iii. மல்லிகை iv. வெட்சி

05. நியூசிலாந்தில் மட்டும் காணப்படும் பறவை?
    i.தீக்கோழி . ii. வான்கோழி iii. கிவி iv. பென்குயின்

06. இலங்கையின் தேசிய இலச்சினையில் தன்னிறைவு என்பதனை உணர்த்தும் பகுதி?
    i. தர்மச்சக்கரம் ii. பூவிதழ் iii. நெற்கதிர் iv. சூரியன்

07. உலகளாவிய ரீதியில் சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் அமைப்பு?
    i. யுனிசெப் ii. யுனெஸ்கோ
    iii. செஞ்சிலுவைச்சங்கம் iv. உலக உணவு ஸ்தாபனம்

08. பொருட்களைநுகரும் மக்களின் பாதுகாப்பிற்காக உருவக்கப்பட்ட சட்டம்?
    I. வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம்
    ii. அரும்பொருள் பாதுகாப்புச்சட்டம்
    iii. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் iv. மரபுரிமைச்சட்டம்

09. வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் அலங்காரம்?
    i. கொலாஜ் ii. பரவுருவச்சித்திரம் iii. அல்பனா ஆக்கம் iv. ஒட்டுச்சித்திரம்

10. மண்ணரிப்பைத்தூண்டும் காரணிகளில் ஒன்று?
    i. மரநடுகை ii. மூடுபடை அமைத்தல்
    iii. காடுவளர்ப்பு iv. வீசுங்காற்று

## பகுதி 02

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

காலைக்கதிரவன் தன் ஒளியைக் கடலுக்குள் மறைத்துக் கொள்ள ஆயத்தமானான். பட்சிகள் இருப்பிடங்களைத் தேடி வரிசை வரிசையாகச் செல்கின்றன. விலங்குகளும் தரிப்பிடம் தேடி திடு தடு வென ஓடிச்செல்கின்றன. தொழிலுக்குச் சென்றவர்களும் வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாகத் திரும்பிக் கொண்டிருந்தனர். இருள் நிலத்தைக் கௌவிக் கொள்ளத் தயாராக இருக்கின்றது. இவற்றையெல்லாம் காந்தன் கடற்கரையில் நின்று இரசித்துக் கொண்டிருந்தான்.

அ. இது எந்த வேளையைக் குறிக்கின்றது?..................................................

ஆ. காந்தன் எங்கே நின்று ரசித்தான்?..................................................

இ. இருள் என்பதன் எதிர்ப்பதம்?..................................................

ஈ. இப்பந்தியில் வரும் அடுக்குத்தொடர் ஒன்றை எழுதுக?...............................

உ. இப்பந்தியில் வரும் இணைமொழி ஒன்றை எழுதுக?...............................

ஊ. பறவைகள் என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது?...............................

எ. பந்தியில் வந்துள்ள நிகழ்கால பன்மை அஃறிணை வினை முற்று ஒன்று எழுதுக? ..................................................

ஏ. "திரும்பிக் கொண்டிருந்தனர்" என்பதனை ஒருமைச் சொல் வடிவில் மாற்றி எழுதுக? ..................................................

ஐ. ஆதவன் என்பதன் ஒத்த சொல்?..........................................

ஒ. ஓடிச் செல்கின்றன என்பதனை எதிர்கால வினை முற்றாக. எழுதுக?..................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## குட்டிக்கதை



## விவசாயியும் பாம்பும்

அந்தக் கிராமம் ஓர் அழகானது. மிகுந்த குளிர் காலம் நிலவியது. ஒரு நாள் பாம்பு ஒன்று பனியில் விறைத்து உயிர் போய்விடுமோ என்ற நிலையில் சுருண்டு கிடந்தது.

அந்த நேரத்தில் அவ்வழியே வந்த விவசாயி ஒருவன் அந்த பாம்பினைப் பார்த்தான். இரக்க குணமுள்ள அந்த விவசாயி அப்பாம்புக்கு உதவி செய்திட



நினைத்தான்.

உடனே குனிந்து அப்பாம்பினைத் தூக்கி தன் மார்போடு அணைத்து அதனைச் சூடேற்றினான். விவசாயியின் உடல் சூடு பட்டதும் சற்று நேரத்தில் அப்பாம்பு பழைய நிலைக்கு மெல்ல மெல்ல உணர்வு பெற்றது.

அதற்கு நன்றாக உணர்வு வந்ததும் அது தன்னைக் காப்பாற்றிய விவசாயியை பலமாகக் கடித்துவிட்டது. கடித்ததும் விவசாயி கையை உதறியதும் பாம்பு கீழே விழுந்து ஓடிச்சென்றது. பாம்பின் நஞ்சு ஏறி உயிர் போகும் நிலையில் இருந்த அந்த விவசாயி தன் செய்கைக்காக வருந்தினான்.


பேசாமல் விட்டுவிட்டு போயிருக்கலாமே என தன்னை நொந்து கொண்டான். பின்னர் பாம்பைப் பார்த்து ஏய் நன்றி கெட்ட நாகமே! உன்னைக் காப்பாற்றிய என்னையையே கடித்து விட்டாயே! உன் குணம் தெரிந்தும் நான் உனக்கு உதவி செய்தேன் அல்லவா? அதற்கு இது சரியான தண்டனை தான் என தன் ஆத்திரம் தீரும் மட்டும் திட்டித் தீர்த்தான்.

அவனுக்கு மயக்கம் வரத்தொடங்கியது. நடந்தவற்றை துாரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர் தக்க சமயத்தில் அவருக்கு மூளிகை மருந்தளித்து காப்பாற்றினார்.



- தீயவர்களுக்குச் செய்யும் உதவி தீமையிலேயே முடியும் -

## எனது வீடு



எனது வீட்டில் நான், எனது அம்மா, எனது அப்பா, எனது தங்கை மற்றும் எனது பாட்டி ஆகியோர் வசித்து வருகின்றோம். எனது வீடு மிகவும் அழகானது. அம்மாவும், பாட்டியும் எமது வீட்டை அலங்கரித்து வைத்திருப்பர். எனது தங்கை வீட்டில் உள்ள பொருட்களை அங்கும் இங்கும் இழுத்துப் போடுவாள். நானே அற்றை சரி செய்வேன்.

எனது வீட்டில் மீன் தொட்டி காணப்படுகின்றது. என்னிடம் ஆறு மீன்கள் உள்ளன. அவற்றிற்கு எனது அப்பாவும் நானும் தீனி போடுவோம். உணவு போடும் போது மீன்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிவதையும், மேலே ந்து உணவை எடுத்துச் செல்வதையும் நான் நின்று பார்த்துக் கொண்டே இருப்பேன்.

எனக்கு எனது வீட்டை மிகவும் பிடிக்கும்.

***ஜ.ஜாக்சிலினி***
***தரம் - 06.***

### சிந்திக்க .. ..

கஷ்டப்படுபவனுக்கு சிரிக்கத் தெரியாது
சிரிப்பவனுக்கு கஷ்டம் தெரியாது.
கஷ்டத்திலும் சிரிப்பவனுக்கு
தோல்வியே கிடையாது!!!



***பா.லக்ஸ்மன்***
***தரம் - 06***



***ம.ஐஸ்வர்யா,***
***தரம் - 07***

## பொது அறிவு - 20

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. கிருமிநாசினியாகவும், நுண்ணுயிர்கொல்லியாகவும் பயன்படுவது எது?
    சலவைத்தூள்
02. மண்ணின் வேதிப பெயர் என்ன? சிலிக்கன் டை ஒக்சைட்டு
03. தீயணைக்கும் கருவியில் பயன்படுவது? சோடியம் டை காபனேட்
04. தாவரங்களிலும் மிருகங்களிலும் இருந்து பெறப்படுவது எது?
    கரிம அமிலம்
05. ஆறு, ஏரி மற்றும் பனிமலைகளில் காணப்படும் சீரின் சதவீதம்?
    2.7சதவீதம்
06. மனிதனின் மூளையின் எடை எவ்வளவு? 1.5 கி.கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காட்சியும் பரிசளிப்பு வைபவமும்

-தம்பலகாம நிரூபர்-

தம்பலகாமம் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் குகநேசன் தலைமையில் தம்பலகாமம் தையற் பயிற்ச்சி மண்டபத்தில்.இன்று காலை ஒண்பது முப்பதுக்கு பிரதம விருந்தினராக பிரதேச செயலாளர் ஜே சிரிபதி கௌரவ விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.பாஸ்கரன் பிரதேச கணக்காளர் திட்டமிடல் அதிகாரி நிர்வாக உத்தியோகத்தர் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பல உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர். பிரதேச செயலாளர் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து கண்காட்சியை பார்வையிட்டார். அத்துடன் அவர்களுக்கான சான்றிதல் வழங்கப்பட்டது.





## கிழக்கில் முதலாவது தன்னியக்க இயந்திரம்

பாசிக்குடாவில் ஓவ் சைற் தன்னியக்க இயந்திரம் கடந்த செவ்வாய்கிழமை சம்பத்வங்கியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பிரதேச பொதுமக்களின் நன்மை கருதியே பாசிக்குடா வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது சம்பத் வங்கியின் 341ஆவது ஓவ் சைற் தன்னியக்க இயந்திரம் என்பதுடன் கிழக்கு மாகாணத்துக்கான முதலாவது தன்னியக்க இயந்திரமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.




## புத்தாண்டு சிறப்பு கொண்டாட்டம்


மட்டக்களப்பு ஆரையம்பதி, கோவில் குளத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பட கல்வி நிறுவகத்தின் சித்திரைப்புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் உயர் கணக்கியல் டிப்ளோமா மாண-வர்கள் ஒன்றியம் மற்றும் உயர் கணக்-கியல் டிப்ளோமா இரண்டாம் ஆண்டு முழுநேரபாட-நெறி-யை மேற்கொள்ளும் மாணவர்கள் இணைந்து இந்த நிக-ழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.







## பள்ளிவாயல் நிர்மாணிப்பு



மட்டக்களப்பு பூநொச்சிமுனையில் சுமார் 9.5மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முகைதீன் ஜும் ஆ பள்ளிவாயலின் புதிய கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் பிரதி-யமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வின் முயற்சி-யினால் ஸ்ரீலங்கா ஹிறாபவுண்டேசன் நிறுவனத்தின் உதவியுடன் சவூதி அரேபிய நாட்டு தனவந்தரின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் சவூதி அரேபிய நாட்டு பிரமுகர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

# கணவன், மனைவியும் ஸ்பரிசமும்

## மக்கள் முரசு

கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து வாழ்வதே சிறந்த வாழ்வு. அத்தகைய குடும்ப வாழ்வில்தான் இன்பம் இருக்க முடியும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து மிகவும் அன்யோன்யமாக இருப்பின் அவர்களிடையே விட்டுக் கொடுப்பும் சகிப்புத் தன்மையும் தானாகவே உருவாகிவிடும். முடிந்தளவு இருவருக்கிடையேயும் ஒளிவு மறைவு இல்லாவிட்டாலே பாதி பிரச்சினைக்கு தீர்வு கிட்டிவிடும்.

தற்காலத்தில் கணவன், மனைவிக்கிடையிலான சண்டை விவாகரத்து வரை சென்று விடுகின்றது. பெற்றோர் சண்டையிடும் போது தத்தமது பிள்ளைகளின் உளவியல் பாதிக்கப்படுவதை யாரும் உணர்ந்து கொள்வதில்லை. அதிலும் கொஞ்சம் வயதான பெற்றோர் கூட தற்காலத்தில் சிறு சிறு காரணங்களைக் காட்டி பிரச்சினைகளை உருவாக்கி பிள்ளைகளின் வாழ்க்கையையும் சேர்த்து பாதிக்கின்றனர். பிரச்சினை வராத குடும்பம் உலகத்தில் எங்குண்டு? இருப்பினும் ஒரு சில வினாடிகளில் அல்லது மணித்துளிகளில் அவற்றை விட்டெறிந்து விட்டு பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும். ஆனால் எங்களுக்குள்ளே இருக்கும் ஈகோ எம்மை இறங்கிவர விடுவதில்லை.

ஒரு சில வீடுகளில் கணவன் மேற்கே போனால், மனைவி கிழக்கே போகவேண்டும் என்கிறாள். வந்தவரை உபசரிக்க வேண்டும் என்று கணவன் சொன்னால் மனைவி அதைக் காதால் கூடக் கேட்பதில்லை.

மனைவியின் உறவினரைக் கண்டால் கணவன் முகம் சுளிக்கிறான் கணவன் உறவினரைக் கண்டால் நண்பரைக் கண்டால் மனைவி முகத்தைத் திருப்பிக் கொள்கின்றாள். இம்மாதிரியான குடும்பத்திலே அமைதியிருக்க முடியாது. இக்குடும்பத்தில் எப்பொழுதும் போர் முரசுதான் ஒலித்துக் கொண்டிருக்கும். இக்குடும்பம் போர்க்களமாகத்தான் காட்சியளிக்கும்.

இந்த உண்மையை முன்னோர்கள் பல பாடல்களில் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். பல நிகழ்ச்சிகளில் அமைத்துக் கதைபோலவும் எழுதியிருக்கின்றனர். ஒரு குடும்பத்தில் ஒற்றுமையின்மைக்குக் கணவனுடைய கெட்ட குணமே காரணமாக இருக்கலாம். அல்லது மனைவியின் போக்கு காரணமாயிருக்கலாம்.

காலத்தின் நிலைகளை ஒட்டித்தான் கதைகளும் நிகழ்ச்சிகளும் அமையும் இலக்கியங்களும் கவிதைகளும் தோன்றும். இந்த உண்மையை உள்ளத்தில் வைத்துக் கொண்டுதான் பழைய நிகழ்ச்சிகளை நாம் பார்க்க வேண்டும் உதாரணமாக, ஔவையார் பாடியதாக வழங்கும் நிகழ்ச்சி ஒன்றைக் காண்போம்.

நல்லவன் ஒருவன் ஔவையார் வழிநடந்து போவதைக் கண்டான் அவர் களைத்திருப்பதைப் பார்த்தான். அவரைத் தன்வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் உணவிட்டு உபசரிக்க வேண்டும் என்று நினைத்தான். வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் தெருத் திண்ணையிலே உட்கார வைத்தான்.

அவன் மனைவியோ படுபட்டி. காயம்பட்ட புண்ணுக்குச் சுண்ணாம்புகூடக் கொடுக்காதவள் அவளிடம் சென்றான். பக்கத்தில் உட்கார்ந்தான் அவள் முகத்தைத் தடவிக் கொடுத்தான் தலையில் உள்ள ஈர்-பேன் முதலியவைகளை எடுத்தான். தலை மயிரை அழகாக முடிந்தான். மெதுவாக அவள் காதிலே விருந்து ஒன்று வந்திருக்கின்றது என்று கூறினான். அவ்வளவுதான், கணவன் செய்த உபசாரம் அவ்வளவையும் மறந்து விட்டாள். வருந்தினாள் எழுந்து கூத்தாடினாள் அவனைப்பற்றி வசைபாடினாள் கோரத்தாண்டவம் ஆடி பழய முறத்தைக் கொண்டு, அவனை ஓட ஓட அடித்து விரட்டினாள்.

இதன்பின்பும் கணவன் அந்த மனைவியைச் சும்மாவிடவில்லை. காலைக் கையைப் பிடித்துச் சமாதானம் செய்தான். ஔவைக்கு விருந்தளிக்கச் சம்மதிக்கும்படிச் செய்தான்.

அந்தப் பட்டிப்பெண் தனக்குச் சிறிதும் சம்மதம் இல்லா[illegible] சோறு சமைத்தாள். ஏதோ காமாச் சோமா என்று கறியும் குழம்பும் ஆக்கினாள். இலையில் பரிமாறினாள். ஔவையார் அந்த இலையில் முன் அமர்ந்தார். அவ்வளவுதான். தன் மனத்துக்குள்ளேயே அந்த உணவைப்பற்றிக் கீழ்வருமாறு நினைத்தார்.

"இந்த உணவைக் காண்பதற்கே கண்கூசுகின்றன் கையால் இதை எடுக்க வெட்கமாயிருக்கிறது. கையில் எடுத்து வாயில் வைப்போம் என்றால், வாய் திறக்கமாட்டேன் என்கின்றது வலுக்கட்டாயமாக வாயைத் திறந்து உள்ளே உணவைத் திணிக்க வேண்டியிருக்கிறது. அப்படி உள்ளே புகுந்த உணவினால், வீணாக எனது எலும்பெல்லாம் பற்றி எரிகின்றது அன்பில்லாதவள் இட்ட உணவு இவ்வாறு செய்கின்றது.

இவ்வாறு எண்ணி வருந்தி ஏதோ ஒருவாறு சாப்பிட்டுப் போனாள் ஔவையார்.

இந்த நிழச்சி வேடிக்கையானது. ஆயினும் இதில் இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

ஒன்று, குடும்பத்தில் ஒற்றுமை வேண்டும் காதலனும் காதலியும் கருத்தொருமித்து எக்காரியத்தையும் செய்ய வேண்டும் என்பது. மற்றொன்று அன்பில்லாத உபசரிப்பு, பிறர்க்கு இன்பம் அளிக்காது. அன்புடன் உபசரிப்பதே இன்பம் தரும் என்பது.

நிகழ்ச்சி, பெண்ணடிமையும், ஆண் ஆட்சியும் உள்ள காலத்தில் தோன்றியத் ஆதலால் இந்த முறையில்தான் பெண்மீது பழிபோடுவதாகத்தான் அமைந்திருக்க முடியும். நாம் கொள்ள வேண்டியது கருத்தைத்தான். கருத்து உண்மைதானே?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின்...

தலைமைத்துவத்துடன் மூதூரில் அனல் மின் நிலையத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பீஸ்கோம் உட்பட கடற்கரைச்சேனை, சேனையூர், சம்புக்களி, கட்டைப்-பறிச்சான் சந்தோசபுரம், அம்மன்நகர், அரபாநகர் ஆகிய கிராமங்களின் கிராமியச் சமூக அமைப்புகளும் இச் சாத்வீகப் போரில் குதித்திருந்தன.

முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் பெருமளவிற் கலந்துகொண்ட இப் போராட்டம் நேற்று 1 மணியளவில் சம்பூர் காவல்துறை நிலையத்திற்குச் சமீபமாகவுள்ள கடற்கரைச்சேனை, ரா வலடிச் சந்தியில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை சம்பூரில் நடைபெற-விருந்த ஒப்பந்தக்காரர்களுடனான கூட்டம் திருகோணமலை நகரில் ஜேகப் பார்க் ஹோட்டலில் நடைபெற்றுள்ளதாக நம்பத்குந்த செய்திகள் தெரிவிக்-கின்றன.

இக் கூட்டத்தில் அமைச்சர் பாட்டாளி சம்பிக்கரணவக்க கலந்து கொண்டி-ருந்தார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சம்பூர்....

திணைக்களத்திலிருந்து சனாதி-பதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு தமக்கு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் சம்பூர் பகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்காக சுவீகரிக்கப்பட்ட எண்ணூற்றுப் பதினெட்டு ஹெக்டேயர் காணி அனுமதியை இரத்துச் செய்வதற்கு முழு அதிகாரம் தற்போது சனாதிபதியிடம் உள்ளதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சம்பூர் பகுதியின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சம்பூர் பகுதிக்கான காணி கட்டங்கட்டமாக விடுவிக்கப்பட்டு வருவதாகவும், சட்ட ரீதியான நடவடிக்கைகள் நிறைவுபெற்றதன் பின்னர் எதிர்வரும் வாரமளவில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலை...

கடற்கரையில் பொதுக் கூட்டத்துடன் நிறைவு பெற்றிருந்தது.

காலையில் நடைபெற்ற பேரணியானது திருகோணமலை வரலாற்றில் நீண்டகாலங்களுக்குப் பின்பு தொழிற்-சங்கங்களால் நடாத்தப்பட்ட பேரணி என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் திரு.எம். அனஸ் தெரிவித்தார்.

பேரணியில் உரையாற்றிய கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கண்ணன் அவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தொழிலாளர்களுக்கு இழைக்கபடும் அநீதியைத் தெளிவாகக் கூறியதுடன் அவற்றினை நிறுத்திக்-கொள்ள வேண்டும் என தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய எம். அனஸ் ஆசிரியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளைப் பற்றிப் பேசினார்.

தொடர்ந்து கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு.எஸ். ஜெயராஜா கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களத்தின் முறைகேடுகளைப் பட்டியலிட்டதுடன் அங்க நிகழும் தமிழ மொழிப் புறக்கணிப்பையும் வெளிப்படுத்தினார்.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் பி. யெகதீஸ்வரா தெங்கு பனம் பொருள் உற்பத்தியாளர்களின் உற்பத்தியானது முழுவதுமாகக் கொள்வனவு செய்யப்படாமல் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களை விற்கும் நடவடிக்கை களைப் பற்றித் தெளிவுபடுத்தியதுடன் தமது சங்கத்தின் தொழிலாளர்கள் உரிமை தொடர்பாக சில பிரகடனங்-களையும் முன்மொழிந்தார்.

கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பிரதிச் செயலாளர் திரு.மோகன்ராஜ் இக் கூட்டத்தினை நெறிப்படுத்தியிருந்தார்.

## மலைமுரசின்...

பிரகடனங்கள் வெளியிடப்பட்டன. அவை தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் தேசத்தின் இறைமையை முன்நிறுத்தி இருதேசம் ஒரு நாடு என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது, வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பதை ஏற்றுக் கொண்டுசெயற்படல், அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையைக் கண்டறிந்து கொள்வதற்கான சர்வதேச தரத்திலான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், திருகோணமலை சம்பூர், முல்லைத்தீவின் கோப்பாபிலவு, யாழ்ப்பாணத்தின் வலிவடக்கு பிரதேசங்களில் போரினால் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும், இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியில் இருந்து நடைபெற்றுவரும் மூவின அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், அனைத்துத் தொழிலாளர்களும் அவர்களுக்கான உரிமைகளுடனும், மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதப்படுத்த வேண்டும். தொழிலாளர்களை அடிமையாக, வீட்டுச் சேவர்களாக நடாத்துவது இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற பல பொதுப்பிரகடனங்களும் வெளியிடப்பட்ட அதே வேளை குறித்த மேதின ஊர்வலத்திற்குப் பங்களிப்புச் செய்த நான்கு தொழிற் சங்கங்களின் சார்பில் பல்வேறுபட்ட விசேட பிரகடனங்களும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரகடனங்கள் யாவும் சிங்கள மொழிக்கு மாற்றப்பட்டு சனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் அனைத்து அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் நடவடிக்கை-களை முன்னெடுப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபையினருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று மலைமுரசின் ஆசிரியர் தெரிவித்தார்.

## சிங்கக்கொடி...

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கடும் அமைதியின்மை ஏற்பட்டதாக வலம்புரி செய்திகள் தொடர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் வலம்புரி நாளிதழ் பல்லாயிரம் வாசகர்களைக் கொண்ட வடமாகாண நாளிதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

## அட்டை....

பலரின் பல மணிநேரத் தேடுதலின் பின்னர். இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தில் தலைப்பகுதியில் வெட்டுக் காயம் ஒன்று இருந்ததாகத் தெரிவித்த ஒருவர் கடற்படையினரின் வருகையை அவதானித்துவிட்டு கடலுக்குள் இருந்து மேலே வர எத்தனித்த போது கடற்படைப்படகுடன் மோதியதால் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகத் தெரிவித்தார்.

(ரபாயீன்பாபு)

## தேர்தலில் களமி....

மக்களுக்கு நல்லதொரு தலைமைத்து-வத்தினையும் ஒரு நல்ல சமுகத்தினையும் உருவாக்க வேண்டும். மக்களுக்குரிய தேவைகளை நிறை வேற்றி வாழ்க்கைத் தரத்தினையும் மலர வைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஆணைக்குழுவின்....

ஆணைக்குழு காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அவ்வழைப்பையேற்று வண.வீ.யோகேஸ்வரன் அடிக-ளாரின் தலைமையில் சென்ற வடக்குகிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழுவினர் ஆணைக்குழுவிற்குச் சென்று உரையாடலை நிகழ்த்திய போது அங்கு சமூகமளித்திருந்த ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் நித்திரை கொண்டதே இவ் விசனத்திற்குக் காரணம் ஆகும் என சிலர் தெரிவித்தனர்.

## மத்தியில் கூட்.....

தனித்துவத்தைப் பேணிக்கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்கின்றோம். தமிழிலே தேசிய கீதத்தைப் பாடவேண்டும் என்று ஒரு சிங்கள தலைவர் கூறிச் சென்றுள்ளார். அவர்களைப் போன்றவர்களை நாங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அவர்களுடைய கரங்களைப் பலப்படுத்த வேண்டியவர்கள் நாம். எங்களுடைய தலைவரும் அவர்களுடன் இணைந்து தேசிய நிர்வாக சபையிலே பல்வேறு நிகழ்வுகளை நகர்த்திக் கொண்டிருகிறார். ஆட்சி மாற்றம் வந்தவுடன் மிகப்பெரியதொரு அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நாம் என்ற அவாவில் இருக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவல்ல. இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில் சுயநிர்ணய உரிமை தொடர்பான வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் அதற்கான சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் தொடர்ந்து செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தான் எமது முக்கியமான செயற்பாடாக காண்படுகிறது. அதன் காரணமாகவே வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மிகப்பெரும் இடராக இருந்த இராணுவ ஆளுநர்கள் மாற்றப்

## சுவிஸ் திருகோணமலை....

கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக திரு. பரராஜசிங்கம் ராதாகிருஸ்ணன், திரு சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையாற்றிய பொறியியலாளர் திரு. சி. நடேசலிங்கம் இந்த அமையமானது அரசியல் மற்றும் வருவாய் நோக்கங்கள் அற்றதாயும், திருக்கோணமலை மாவட்டத்தில் வாழும் உறவுகள் மற்றும் தமிழின பின்னணியைக்கொண்ட மக்களில் யுத்தம் மற்றும் ஏனைய அழிவுகளால் பாதிக்கப் பட்டவர்களின் கல்வி, கலாச்சார, பொருளாதார மீட்சிக்காக பாடுபடுவதோடு, அந்நோக்கத்தை அடைய நிதி மற்றும் பொருட்கள் வழங்கல், அவர் களுக்கான வேலைவாய்ப்புக்கள், பயிற்சி மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல். மாணவர்களுக்கான கற்றல், மேற்-படிப்பு போன்ற செயற்பாடுகளுக்காக உதவிகளையும், வேண்டிய ஏற்பாடுகளையும் மேற்கொள்ளல். அவ்வாறான மக்களுக்கு மேற்போந்த சேவைகளைப் புரியும் எதாவது நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு, முடியுமான உதவிகள், நிதி, பயிற்சி, கருவிகள் மற்றும் பொருட்கள் வழங்கல், திருக்கோணமலை மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிறைவேற்றப்படவேண்டிய சிறிய திட்டங்களுக்கு நிதி வழங்கல், சுவிஸ்லாந்தில் வதியும் திருகோண-மலை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களை ஒன்றிணைப் பதோடு, சமூக பொருளாதார, கலாசார விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பதற்காகவும், அவற்றின் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் பாடுபடும் என தெரிவித்தார்

இவ்வொன்றியத்தின் தலைவராக ம. சுதாகரன் செயலாளராக சி. நடேசலிங்கம் பொருளாளராக மு. சௌந்தரராஜன், உபதலைவராக க. கோணேஸ்வரன், உப செயலாளராக ம. லிங்கேஸ்வரன், ஒருங்கிணைப் பாளராக ஆசிரியர் சே. சுதாகரன் மகளிர் இணைப்பாளராக திருமதி. தணிகாசலம், போசகராக திரு. க. விஜேந்திரா, போன்றவர்களோடு பல துறைசார்ந்த பின்வரும் ஆறு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வி. கௌரிதாசன், ச. உதயகுமார், பா. ஜெயக்குமார், எஸ். ஆனந்தஜோதி, இ. பிரபாகர், எஸ். பிரதீபன், திரு. கோ. கலைச்செழியன் ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மரணித்தும் வாழும் உயிர்கள்



கடந்தவார தொடர்ச்சி ....

இவ்வாறான பல அம்சங்களை இந்த வசனங்கள் கூறுகின்றன. அல்லாஹ்வுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் உயிருடன் உள்ளனர் என்றால் பூமியில் அவர்கள் உயிருடன் இருப்பதில்லை அல்லாஹ்விடம் அவர்கள் சுவனத்து இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சாதாரணமான முறையில் உயிருடன் இருப்பதாக எடுத்துக் கொண்டால் அவர்களின் மனைவியர் மறுமணம் செய்ய முடியாது. அவர்களின் சொத்துக்கள் வாரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட முடியாது. எனவே, அவர்கள் உயிருடன் உள்ளனர் என்பது சராசரியாக உயிருடன் இருப்பதாகக் கூறுவதாகாது!

பொதுவாக மரணிக்கும் அனைவருக்கும் 'பர்ஸக்' உடைய வாழ்க்கை உண்டு. ஆனால், அல்லஹ்வுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் நேராக சுவனம் நுழைவர். அவர்கள் தமது சொந்த உடலுடன் சுவனம் நுழைவதென்பது மறுமையில் நடக்கும். ஆனால், மரணித்தவுடனேயே அவர்கள், 'பச்சை நிறப் பறவையின் வடிவில் சுவனம் நுழைவர். அங்கு அவர்களின் உயிர்கள் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும்' என நபி(ச) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். (முஸ்லிம்)

இறந்து போன மகான்களிடம் தமது தேவைகளைக் கேட்கும் வழிகேடான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் சிலர் இந்த வசனங்களை ஓதி அவ்லியாக்கள், நாதாக்கள் என்போர் மரணித்தும் உயிர் வாழ்பவர்கள். எனவே, அவர்களிடம் எமது கோரிக்கைகளை முன்வைக்கலாம் என்று வாதிட்டு வருகின்றனர். பல காரணங்களால் இது தவறானதாகும்.

பிரார்த்தனைகள் அல்லாஹ் ஒருவனிடம் மட்டுமே கேட்கப்பட வேண்டும்.

தொடரும் .... – இஸ்லாம்கல்வி –




# இஞ்சிக் குழம்பு

**தேவையான பொருட்கள்**

புளி - 2 எலுமிச்சம்பழம் அளவு உருண்டை, இளசான இஞ்சி - 50 கிராம், காய்ந்த மிளகாய் - 5, வெந்தயம் - 1 மே.கரண்டி, தேங்காய் துருவல் - 1 மே.கரண்டி, பெரிய வெங்காயம் - 1, பச்சை மிளகாய் - 2, கறிவேப்பிலை – சிறிதளவு, வெல்லம் - ஒரு சிறிய கட்டி, கடுகு - 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, பெருங்காயம் - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**



இஞ்சியைக் கழுவி தோல் சீவி, பொடியாக நறுக்கவும். பின்னர் வெங்காயம், பச்சை மிளகாயை பொடியாக நறுக்கவும். புளியை வெந்நீரில் ஊறப் போடவும். தாச்சியில் எண்ணெய் விட்டு, இஞ்சித் துண்டுகளை வதக்கி எடுத்துக் கொள்ளவும். பிறகு தாச்சியில் எண்ணெய் விடாமல் தேங்காய் துருவலை வறுத்து எடுத்து, அதே தாச்சியில் காய்ந்த மிளகாய், வெந்தயத்தை வறுத்துக் கொள்ளவும். வறுத்த மிளகாய், வெந்தயம், தேங்காய் துருவல் இந்த மூன்றையும் மிக்ஸியில் அரைக்கவும். அத்துடன் சிறிது எண்ணெயில் வெங்காயம், பச்சை மிளகாயை வதக்கிக் கொள்ளவும். புளியைத் தேவையான தண்ணீர் விட்டுக் கரைத்து, அதில் அரைத்த விழுது, உப்பு, பெருங்காயம், வெல்லம் சேர்த்துக் கொதிக்கவிடவும். ஒரு கொதி வந்ததும் வதக்கிய இஞ்சித் துண்டுகள், வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து மேலும் கொதிக்கவிடவும். நன்றாகக் கொதித்ததும் இறக்கி, கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டவும்.

# அப்பிள் போன்ற கன்னம் பெற

**அழகு குறிப்பு**

**பெண்களின் கன்னங்களை மென்மையான ஆப்பிள் போன்ற கன்னங்கள் என்று வர்ணிப்பது உண்டு. அப்படி ஆப்பிள் போன்ற கன்னங்களை பெறுவதற்கு இதோ டிப்ஸ்.**


ஆப்பிளை நறுக்கி அரைத்து, கன்னப் பகுதியிலிருந்து காது வரை தடவி, தினமும் பேஷியல் ஸ்ட்ரோக் கொடுத்து வந்தால், ஒரே வாரத்தில் அழகான கன்னத்தை பெறலாம்.

மூன்று ஆப்பிள் துண்டுகள், மூன்று கேரட் துண்டுகள் இவற்றை துருவி ஜூஸ் செய்து, இதனுடன் அரை மூடி எலுமிச்சை சாறு கலந்து தினமும் காலையில் குடித்து வந்தால், கன்னத்தில் சதை போட்டு கன்னத்தின் நிறம் மற்றும் பளபளப்பு கூடும்.

ஒரு தே.கரண்டி தேனுடன், அரைத்த பப்பாளி விழுது ஒரு தே.கரண்டி சேர்த்து கலந்து, பத்து நிமிடம் பேக் போட்டு கழுவவும். தேன், சருமத்தின் சுருக்கங்களைப் போக்கி, கன்னத்தை பளபளப்பாக்கும்.

பால் - 1 தே.கரண்டி, வெண்ணெய் - 1 தே.கரண்டி, பார்லித்தூள் - 1 தே.கரண்டி ஆகியவற்றை ஒரு சிறிய கிண்ணத்தில் எடுத்து நுரை வரும் வரை நன்கு அடித்துக் கலக்கவும். அப்போது கிடைக்கும் கிரீமை, முகம், கழுத்து, கண்களை சுற்றி என அனைத்துப் பகுதிகளிலும் பூசவும். அரை மணி நேரம் கழித்து, வெதுவெதுப்பான நீரில் சுத்தம் செய்யவும்.

உங்கள் கன்னம் வெண்மை பொலிவுடனும் மற்றும் முகம் பளபளப்புடனும் இருக்கும்.





# மருத்துவம்

## ஊறுகாயால் நன்மையா? தீமையா

அனைவராலும் ருசித்து சாப்பிடப்படும் இந்த ஊறுகாய் உடலில் பல்வேறு பிரச்சனைகளை உண்டாக்குகிறது.

**இரத்த அழுத்தம்** : உணவோடு அதிகமாக ஊறுகாயை சேர்த்து சாப்பிடும் போதும், இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

**சிறுநீரக குறைபாடு** : ஊறுகாயை அதிகம் சேர்த்துக் கொள்வதனால், சிறுநீரகத்தின் வேலை பளு அதிகமாகிறது. இதனால் சிறுநீரகத்தின் செயல்திறனில் குறைபாடு ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றது.

**புற்றுநோய்** : ஊறுகாயின் சுவைக்காகவும், பதப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் புற்றுநோயை உண்டாக்க கூடியவை.

**வயிற்றுப்புண்** : அதிகமாக ஊறுகாய் சாப்பிடுபவர்களுக்கு முதல் பக்கவிளைவாக வயிற்று புண் ஏற்படும். இந்த வயிற்று புண் நாளடைவில் புற்றுநோயாக மாற வாய்ப்பிருப்பதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

# குட்டி குட்டி டிப்ஸ்?!!



✓ பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

✓ நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

✓ முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

✓ மலச்சிக்கலால் அவதிப்பட்டு வருபவர்கள், வெதுவெதுப்பான பாலில் தேனை கலந்து, அதனை காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் மலச்சிக்கல் குணமடையும்.

✓ எலும்புகளின் ஆரோக்கியத்தை பேணி காக்க, பாலுடன் தேன் கலந்து குடித்ததால், எலும்புகளின் வலிமை அதிகரிக்கும்.

✓ இரவு தூங்கும் போது பாலுடன் தேன் கலந்து குடித்தால் நிம்மதியான தூக்கம் வரும்.

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** :அக்கம் பக்கத்தவருடன் கூடுதல் அன்பு வளரும். அனுபவ அறிவை பயன்படுத்தி சில நன்மை பெறுவீர்கள்.



**ரிஷபம்** :நடை, உடை, செயல் வசீகரமாகும். பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. கடன் பெற வேண்டி ஏற்படலாம்.



**மிதுனம்** : விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடைக்கும். தாய்வழி சொந்தங்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.



**கடகம்** :நல்ல முயற்சி அத்தனையும் சிறப்பாக நிறைவேறும். குடும்ப உறுப்பினர்கள் கூடுதல் அன்பு பாராட்டுவர்.



**சிம்மம்**: பேச்சில் பண்பாடு நிறைந்திருக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். எதிரி சிரமங்களால் விலகுவார்.



**கன்னி** :அமனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய பணி மேற்கொள்வீர்கள். கால்நடை வளர்ப்பில் லாபம் கூடும். உடல் நலம் ஆரோக்கியம் பெறும்.



**துலாம்** :செயல்களில் நேர்மை அதிகரிக்கும். புதியவர்களின் அன்பு மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.



**விருச்சிகம்** : மனமும், உடலும் புத்துணர்வு பெறும். நன்மைகள் நாளும் தேடி வரும். இயன்ற அளவு தானம், தர்மம் செய்வீர்கள்.



**தனுசு** :நண்பர்களின் எண்ணத்திற்கு மாறாக பேச வேண்டாம். சமூக நிகழ்வு மனக்கஷ்டம் தரலாம். ஆரோக்கியம் மேம்படும். எதிர்ப்பாளரிடம் விலகுவது நல்லது.



**மகரம்** : வாழ்க்கைத் தரம் மேம்படும். தன்னை சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை உதவும்.



**கும்பம்** : சவால்களை வெல்ல உரிய தருணம் உருவாகும். நண்பரிடம் பெற்ற உதவிக்கு பிரதி உபகாரம் செய்வீர்கள்.



**மீனம்** :சாமர்த்திய செயல்களால் சிரமம் அணுகாமல் தவிர்ப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு கூடும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி

– கதிரவன்–

திருகோணமலை வலய கல்வி அலுவலக பிரிவு பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த திங்கட்கிழமை 27.04.2015 ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய அணியினர் சம்பியனாகினர். இரண்டாம் இடத்தினை விபுலாநந்தா கல்லூரி அணியினர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய விபுலாந்தா கல்லூரி அணியினர் நிர்ணியிக்கப்பட்ட 5 பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு களம்புகுந்த சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய அணியினர் 4.4 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 29 ஓட்டங்கள் பெற்று 7 இலக்குகளால் சம்பியனாகினர்.

ஆண்களுக்கான இப்போட்டியில் குச்சவெளி அல் நூறியா வித்தியாலயம் சம்பியன் நிலையினையும், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி இரண்டாம் நிலையினையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய அணி



## படையினருக்கான குத்துச்சண்டைப் போட்டி

இலங்கை இராணுவ வீரர்களுக்கு இடையில் நடத்தப்-பட்ட குத்துச்சண்டைப் போட்டியில் மேற்கு படைப்பிரிவு வெற்றி பெற்றுள்ளது. கிளிநொச்சி பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவின் ஆலோசனை மற்றும் வழிநடத்தலின் கீழ் இந்த குத்துசண்டை போட்டிகள் நடத்தப்பட்டன. இலங்கை பாதுகாப்பு படைகளை பிரதிநிதித்துவப்படுத்தி 7 வீரர்கள் இந்த போட்டிகளின் பங்கேற்றிருந்தனர்.



## வி.பொருட்கள் அன்பளிப்பு

மட்/களுதாவளை மகா வித்தியாலயத்துக்கு கட்டாரில் தொழில் புரியும் பழைய மாணவர்களால் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வயலின் அன்பளிப்பு செய்யப்பட்டது.



## "மட்டக்களப்பு மாநகர சபை சவால் கிண்ணம்"

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிரிவு உதைபந்தாட்ட கழகங்-களுக்கிடையிலான மாபெரும் உதைப்-பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று மட்டக்களப்பில் ஆரம்பமாகவுள்ளது. "மட்டக்களப்பு மாநகர சபை சவால் கிண்ணம்" என்ற பெயரில் முதன்முறையாக இந்த சுற்றுப்போட்டி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை அறிமுகம் செய்யும் நிகழ்வு மாநகரசபை கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாநகரசபை-க்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட ஏ பிரிவுகள் அணிகள் பத்து இந்த சுற்றுப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 2.00மணியளவில் மட்டக்களப்பு மாநகரசபையின் பாட்டாளிபுரம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

23சுற்றுப்போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் சனிக்கிழமைகளில் இரண்டு போட்டிகள் வீதம் நடாத்தவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.



## உதைப்பந்தாட்டப் போட்டி

பொத்துவில் றைஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பொத்துவில் வொண்டர்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தன்வசமாக்கியது. 16 அணிகள் கலந்துகொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு வொண்டர்ஸ் அணியும் பவர்போயிஸ் அணியும் தெரி-வாகியது. பத்து ஓவர்கள்களைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி பொத்துவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வொண்டர்ஸ் அணியின் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட கூறியதற்-கிணங்க நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைக் குவித்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பவர்போய்ஸ் அணியினர் 08 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக எம்.அஜ்மிரும் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக எம்.ஐ.எம். கியாஸும் தெரிவாகினர்.



## மைதானம் நிர்மாணிப்பு

பொத்துவில், பசறிச்சேனைக் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு மைதானம் மற்றும் பார்வையாளர் மண்டபத்தை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மற்றும் அதிகாரிகள் கடந்த புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். இவ்விளையாட்டு மைதானம் மற்றும் பார்வையாளர் மண்டபம் என்பன முன்னாள் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் 60 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உயிரிழந்த சாதனையாளர்



டெல்லியை சேர்ந்த இந்திய மலையேற்ற வீராங்கனையான ரெனே (வயது-49) தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வந்தார். தான்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏறி சாதனை படைத்த ரெனே, தற்போது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இந்நிலையில் பனிப்பாறைகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். இதேபோன்று எவரெஸ்ட் பகுதியில் சிக்கியுள்ள 150க்கும் மேற்பட்ட வீரர்-வீராங்கனைகளை மீட்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிராமங்கள் தோறும் விளையாட்டை கொண்டு செல்வோம்

இலங்கைக் கிரிக்கெட் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கிரிக்கெட்டை நாம் கிராமத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும். கிரிக்கெட்டை மட்டுமல்ல, நமது விளையாட்டையே கிராமத்திலிருந்து ஆரம்பித்தால் சிறந்ததொரு பெறுபேற்றை நாம் பெற்றுக்கொள்ளமுடியும் என இலங்கைக் கிரிக்கெட் இடைக்கால சபையின் தலைவர் சிதத் வெத்தமுனி தெரிவித்தார்.

## திருமண பந்தத்தில் சந்திமால்



இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தினேஷ் சந்திமால் நேற்று 01.05.2015 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். தனது பள்ளித் தோழியையே அவர் கைப்பிடித்ததாக தெரிய வருகின்றது.

## இரட்டைச்சதம் புதிய மைல்கல்

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியில் ஹபீஸ் தனது கன்னி இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். இவர் 332 பந்துகளில் 224 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி சற்று முன்னர் வரை 4 விக்கெட்டுக்களை இழந்து 417 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முன்னதாக பங்களாதேஷ் அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.



## சிறந்த வீரராக தெரிவு



இங்கிலாந்தின் பிராந்திய அணியான செல்சியாவின் முன்கள வீரரும், பெல்ஜியம் அணியின் முன்கள வீரருமான 24 வயதான ஈடின் ஹசார்ட் இங்கிலாந்து தொழில்முறை கால்பந்தாட்ட வீரர்களின் கூட்டமைப்பின் இவ்வருட சிறந்த வீரருக்கான விருதைப்பெற்றுள்ளார். 2010ஆம் ஆண்டுக்கு பின்னர், பிரீமியர் லீக் பட்டம் வென்றுள்ள செல்சியா அணிக்காக, 33 பிரீமியர் லீக் போட்டிகளில் பங்கேற்றுள்ள ஹசார்ட், 13 கோல்களை பெற்றுள்ளதுடன் 8 கோல்கள் பெறுவதற்கு உதவிபுரிந்துள்ளார்.

## 110க்கு 110

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் ஏ அணியினர் முதலில் களத்தடுப்பினைத் தேர்வு செய்தனர். இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணியினர் 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் குசல் பெரேரா 110 பந்துகளில் 110 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பாகிஸ்தான் ஏ அணியுடனான இரண்டு சுற்றுக்களிலும் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசின் தலைமையில் நடாத்தப்பட்ட மேதினப் பேரணியில்

# தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைப் பிரகடனம்



திருகோணமலை மாவட்டத்தில் மலைமுரசு ஆசிரியரின் தலைமையில் நடாத்தப்பட்ட மேதினப் பேரணியில் வெளியிடப்பட்ட பிரகடனமானது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் தேசத்தின் இறைமையை முன்நிறுத்தி இருதேசம் ஒரு நாடு என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்றும் வடக்குகிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பதை ஏற்றுக் கொள்வதனூடாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் பிரகடனம் செய்துள்ளது.

பேரணியின் பிரகடனத்தை வெளியிட்டுப் பேசிய மலைமுரசின் ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் இன்றைய நாளில் இருந்து ஐந்து தொழிற் சங்கங்களும் இணைந்து ஒரேகுடை கீழ் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முயற்சிகளைத் தொடரப்போவதாகவும் தெரிவித்தார்.

இப் பேரணியில் 27 17

## சுவிஸ்-திருகோணமலை ஒன்றியம் உதயம்




புலம்பெயர்ந்து சுவிற்ஸர்லாந்தில் வாழும் திருக்கோணமலை மாவட்டத்தைப் பூர்வீக-மாகக் கொண்டவர்களை ஒன்றிணைக்கும் முகமாக கடந்த 25.04.2015 சனிக்கிழமை மாலை சூரிச் எனும் முகவரியில் ஒன்று கூடல் ஒன்ற நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் சுவிஸ் திருகோணமலை ஒன்றியம் என்னும் பெயரில் அமையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது இந்நிகழ்வில் சுவிற்ஸர்லாந்தின் பல மாநிலங்களிலிருந்தும் பெரும் தொகையிலான திருக்கோணமலை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் வருகை தந்து கலந்து 17

## ஆணைக்குழுவின் பிரதிநிதி தூக்கம்

காணாமல் ஆக்கப்-பட்டவர்களின் பிரதி-நிதிகளைச் சந்தித்து உரையாடிய காணமல் போனவர்களைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பெண் பிரதிநிதி உரையாடிய பொழுதே தூங்கியது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆணைக்குழுவின் குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றிய மேற்படி கலந்துரையாடலுக்கு வருமாறு 17



## "மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி" த.தே.கூ அறிவிப்பு

மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்கின்ற இலக்கிலே தான் எங்களுடைய தமிழ் தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக சென்று கொண்டிருக்கின்றது என கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த 31ம் திகதி நடைபெற்ற விழாவொன்றிலேயே சர்ச்சைக்குரிய இக்கருத்துக்கள்ள அவர் வெளியிட்டார்.

நாங்கள் செய்வது சரணாகதி அரசியல் அல்ல நாங்கள் செய்வது தான் உண்மையிலே இணக்க அரசியல் அவர்கள் தங்களை பேரினவாதத்தோடு கதைத்துக் கொண்டு அரசியல் செய்தார்கள் நாங்கள் எங்களுடைய 17



## தேர்தலில் களமிறங்கும் ஈரோஸ்

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னனி (ஈரோஸ்) பங்கு கொள்ளும். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மாத்திரமல்லாது மலையகம் வரை ஈரோஸ் இயக்கம் தேர்தலில் பங்கு கொள்ளவுள்ளதாக அக் கட்சியின் செயலாளர் நாயகம் இரா.பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் ஈழவர் ஜனநாயக முன்னனியின் அலுவலகம் ஒன்றினை கடந்த 29ம் திகதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் எந்த தேர்தல் என்றாலும் ஈரோஸ் பங்கு கொள்ளும். 17

## அட்டை பிடித்தவர் கடலில் மரணம்

திருகோணமலையின் துறைமுகக் கடற் பரப்பில் அட்டை பிடித்துக்கொண்டிருந்த ஒருவர் மரணமாகியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (29) அதிகாலை நான்கு மணிக்கு அட்டை பிடிக்கக் கடலுக்குச் சென்ற மூவரிலேயே காந்தன் என அழைக்கப்படும் ஏ.இக்னேசியஸ் (வயது 37) மரணமடைந்துள்ளார்.

கடலுக்கு மூவர் சென்றிருந்தாலும் இவர் மட்டுமே கடலுக்கு அடியில் சென்ற அட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

இவர்கள் கடற்படைப் பிரதேசத்தில் கடலட்டையைப் பிடித்துக்கொண்டிருந்து போது அங்கு வந்த கடற்படையினர் அப்பிரதேசம் தடுக்கப்பட்ட பிரதேசமாக இருப்பதால் அங்குகிருந்து அகலுமாறு பணித்துள்ளனர்.

எனினும் அவ்வாறு செய்யத் தாமதமாகியதால் மீண்டும் கடற்படையினர் திரும்பி வந்த போது கடலுக்குட் சென்றவர் வரத் தாமதமாகியதை அடுத்து தேடுதல் நடத்தத் தொடங்கியதை அடுத்தே இவர் காணாமற் போயிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

கடற்படை மற்றும் சுழியோடிகள் 17

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

### மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்

மணமகள் தேவை
பெயர்: மாணிக்கராசா இயேசுராஜன்
வயது: 34
உயரம்: 5' 3"
தொடர்பு எண்: 0262222632 - 0776779631

மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 02.05.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org